1673

# பாலர் கல்வி

ஜனவரி — 1944

தொகுதி-8 பகுதி-10

JL
T15m211,N37BK.
N448.10-12
145698.

245

தொகுதி 8] [பகுதி 10

245

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

1673

15 FEB 1944
MADRAS

சுபானு ௵ தை மீ

JANUARY 1944

பிரசுர கர்த்தர்கள்:

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை:
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

## பொருளடக்கம்


பக்கம்

1. செகண்டரி பாடசாலைகளில் பூ—சாஸ்திரம் கற்பித்தல் .... 457
T. P. வெங்கடாசாரி, M.A., L.T.,

2. ஆரம்ப பாடசாலைகளில் இயற்கைப் பாடம் .... 460
—M. K. சிவராமன்

3. கணிதம்—தேர்ச்சிக் குறைவின் காரணம் .... .... 465
—S. ராமஸ்வாமி அய்யங்கார்

4. செய்தித் திரட்டு .... .... .... 468

5. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 473


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினல் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1944 ஜனவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 27, 31.
தஞ்சாவூர் — Tan. 83, 94.
திருச்சி — Tri. 7.
ராமநாதபுரம் — Rd. 62.
மதுரை — Md. 42, 44.
திருநெல்வேலி — Tin. 34.
கோயமுத்தூர் — Co. 26, 56.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

MADRAS


# பாலர் கல்வி

தொகுதி 8 | 1944 ௵ ஜனவரி ௴ ஸுபாநு ௵ தை ௴ | பகுதி 10


## செகண்டரி பாடசாலைகளில் பூ—சாஸ்திரம் கற்பித்தல்

T. P. வெங்கடாசாரி, M.A., L.T., Dip-stat., P. S. ஹைஸ்கூல், மைலை.

### 1. நோக்கமும் வரையும்

பூ—சாஸ்திரம் மிகப் பரந்ததோர் சாஸ்திரம். இதன் எப்பாகம், எத்திட்டத்தில் எம்முறையில் செகண்டரி பாடசாலை வகுப்புகளில் கற்பிக்கவேண்டும் என்பதைப்பற்றி இவ் வியாசத்திலும், தொடர்ந்துவரும் பல வியாசங்களிலும் கவனிப்போம். இவைகளை நன்கறிந்து கையாள, பூ—சாஸ்திரம் கற்பிப்பதன் நோக்கம் யாது என்பதையும், அவ்வறிவின் பயன் யாது என்பதையும் முதலில் தெரிந்து கொள்ளல் அவசியமாகிறது.

நம் நாட்டில் செகண்டரி கல்வி திட்டத்தின் நோக்கம் யாது? அத் திட்டத்தில் பூ—சாஸ்திரத்திற்கு இடம் உண்டா?

செகண்டரி கல்வி திட்டத்தின் நோக்கங்களுள் முக்கியமானவை;

(1) சிறுவர் சிறுமிகளை அவ்வவர் சுற்றுப்புறத்தின் அமைப்புக்கு இயைந்தவாறு தம் வாழ்க்கையை நடத்தச் செய்தலும்;

(2) அவர்களை தம் ஓய்வு நேரத்தை உபயோகமாகக் கடத்தச் செய்தலும்;

(3) அவர்களைத் தாம் ஒவ்வொருவரும் உலக உரிமைக் குடி எனக்கருதும் தன்மையைப் பெறச் செய்தலும் ஆகும்.

செகண்டரி பள்ளிக்கூட பாட வகைகளுள், மேற்கூறிய நோக்கங்களை விசேஷமாக அளிக்கக்கூடியது பூ—சாஸ்திரமாகும். இச் சாஸ்

745698



திரத்தைக் கற்பித்தலின் நோக்கங்களும் அவைகளே யாகும். எனவே செகண்டரி கல்வி திட்டத்தில் பாஷைக்கடுத்தபடி முதல் இடம் பூ—சாஸ்திரத்திற் குறியதாகும்.

பூ—சாஸ்திரம் உலகத்தின்கண் பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் மக்கள் அவ்வவர் சுற்றுப்புறத்திற்கு இயைந்தவாறு வாழும் வாழ்க்கையின் சரித்திரமாகும். பூ—சாஸ்திர பாடங்களில் சிறுவர் சிறுமிகள் தம் சுற்றுப்புறத்தின் அமைப்பையும், உலகத்தின் பல பிரதேசங்களின் அமைப்பையும் அறிகின்றனர். ஆங்காங்கு மனிதவாழ்க்கை எவ்வாறு வேறுபட்டு அமைந்துள்ளது என்பதையும் தெரிந்துகொள்கின்றனர். பலவாகத் தோற்றும் தோற்ற வேறுபாட்டினுள் உறையும் இசைந்த ஒற்றுமையையும் பூ—சாஸ்திரம் கற்பிக்கின்றது. ஒரே தன்மையுடையதான தோற்றம் ஒற்றுமையாகாது.

தற்கால உலக அமைப்பில், உலகத்தின் பல பிரதேசங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உடையனவாகவும், சார்புடையனவாகவும் உள. அவை தனித்து நில்லா. உலகத்தின் எப்பாகத்தில் எம்மாற்றம் ஏற்படினும், மற்ற பாகங்களையும் அது பற்றும். எனவே உலகத்தில் உள்ள எல்லா நாட்டினரும் தனித்து வாழ்வது இயலாது. அவர்கள் அத்தன்மையை விட்டு, ஒவ்வொரு நாட்டினரும் உலகத்தின் பன்னாட்டு கூட்டில் தாம் ஒருவர் என்னும் உண்மையை அறிய ஏற்படுகிறது. பூ—சாஸ்திரம் இதை விளக்கிக் காட்டுகிறது. இதன் பயனாக உலகத்தின்கண் வாழும் ஒவ்வொருவரும், தாம் இந்நாட்டின் உரிமைக்குடி எனக் கொள்வதற்குமுன், தாம் உலக உரிமைக்குடி எனக் கொள்ளவேண்டி ஏற்படுகிறது. பூ—சாஸ்திரம் கற்பிக்கவேண்டிய முறையில் கற்பிப்பின் உலக மக்களிடை சமாதானமும், ஒருவருக்கொருவர் நம்பிக்கையும் நல்லெண்ணமும் நிலவும்.

பூ—சாஸ்திரம் தன்னுள் பல்வேறு கலைகளின் சாராம்சத்தையும் பொருந்தியது. இது எல்லாக் கலைகளின் கூட்டுமையமாகும். இதைப் போதிப்பதால், எல்லாக் கலைகளும் உலகத்தின்கண் மனிதன் தன் வாழ்க்கையை நடத்த எவ்விதம் பயன்படுகின்றன என்பதை விளக்கிக் காட்டக்கூடும். பயனுற்ற முடிவே முறையின் நிரூபணமாதலால் செகண்டரி கல்வி திட்டத்தில் பூ—சாஸ்திரம் முதலிடம் பெறக்கூடியதாக இருக்கிறது.

மேற்கூறிய நோக்கத்துடன் கற்பிக்கப்படும் பூ—சாஸ்திர பாட அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும்? செகண்டரி பாடசாலைகளில் கீழ் வகுப்புகளில் பிள்ளைகளின் சுற்றுப்புறத்தை பற்றிய பாடங்களும், அவர்களின் இருப்பிட பிரதேசம், இந்தியா பற்றிய பாடங்களும் கற்பித்தல் அவசியம். தவிர இவ் வகுப்புகளில் உலகத்தின் எல்லா கண்டங்களைப்பற்றியும் கற்பித்தல்வேண்டும். இந்த வகுப்புகளில் பூ—சாஸ்திர பாடங்கள், பொதுப்படையாக, மனித வாழ்க்கை இயற்கை அமைப்புக்கும் பூத நிலைக்கும் ஏற்ப அமைந்துள்ள வகையை விரித்த முறையில் கற்பித்தல் முறையாகும்.



மேல் வகுப்புகளில், முதல் வருஷத்தில் பூ—சாஸ்திரம் கற்பிக்க அவசியமான துணைக் கருவிபற்றிய பாடங்களை ஸ்தல பூகோளம் மூலமும், அவ்வவர் வாழும் இராஜதானிபற்றிய பூ—சாஸ்திரமும் கற்பித்தல் முறையாகும். இரண்டாம் வருஷத்தில் காரண பூகோள முறையில் உலகத்தின் பெரும் இயற்கைப் பிரதேசங்களைப் பற்றி கற்பித்தல் முறையாகும். (உதாரணம்: உலகத்தின் உஷ்ண மண்டலக் காட்டுப் பிரதேசங்கள்; உலகத்தின் மத்தியதரைக் கடல் பூதநிலைப் பிரதேசங்கள்; உலகத்தின் நிலக்கரிக்கள பிரிவுகள்; etc.,) மூன்றும் வருஷத்தில் இந்தியாவைப்பற்றிய பூ—சாஸ்திரம் பூரணமான வகையில் கற்பித்தல் பயனுடையதாகும். இவ் வருஷத்தில் இந்தியாவின் இயற்கை அமைப்பு, பூதநிலை, பொருளாதார நிலை, வியாபார நிலை, மற்றும் பல்வேறு அம்சங்களையும் கற்பித்தல் முறையாகும்.

அடுத்தப் பிரதியில் செகண்டரி பாடசாலைகளில் கற்பிக்கப் பெறவேண்டிய பூ—சாஸ்திர பாட திட்டம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றி விவரமாக கவனிப்போம்.


## நமது தாய் நாடு.

ஆலயத்தைச் சுற்றி அங்கப் பிரதக்ஷணம் செய்யும் பக்தர் போன்று ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் பாரதத் தாயின் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அலைந்து திரிந்தார். அன்னையின் உடலிலும் உறுப்புக்களிலும் எங்கெங்கு என்ன கோளாறு உள்ளது என்று கண்டு கண்ணீர் உகுத்தார். பின்னர் அன்னையின் சோர்வை நீக்கி அவள் வலிமைபெற்று எழும்படி ஆசீர்வதித்தார். இந்த ஆசி மணிமொழிகள் நிறைந்தது இந்நூல்.

இரண்டாம் பதிப்பு. அழகிய வடிவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0

★

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர் :: சென்னை

# ஆரம்ப பாடசாலைகளில் இயற்கைப் பாடம்

M. K. சிவராமன், தலைமை ஆசிரியர்,
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பாபிரெட்டிப்பட்டி

இயற்கையில் நம்மைச் சூழ்ந்துள்ள எல்லா விஷயங்களைப்பற்றி அவை அவை சுபாவமாக அமைந்திருக்கக்கூடிய இடங்களிலேயே நம்முடைய சுய முயற்சியாலேயே தெரிந்துகொள்வது இயற்கைப்பாடமாகும்.

## இயற்கைப்பாட அவசியமும் நோக்கமும்

இயற்கைப் பாடம் மாணவர்களின் உற்றுநோக்கும் சக்தி, நுட்பமாய் ஊகித்தறியும் தன்மை முதலியவற்றை வளர்க்கிறது. இயற்கையில் காணப்படும்படியான ஒழுங்கும் அழகும் நமக்கு மிகுந்த இன்பத்தைத் தருவதாக இருக்கிறது. இயற்கையில் காணப்படும் வஸ்துக்கள், விஷயங்கள் இவற்றைப்பற்றிய அறிவை நம் சுய முயற்சியாலேயே அடைவதுடன் நம் தினசரி வாழ்க்கையை ஆரோக்கியமாகவும் சந்தோஷத்துடனும் மேன்மையாகவும் நடத்தும் திறமையை அடைகின்றோம். பண்டைக்கால மனிதர்கள் இயற்கையினூடே வளர்ந்து இயற்கை அழகை அனுபவித்தும் இயற்கையை நன்கு அறிந்தும் இருந்தார்கள்.

இயற்கைப் பாடத்தின் முக்கிய நோக்கம் பயனற்ற விஷயங்களை தெரிந்துகொள்வது என்பது இல்லாமல் பிள்ளைகளை தங்களைச் சுற்றிலுமுள்ள பல விஷயங்களைத் தாமே நேரில் கண்டு அவற்றைப்பற்றி நன்கு ஆலோசனை செய்து அறிந்துகொள்ளும்படி செய்வதேயாகும். இதில் குழந்தைகளுக்குப் பிரியமில்லாத வஸ்துக்களைப்பற்றிய படிப்பே சிறிதளவும் இல்லை. அவர்களுடைய ஆச்சரியம், ஆவல், விளையாட்டு முதலியவற்றிற்குத் தகுந்த அளவு இடம் அளித்தும் அவர்கள் மனதைக் கவரும்படியான செடிகள், பூச்சிகள், மரங்கள், பூக்கள் போன்ற இயற்கைப் பொருள்களைப் பற்றியே அவர்கள் படிக்கின்றார்கள். இம்மாதிரி செய்வதால் மாணவன் தன் சுய முயற்சியாலேயே எல்லா விஷயங்களையும் அறிகிறான்.

## இயற்கை பாடமும், சுற்றுப்புறமும்

இப்பாடத்தில் பொருள்களை அவை இயற்கையாக இருக்குமிடங்களிலேயே சென்று அறியவேண்டியிருத்தலால் சுற்றுப்புறம் மிகவும் அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு பாடசாலை சுற்றுப்புறமும் வித்தியாசப்பட்டே இருக்கும். கிராம பாடசாலைகளின் சுற்றுப்புறமும் நகர பாடசாலைகளின் சுற்றுப்புறமும் பலவகையில் வேறுபடுவதோடு, கிராம பாடசாலைகளிலும் இடத்திற்கு இடம் வேறுபட்டே இருக்கும். ஆதலால் இடத்திற்குத் தகுந்தவாறும்; சுற்றுப்புறத்திற்குத் தக்கவாறும் போதனைமுறையை மாற்றிக்கொள்ளல்வேண்டும். சாதாரணமாக கிராம



பாடசாலைகளில் சுற்றுப்புறத்திற்கு யாதொரு குறைவும் இராது. ஆதலால் சாதாரணமாக நாம் பார்க்கமுடிகின்றவைகளையும் காணக்கூடியவைகளையும் மாணவர்களுக்கு அழைத்துச் சென்று நேரில் காட்டவேண்டுமேயன்றி அவைகளை ஒருபோதும் வகுப்பறைக்குக் கொண்டுவந்து காட்டுதல் கூடாது. சௌகர்யமாக இருக்கும் இடங்களில் பரிசோதனைக்காக சில பிராணிகளை (Pet animals) வளர்க்கலாம். இம்மாதிரி செய்வதால் மாணவர்களுக்கு அறிவு விசாலப்படுவதுடன். அவற்றைப் பற்றிய விஷயங்களை நன்கு அறிந்துகொள்ளுகின்றனர். கற்பிக்கப்படவேண்டிய விஷயங்கள் அந்தந்த பிரதேசத்திற்குத் தக்கவாறும், அவ்வப்போதுள்ள பருவத்திற்குத் தக்கவாறும் இருத்தல்வேண்டும். அவ்வக் காலங்களில் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்ட பாடம் நடத்துதல்வேண்டும்.

இவ்விதம் அந்தந்த பாடசாலையின் சுற்றுப்புறத்திற்கு ஏற்றவாறு இயற்கைப் பாடத்தை போதிப்பதனால் அப்பள்ளிக்கூட மாணவர்கள் சாதாரணமாக தினசரி காணக்கூடிய பொருள்களின் உபயோகத்தை நன்கு தெரிந்துகொள்ளுகிறார்கள். இவ்வறிவு அவர்கள் பிற்கால வாழ்க்கைக்கு ஓர் அடிப்படையாக இருக்கிறது.

## இயற்கைப் பாடமும், வயதும்

இயற்கைப் பாடம் 5-வயது முதல் 10-வயது வரையில் போதிக்க வேண்டிய ஒரு பாடமாகும். இவ்வயதிற்குமேல் இப்பயிற்சியானது விஞ்ஞான சாஸ்திரத்திற்கு ஓர் அடிப்படையாக இருக்குமாறு இப்பாடம் போதிக்கப்படல்வேண்டும்.

5-வயதுமுதல் 8-வயது வரையில் குழந்தைகளுக்கு ஓரளவு உற்றுநோக்கும் சக்தி இருக்கிறதே தவிர ஆலோசனை செய்து அறியும் சக்தி இல்லை. இவ்வுற்றுநோக்கும் சக்தியும் அவர்கள் மனதிற்கு பிடித்தமான வஸ்துக்களின்மேல் ஏற்படுகிறது. இந்நிலையில் அவர்கள் எழுதவாவது படிக்கவாவது போதிய அறிவை அடையவில்லை. ஆதலால் இந்நிலையில் அவர்கள் மனதைக் கவரக்கூடியதும் அவர்கள் தினசரியும் அடிக்கடியும் பார்த்துப் பழக்கமுள்ளதுமான அழகிய வஸ்துக்களையும், உபயோகமுள்ள காய், கனி முதலியவற்றைப்பற்றியும் பயன்தரக்கூடிய மரங்கள், பிராணிகள் முதலியவற்றைப் பற்றிய சம்பாஷணைகள் நடத்தி அவற்றின் மூலம் அவர்களுக்கு விஷயங்களைக் கற்பித்தல்வேண்டும். இந்நிலையில் இயற்கைப் பாடத்தின் முக்கிய நோக்கம் அவர்களுடைய உற்றுநோக்கும் சக்தியை அபிவிருத்தி செய்வதுடன் ஆலோசனை செய்யவும் கற்பித்தல் நலம்.

இரண்டாவதாக மேல்நிலையில் அதாவது 4, 5-வகுப்புகளில் மாணவர்கள் உற்று நோக்கும் சக்தியில் பூர்ணமான தேர்ச்சி பெற்று ஆலோசனை செய்து விஷயங்களை அறிந்துகொள்ளுவதிலும் சிறிது பயிற்சி

அடைந்திருப்பார்கள். இந்நிலையில் பிராணிகள், மிருகங்கள், பக்ஷிகள் முதலியவற்றிற்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் அவற்றின் உருப்புகள் முதலியவற்றைப்பற்றிய அறிவைத் தருதல்வேண்டும். ஒவ்வொன்றிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிவதால் ஆலோசனைசக்தி அபிவிருத்தி யடைகிறது. ஆகாயம், நிலம், காற்று இவற்றின் இயற்கைத் தோற்றங்களையும் இவற்றால் நாம் அடையும் நலன்களைப்பற்றிய விஷயங்களையும் போதித்தல் அவசியம். பாடம் போதிக்கும் சமயத்தில் மாணவர்களைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள செடி கொடிகளைப்பற்றி அறியச் செய்தலும், ஒவ்வொருவரும் ஒரு குறிப்புப் புத்தகம் வைத்துக்கொள்ளும்படி செய்து அவற்றில் இயற்கைப்பாட விஷயங்களைக் குறித்து வைக்கும்படிச் செய்யலாம். இந்நிலையில் மாணவர்களை வஸ்துக்களை உற்று நோக்கச்செய்து அவற்றின்மூலம் ஆராய்ச்சி செய்யும்படியும் காரண காரியங்களையும் நன்றாக அறிந்துகொள்ளும்படியும் செய்வதே முக்கியமான நோக்கமாகும்.

## இயற்கைப் பாடம் தொடங்கும் விதம்

இயற்கைப் பாடத்தை கற்பிக்கத் தொடங்குவதற்கு முன்பு குழந்தைகளின் சுபாவ குணங்கள் என்ன என்பதை நாம் யோசித்தல் அவசியம். குழந்தைக்கு தன் சுற்றுப்புறத்தில் காணும் ஒவ்வொரு வஸ்துவும் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. ஆதலால் அவர்கள் அதைத் தொட்டுப் பார்க்கவும் அவற்றை அடையவும் ஆசைகொள்ளுகிறார்கள். இம்மாதிரி அவர்கள் வஸ்துக்களைப் பற்றிய விஷயங்களை அறிய விரும்புவதால் அவர்கள் சலியாமல் நம்மை கேள்வி கேட்கிறார்கள். ஏனெனில் எல்லா விஷயங்களையும் அவர்கள் கற்க ஆவல்கொள்வது தான் இதற்குக் காரணம். விளையாட்டின் மூலமாய் அவர்கள் கல்வி கற்றுக்கொள்வது சிறந்த முறை. ஆதலால் இயற்கை அறிவை நன்கு அடைகிறார்கள். கவர்ச்சியுள்ள பொருள்களை அவர்களுக்குக் காட்டி அவர்கள் அவைகளை உற்று நோக்கும்படி செய்து விஷயங்களைக் கற்பித்தல் வேண்டும்.

குழந்தகளின் மனோபாவம் அவர்கள் விரும்பும் வஸ்துக்கள் இவைகளைக் கொண்டே பாடம் நடத்தப்படுகிறது. ஆதலால் இயற்கைப் பாடத்தை குழந்தைகள் விளையாட்டாயும் விருப்பமாகவும் உற்று நோக்கும் வஸ்துக்களைக் கொண்டும் போதிக்கவேண்டும். இயற்கைப் பாடம் கற்பிக்கும் திட்டம் குழந்தையின் சுபாவத்திற்கும் சுற்றுப்புறத்தின் வசதிக்கும் ஏற்றவாறு அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். குழந்தைகளின் தினசரி வாழ்க்கையில் காணக்கூடிய வஸ்துக்கள் பிராணிகள் முதலியனவும் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கைக்கு பயன் படக்கூடிய விஷயங்களையும் அறிந்து கொள்ளும்படி செய்தல் நலம். சுற்றுப்புறத்தை ஆராய்வதின் மூலமும் உல்லாசப் பிரயாணங்கள் நடத்துவதின் மூலமும் மாணவர்களின் அறிவைப் பெருக்குதல் வேண்டும் அவர்கள் பார்த்த செடி கொடிகள், மிருகங்கள், இயற்கைக் காக்ஷிகள்



இவற்றின் படங்களை வரைவதில் பழக்கம் அளிக்கலாம். பார்த்த இடங்கள் உல்லாசப் பிரயாணங்கள் இவற்றைப்பற்றிய வியாசம் எழுதும் படியும் மாணவர்களை ஊக்குதல் வேண்டும்.

## இயற்கைப் பாடமும் குழந்தையும்

பொதுவாக நாம் இயற்கைப் பாடம் போதிப்பதில் அடியிற் கண்ட சங்கதிகளை முதலில் கவனித்துக்கொண்ட பிறகே அதை போதித்தல் வேண்டும். பள்ளிக்கூடம் இருக்கும் பிரதேசம் பாடம் நடத்தப்படும் காலம் மாணவர்களுடைய வயது அவர்கள் வாசிக்கும் வகுப்பு இவற்றிற்கு ஏற்றவாறும் அவர்கள் மனோசக்திக்கு ஏற்றவாறும் பாடதிட்டம் தயாரிப்பதுடன் அவற்றை நடத்தும் விதங்களையும் முன்னரே திட்டம் செய்துகொள்ளுதல் வேண்டும். இத்திட்டமானது மாணவர்களின் ஆவலை எழுப்பக்கூடிய விஷயங்கள் நிறைந்தனவாயும் படிப்படியாகவும் கோர்வையாகவும் இருத்தல் வேண்டும். ஆரம்ப நிலையில் காலம் சீதோஷ்ண ஸ்திதி முதலியவற்றைப்பற்றிய பல விஷயங்களையும் இவற்றிற்குச் சம்பந்தப்பட்டே தாவர வளர்ச்சியானது ஏற்படுகிறது என்றும் தாவர வளர்ச்சிக்கு ஏற்றவாறு பிராணிகளின் வாழ்க்கையும் அமைகின்றது என்றும் மாணவர்களுக்கு கற்பித்தல்வேண்டும்.

## இயற்கைப் பாட சாதனங்கள்

இயற்கைப் பாடசாதனங்களுள் மிகவும் முக்கியமானது தோட்டமாகும். ஒரு நல்ல தோட்டமில்லாவிடில் இயற்கைப் பாடம் போதித்தல் இயலாது. தோட்டம் இல்லாமலும், தோட்டத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லாமலும் கற்பிக்கும் பாடத்தை இயற்கைப் பாடம் என்று சொல்லமுடியாது. ஆகையால் இயற்கைப் பாட சாதனங்களுள் மிகவும் முக்கியமானது தோட்டமாகும். அடுத்தபடியாக தோட்டச் சாமான்களும் பயிற்சியுமாகும். பயிற்சியில் மாணவர்கள் ஒவ்வொன்றையும் தங்கள் அனுபவத்தின் மூலமாக திறம்பட அறிகிறார்கள். அம்மாதிரி பயிற்சியடைய தோட்டச் சாமான்கள் மிக அவசியம். தோட்டத்திற்கு வேண்டிய சாமான்கள் இல்லாவிடில் பயிற்சி வேலை தர இயலாது. ஆதலால் தோட்டச் சாமான்களும் பயிற்சியும் இன்றியமையாதனவாக இருக்கின்றன.

பள்ளிக்கூடத்தில் ஒரு நல்ல காட்சி சாலை இருத்தல் அவசியம். அதில் தோட்டத்தில் காணக்கூடியனவும், நல்ல இலைகளின் சேகரிப்பும் இன்னும் பல வஸ்துக்களையும் வைத்திருத்தல் வேண்டும். இறந்த பிராணிகள், பூச்சிகள், புழுக்கள் இவைகளை சுத்தம் செய்து அழகிய கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருத்தல் வேண்டும். உயிருடன் வைத்திருக்க முடியும்படியான ஜந்துக்களை வைத்திருக்கத் தக்க வசதிகள் பெற்றிருத்தல் வேண்டும். இம்மாதிரி வைத்திருப்பதால் மாணவர்களை இப்பாடம் நடக்கும் காலங்களில் நேரே கொண்டுவந்து காட்டவும்

அவர்கள் நேரே பார்ப்பதன் மூலம் சிறந்த அறிவை அடைவதுடன் பாடம் திறம்பட நடைபெறும். ஒவ்வொரு பாடசாலையிலும் சில செல்லப் பிராணிகளை (Pet animals) வளர்த்தல் வேண்டும். இவற்றின் மூலம் மாணவர்களுக்கும் சிநேகபாவம் உண்டாகிறது.

செடிகள் எடுத்துக்கொண்டுவர நல்ல ஒரு பெட்டி அல்லதுபை இருத்தல்வேண்டும். இவைகள் இருப்பதால் செடிகள் கெடாமலும் நன்ருகவும் எடுத்துவர சௌகரியமாக இருக்கும். சித்திரங்கள் எழுதப் போதுமான சாதனங்களும் பார்த்த வஸ்துக்களின் மாதிரிகளை களிமண்ணுல் செய்ய சௌகர்யமாக இடங்கள் சாதனங்கள் இருத்தல் வேண்டும்.

சாதாரணமான பூச்சிகளை கண்ணுடியின் மூலம் பார்த்து பரிசோதனை செய்ய பூதக்கண்ணுடிகள் (Magnifying Glass) இருப்பதுடன் இயற்கை காக்ஷிகளை படமெடுத்துவர புகைப்படப் பெட்டி (Camera) ஒன்றும் வைத்திருத்தல் வேண்டும்.

பொதுவாக ஆராயுமிடத்து இயற்கைப் பாடம் போதிக்க இயற்கை காட்சிகள் இயற்கை பொருள்கள் இவைகளே அவசியமாக இருப்பதால் இயற்கை காட்சிகளுள்ள இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று போதிக்கப்படும் பாடத்தையே இயற்கைப் பாடம் என்று சொல்லலாம். ஆதலால் கூடியவரையில் வகுப்புக்கு வெளிப் புறத்திலேயே இயற்கைப் பாடத்தை போதித்தல் நலம்.

## பொங்கல் வாழ்த்து

T. M. Pitchia, *"Jothi Vilas"* *Tachanallur, Tinnevelly.*

பொங்குக தைமதிப் புதுப்பால் பொங்குக!
பொங்குக பொங்கல் பொன்னுலகு மகிழவே!!
வையம் உய்யநல் வானம் வழங்கிடத்
தையில் யாண்டும் தருமம் தழைத்திடச்
செய்யும் பொங்கல் சிறந்து பொங்குக
முழங்குக மங்களம் மணிமான் மகிழ்ச்சியில்
வழங்குக சந்தனம் வெற்றிலை பாக்குடன்
விளங்குக வாழ்த்தும் விருந்தும் விருப்புடன்
தங்குக அறநெறி தமிழகத் தரணியில்
தங்குக திருவருள் தமிழகம் எங்குமே.
எங்கும் மங்களம் என்றும் முழங்குக!
என்றும் மங்களம் எங்கும் முழங்குக!!

15 FEB 1944 MADRAS

## கணிதம்—தேர்ச்சிக் குறைவின் காரணம்

S. ராமஸ்வாமி அய்யங்கார், தலைமை ஆசிரியர்
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, கன்னங்குரிச்சி (சேலம் தாலுக்கா)

கணித அறிவு மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததொன்ரும். வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் கணித அறிவு, பெரிதும் பயன்படுகிறது. 'ஆற்றில் கொட்டினுலும் அளந்து கொட்டு' என்னும் பழமொழி எதிலும் ஒரு கணக்கு வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. கணக்கென்பது இங்கு அளவு என்ற பொருள் தரும். அளவு கணிதத்தின் பாற்படும். எனவே வாழ்க்கையில் மனிதருக்கமைய வேண்டிய சிறந்த பொருள்களில் கணித அறிவும் ஒன்று என்பது தெளிவு.

இத்தகைய கணித அறிவின் தேர்ச்சி, ஆரம்பப் பாடசாலைகளில் குறைந்து காணப்படுகின்றது. இத்தகைய நிலைமைக்குப் பல காரணங்கள் உண்டு. ஆசிரியரின் நிதானக் குறைவு ஒரு காரணமாகும். 'அவசரக் கோலம் அள்ளித் தெளி' என்பதுபோல அவசர அவசரமாக கணித போதனையை நடத்துவது, கணித அறிவிற்குச் சரியான அஸ்திவாரம் போட முடியாமற் செய்வதுடன், பலமற்ற அஸ்திவாரத்தின்மேல் போடப்படும் கட்டிடத்தைப் போல் பிள்ளைகளின் பிற்கால வாழ்விற்குப் பயன்படாமற் போம்படி செய்வதும் ஆம். எனவே அவசரப்படாமல், நிதானமாகப் போதனையை நடத்தவேண்டும்.

குழந்தைகளின் உள்ளம், மனோபாவம், தன்மை ஆகியவற்றை நன்கு உணராமல் பாடத்தைப் போதிப்பது தேர்ச்சிக் குறைவிற்கு மற்ரேர் காரணமாம். இவைகளை ஆராய்ந்து அறிந்து போதிப்பின் தேர்ச்சிக் குறைவை ஒழிக்க சாத்தியமாகும்.

ஒன்றன்பின் ஒன்ருகவும், படிப்படியாகவும் போதிக்க யாதொன்றும் செய்யாமல், நம் மனத்திற் குகந்தவாறு—தோன்றியவாறு போதிப்பதும் தேர்ச்சிக் குறைவிற்குக் காரணமாம். போதிக்கவேண்டியவைகளை வரிசைப்படுத்தி சுலபமானவற்றிலிருந்து கடினமானவற்றிற்குச் செல்லும்படியான திட்டம் வகுத்து, அத்திட்டத்தின்படி அவசரப்படாமலும், பிள்ளைகளின் மனோபாவத்திற்கும் தன்மைக்குகந்தவாறும் போதித்துவரின் தேர்ச்சிக் குறைவை நிவர்த்தி செய்யலாம்.

பிள்ளைகளின் தனித்தனித் தேர்ச்சியைப் பரிசோதித்துப் பாராமல் போதிப்பது தேர்ச்சிக் குறைவின் காரணங்களுள் முக்கியமானதாம். வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் ஒரேவிதமான அறிவு படைத்தவர்களென்ரே, ஒரே தன்மை, சக்தி கொண்டவர்களென்ரே எண்ணி, எல்லோருக்கும் ஒரே மாதிரி திட்டம் வகுத்து போதிப்பது பொருந்தாது. அவ்வப்பொழுது பிள்ளைகளின் தேர்ச்சியை நேரிய முறையில் பரிசோதித்தறிந்து, அதற்கிணங்க வகுப்பை இருபிரிவாகவோ

மூன்று பிரிவாகவோ கொண்டு பாடத்தை நடத்தித் தேர்ச்சிக் குறைவைப் போக்கவேண்டும். இது ஆரம்பத்தில் சிறிது கடினமாயிருக்கலாம். நாளடைவில் வகுப்பில் இரண்டு விதமான பிள்ளைகளே இருக்கக்காணலாம்; சாதாரண அறிவுள்ளவர்கள்; சாதாரண அறிவிற்கும் மேம்பட்டவர்கள். இவர்களுக்கியைய பாடத்தைப் பிரித்து போதிப்பதுகடினமன்று.

மனக்கணக்கு போதிய அளவு கொடாமையும் ஓர் காரணமாம். கணித பாடத்தில் இதுவும் ஓர் முக்ய அம்சமாகும். போதிய அளவு மனக்கணக்குப் பயிற்சியின்மை வாழ்க்கையிலேயே ஓர் பெருங்குறையை ஏற்படுத்தி விடுகின்றது. சிலேட்டுக் கணக்கைப் புரிய வைப்பது மனக்கணக்குத் தான். இதில் குறைவு ஏற்படில் மற்றொன்றில் நிறைவு காண முடியுமா? எனவே மனக் கணக்கு கணித பாடத்தில் முக்கிய இடம் பெறுகிறது. மனக்கணக்கிற்குக் கணித நேரத்தில் பெரும் பகுதி கொடுக்கப்பட வேண்டுமென்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

பிள்ளைகளின் சுய முயற்சிக்கு இடந்தராமை தேர்ச்சிக் குறைவிற்கு மற்றுமோர் காரணமாம். ஒரு கணக்கைக் கொடுத்தவுடன் ஆசிரியர் சகஜமாக "இக்கணக்கை எப்படிப் போடவேண்டுந் தெரியுமா" என்று கேட்பதுடன் நில்லாது "இதையும் அதையும் பெருக்கவேண்டும்: அதிலிருந்து இதை கழிக்கவேண்டும்" என்று வழியையும் சொல்லி விடுகிறார். இவ்வாறு செய்வது பிள்ளைகளின் சுய முயற்சியை நசுக்குவதாகும் என்பதை அறிந்து, சுய முயற்சிக்குப் போதிய இடமும், வசதியும் அளிக்கவேண்டும்.

பிள்ளைகளுக்குக் கணக்குக் கொடுத்துவிட்டு, அவைகள் சரியாகப் போடப்பட்டிருக்கின்றனவா? அல்லவா? என்பதைப் பாராமல் விட்டுவிடுவது பிள்ளைகளுக்கு ஊக்கக் குறைவை உண்டாக்க அடிகோலுவதாகும். ஊக்கக் குறைவு தேர்ச்சிக் குறைவின் காரணம் என்பது மிகையாகாது. எனவே இத்தகைய ஊக்கக் குறைவை ஏற்படுத்தாமல் இருப்பது அவசியமாகும்.

கணிதத்தில் பிள்ளைகள் செய்யும் பிழைகளைப் பாராட்டாமல் விட்டுவிடுவது தேர்ச்சிக் குறைவிற்கு இன்னுமோர் காரணமாம். எனவே பிழை காணுமிடங்களைப் பிள்ளைகளுக்குச் சுட்டிக்காட்டி, மறுபடியும் பிழைகள் நேராவண்ணமும், சுத்தமாகவும் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துதல் அவசியமாகும்.

வாழ்க்கையோடியைந்திராத கணக்குகளைக் கொடுத்து, பிள்ளைகளின் உள்ளத்தில் அனாவசியமான கிளர்ச்சியை உண்டாக்கல் பெருந்தவறாகும். இத்தகைய தவறு, தேர்ச்சிக் குறைவின் தூண்டு கோலாக அமையும். ஒரு இட்டலி எட்டணா. ஒரு மோட்டார் வண்டி ஐம்பது ரூபாய். ஒரு பைசாவுக்கு 48 கத்தரிக்காய் என்றெல்லாம் கணக்குக் கொடுப்பது குழந்தைகளின் உள்ளத்தில் பெரும்புயலை உண்டாக்குவதுடன், கவனக் குறைவிற்கும் அஸ்திவாரம் போட்டுவிடும். ஆசிரியர்



அமானுஷ்யத் தன்மையுள்ளவரென்ற எண்ணமும் மாணவரிடையே ஏற்பட ஏதுவாகும். எனவே வாழ்க்கையை ஒட்டிய கணக்குகளைப் பொறுக்கிக் கொடுக்கவேண்டும்.

கணக்குகளைச் சுருக்கமான வழிகளில் செய்யப் பயிற்சி அளிக்கப்படாமையும் தேர்ச்சிக் குறைவிற்குக் காரணமாகும். கடினமான வழியில் கணக்கைச் செய்வதால் மாணவரிடையே சோம்பல் தன்மையும், மனச் சோர்வும் ஏற்பட்டுக் கணிதத்தில் வெறுப்பும் உண்டாகி விடுகின்றது. இத்தகைய நிலைமையை நேரிய வழியில் நீக்கவேண்டும்.

கணக்குகளை வேகமாகச் செய்யும் பழக்கத்தை சிறுகச் சிறுக ஏற்படுத்தாமையும் தேர்ச்சிக் குறைவின் காரணமாகும். இப்பழக்கம் ஏற்பட, வாய்ப்பாடு போன்ற மூலாதாரமான விஷயங்களை மனப்பாடம் செய்யும்படி செய்யவேண்டும். கணக்குப் போடும் வழிகளில் அனாவசியமானவற்றை நீக்கிப் போதிக்கவேண்டும். பின்னங்களில் $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$ இவைகளின் அறிவு பெருகவேண்டும். இவைகளைப் பற்றிய சுலபமான வாய்ப்பாடும் தெரியவேண்டும். இவைகள் ஏற்பட்டுவிட்டால் கணக்கை வேகமாகப் போடும் பழக்கம் ஏற்படும். இப்பழக்கம் உற்சாகத்தை அளிக்கும். உற்சாகம் கணிதத்தில் பிரியத்தை உண்டாக்கும். பிரியம், தேர்ச்சிக் குறைவைத் தடுக்கும். எண்ணிற்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தம் நன்கு விளக்கப்படாமையும் தேர்ச்சிக் குறைவை உண்டாக்க வல்லதாம். எண்ணிற்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிய போதுமான பயிற்சி ஏற்படாவிடில் எண்ணறிவை விருத்தி செய்ய இயலாததாகும். எனவே போதிய அளவு பொருள்களை உபயோகித்து எண்ணிற்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிய போதுமான பயிற்சி யளித்தல் அவசியம்.

விளையாட்டு மூலமாக கணித போதனை நடத்துவது சிறந்தது. எனவே தேவையான எண் விளையாட்டுகளைச் சேகரித்து தயார் செய்து முறைப்படி உபயோகித்துவரின், வேகம், விஷய ஞானம் இவைகளை விருத்திசெய்ய இடமேற்படுவதுடன், பிள்ளைகளின் தேர்ச்சியையும் அறிய வசதி ஏற்படும். விளையாட்டாக இருப்பதினால் பிள்ளைகளும் உற்சாகங் கொள்ளுவர். மனச் சோர்வு, அமைதியின்மை ஆகியவைகளும் இதனால் நீக்கப்படும். மாணவர்களை சந்தை, கடை முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்று, அங்கு நடைபெறும் வியாபார அனுபவங்களை நேரில் காட்டுவது நன்மையளிக்கக்கூடியது. ஆசிரியரின்கீழ் மாணவர்கட்கு இவ்விடங்களில் ஏற்படும் கணிதப் பயிற்சி, அனுபவம் ஆகியவை கணித பாட அபிவிருத்திக்குப் பெரிதும் உதவும்.

மேற்கூறியவற்றை நன்கு ஆராய்ந்து, தேர்ச்சிக் குறைவிற்கான காரணங்களைப் போக்கி, நன்மை தரும் முறைகளைக் கையாண்டு கணிதம் போதிப்பின் பெருத்த மாறுதலைக் காணலாம். கணித ஆசிரியர் இவைகளை மனதிற்கொண்டு கணிதப் பாடம் நடத்துவது நலம்.

# செய்தித் திரட்டு

---

### ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

9—1—44 ல் எட்டாவது பெற்றோர் தினவிழா, ஸ்ரீராமகிருஷ்ண
கூல் மானேஜர் ஸ்ரீ வாசுதேவாசாரியார் தலைமையில் விமரிசையாகக்
கொண்டாடப்பட்டது. அப்பொழுது சிறுவர் சிறுமிகளால் ஓர் கதம்
க் கச்சேரி நடைபெற்றது. தலைவர் பெற்றோர் ஆசிரியர் கூட்டுறவு
ப்பள்ளிக்கூடத்தில் விசேஷித்திருப்பதைப் பாராட்டியும் பள்ளிக்கூட
பிவிருத்தியை விரும்புவதாயும் கூறினர்.

---

### ஆரம்ப ஆசிரியர்சங்கம், பூந்தமல்லி

11—12—43-ல், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வைத்திய
நாதன் தலைமையில் கூடிற்று. அவ்வமயம், தேசீயப்போர் முனை லெக்
சரர் பிலிப்ஸ் அம்மையார் ரத்த தானம் செய்வதைப்பற்றி பிரசங்கித்
தார். அங்கத்தினர்களில் சுமார் 10 பேர் ரத்ததானம் கொடுக்க முன்
வந்தனர். பின்பு ஸ்ரீபெரம்புதூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர் சங்கங்
களின் ஆண்டுவிழாவுக்காகவும், யுத்த நாடகம் நடிக்கவும், சங்கப் பொது
நிதியிலிருந்து ரூ. 35 கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. பிறகு 1944
வருஷ நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

### போர்டு ஆரம்ப பாடசாலை, அய்யப்பன் தாங்கல்

17—12—43-ல் இப்பாடசாலை மாணவர் சங்கம் நிறுவப்பட்டது.
தலைமை ஆசிரியர் ஸ்ரீ தியாகராஜன், மாணவர்களின் ஒற்றுமை, இச்சங்
கத்தின் நோக்கம், வாரம்தோறும் வெள்ளிக்கிழமை பூஜையின் அவசியம்,
இவைகளைப்பற்றி எடுத்துரைத்தார்.

---

### இந்துமதபாடசாலை, வாலாஜாபாத்

17—12—43-ல், லோகல் போர்டு டிப்டி இன்ஸ்பெக்டர் திரு.
லட்சுமணப்பிள்ளையும், காஞ்சி நகராண் கழக ஆணையாளர் திரு. கதிர்
வேல் முதலியாரும் வருகை புரிந்து, பாடசாலையின் பல தொழிற்
சாலையையும் பார்வையிட்டுவிட்டு, மாணவர்களை வாழ்த்திச் சென்றனர்.

---

### எயிடெட் பாடசாலை, ஆயப்பரப்பு

18—12—43-ல், தாராபுரம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ
சற்குணம் தலைமையில் பெற்றோர் சங்கத் திறப்புவிழா நடைபெற்றது.
பாடசாலை மானேஜர் ஸ்ரீ தங்கவிநயகம் வரவேற்பிதழ்படித்துக்



கொடுத்தார். பிறகு பெற்றோர் சங்கத்தின் அவசியமும், பெற்றோர்
களின் கடமையும் என்பதுபற்றி ஸ்ரீ திருமலைசுவாமி பிள்ளையும், ஸ்ரீ
ஷண்முக சுந்தரம்பிள்ளையும் பேசினர்கள். தலைவர் முடிவுரையில் தற்
கால யுத்தமும் நமது கடமையும் என்பது பற்றிப் பேசினர்.

---

### உபாத்திமைச்சங்கம், காரமடை

21—12—43-ல், ஆண்டுவிழா, ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீராமன்
மேனன் தலைமையில் கொண்டாடப்பட்டது. கல்வி சம்பந்தமான
பொருட்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியர்
ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் முதியோர் கல்வியைப்பற்றிப் பேசினர்.
ஸ்ரீ கிரிதாரிப்பிரஸாத் தேசியக் கல்வியைப்பற்றிச் சொற்பொழிவு செய்
தார். தலைவர் ஞாபகார்த்தமாக பாடசாலைக் காம்பவுண்டில் ஓர் புளி
யஞ்செடியை நாட்டினர்.

---

### போர்டு உயர்தர ஆரம்பபாடசாலை, சிங்கம்புணரி

22—12—43-ல், செஞ்சிலுவைச் சங்கத் திறப்புவிழாவும், ராஜ்ய
ஸ்ரீ என்னும் தமிழ் நாடகமும் இவ்வூர் சப் ரிஜிஸ்தரார் தலைமையில்
நடைபெற்றது. இவ்வூர் வாசிகளின் ஒத்துழைப்பும், கடைவீதிப் பிர
முகர்களின் பொருளுதவியும் குறிப்பிடத் தக்கதே!

---

### M. E. L. I. M ஆரம்ப பாடசாலை, வெங்கட்டசமுத்திரம்

ரெவரெண்டு நௌமென் தலைமையில் சுகாதார வாரம் கொண்டா
டப்பட்டது. ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஸ்ரீ இமானுயல் கல்வி என்பது
பற்றியும், டாக்டர் பார்த்தசாரதி சுகாதாரத்தின் அவசியம் என்பது
பற்றியும் பேசினர்கள்.

---

### போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, மணல்மேடு (மாயவரம்)

26—11—43 முதல் 30—11—43 வரை கிராமச் சீரமைப்பு விழா
கொண்டாடப்பட்டு பூர்த்தி தினம் 14—12—'43-ல் ஸீனியர் டிப்டி
இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்
பட்டது. மாணவர்களால் சம்பாஷணைகளும், பந்தய விளையாட்டுகளும்,
மாணவிகளால் கும்மி கோலாட்டம் முதலியனவும் நடைபெற்றன. பின்பு
கல்வி, சுகாதாரம், பெற்றோர் கடமை, கைத்தொழில், பெண் கல்வி என்
பனபற்றிப் பல பிரமுகர்கள் சொற்பொழிவு செய்தனர்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், நடுக்காவேரி

18—12—43'-ல் ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோபாலய்
யர் தலைமையில் இரண்டாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்

பொழுது டிப்டி இன்ஸ்பெக்டர்கள் ஸ்ரீ உமாகாந்தமும், ஸ்ரீ துரைசாமி முதலியாரும், 'வெற்றியுள்ள ஆசிரியன்' என்பதுபற்றிப் பேசினர். மாணவர்கள் சிறு நாடகங்கள் நடித்தனர்.

---

### டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சை

18—12—'43-ல் மகாராஷ்டிரர் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை, தலைமையில் கூடிற்று. அப்பொழுது யுத்தப் பிரசாரகர் ஸ்ரீ தியாகராஜன், 'தற்காலயுத்தமும் ஆசிரியர் உதவியும்' என்பதுபற்றிப்பேசினார். முனிசிபல் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீராமசந்திரன் 'இசைப் பயிற்சி போதித்தல்' என்பதுபற்றி விரிவாகப்பேசினார். காரியதரிசி ஸ்ரீ மாருதிராவ் இசையின் மேன்மையைப் பற்றியும், மாணவர்களுக்கு அதைப் போதிப்பதின் பயனைப்பற்றியும் பேசினார்.

---

### போர்டு எலிமெண்டரிபாடசாலை, ஆக்தூர் (மாயவரம்)

18—12—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீசீனிவாசன் தலைமையில் கிராமச் சீரமைப்பு சுகாதார வாரவிழா கொண்டாடப்பட்டது. ஊர்வலமும் பந்தய விளையாட்டுகளும் நடைபெற்றன. மாலையில் அறிஞர் பலர், கல்வி, சுகாதாரம், விவசாயம் என்பனபற்றி சொற்பொழிவு செய்தனர். இரவில் 'அகதிதலையில் பொழுது விடிந்தது' என்ற நாடகம் நடித்து காண்பிக்கப்பட்டது.

---

### பஞ்சாயத்து போர்டுஸ்கூல், திருப்பயத்தங்குடி

20—12—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீவாசுதேவய்யர் தலைமையில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்பொழுது நன்னிலம் உயர்தரப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீ நாராயண ஸ்வாமி அய்யர் கிராம முன்னேற்றமும் கல்வியும் என்பதுபற்றி இனிய சொற்பொழி வாற்றினார்.

---

### போர்டு உயர்தர ஆரம்பக்கல்லூரி, வல்லம் (தஞ்சாவூர்)

22—12—43-ல், கிராமச் சீரமைப்புவிழா இறுதி நாள் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ திரு ஞானம்பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. தஞ்சை ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ துரைசாமி முதலியார் 'ஆரம்பக்கல்வியும் கிராம முன்னேற்றமும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். கிராமமுன்னேற்றநிலையப் பிரசாரகர் ஸ்ரீ இரத்தினசாமிபிள்ளை 'கிராமமுன்னேற்றம்' என்ற பொருள்பற்றி சொற்பொழிவு செய்தார்.



### போர்டு ஆசிரியர் யூனியன், கரூர் தாலுகா, கரூர்

முக்கிய உணவுப் பொருளான அரிசி கிராமாந்திரங்களிலுள்ள ஆசிரியர்களுக்குக் கிடைப்பது கஷ்டமாயிருந்தபடியால் இச்சங்க அங்கத்தினர்கள் கரூரில் முகாம் செய்திருந்த ஜில்லா கலெக்டரைப்பார்த்து விண்ணப்பித்துக் கொண்டதில், ஒவ்வொரு ஆசிரியருக்கும் வாரம் ரூ. 3½ க்கு அரிசி பெற்றுக்கொள்ளுமாறு ஸ்பெஷல் பெர்மிட்சாங்க்ஷன் செய்திருக்கிறார். இச்சௌகரியம் செய்து உதவியஸ்தல அதிகாரிகளுக்கு இந்த யூனியன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

---

### போர்டுபாடசாலை, மேட்டூர் (பெரம்பலூர் தாலூகா)

17—12—43-ல், ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ நித்யானந்தம் தலைமையில் பெற்றோர்சங்க ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. கல்வியின் அவசியமும் பெற்றோர் கடமையும் எனபதுபற்றி தலைவரும் இன்னும் சிலபிரமுகர்களும் பேசினர்.

---

### போர்டு உயர்தர ஆண் பாடசாலை, பெரம்பலூர்

23—12—43-ல், ஜில்லா கல்வி யதிகாரியின் உதவியாளர் ஸ்ரீ வீராசாமி பத்தர் தலைமையில், ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. மாணவிகளால் 'கற்பு' என்ற நாடகமும் மாணவர்களால் 'ஹிட்லரின் வீழ்ச்சி' என்ற சம்பாஷணையும் நடைபெற்றன. 24—12—43-ல் மாணவர்களிடையே யுத்தப் பாடல் போட்டி நடைபெற்றது.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், துறையூர்

25—12—43-ல், ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ முருகேச முதலியார் தலைமையில், ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. திருச்சி நேஷனல் காலேஜ் புரொபஸர் ஸ்ரீ ஸ்ரீனிவாச சர்மா, 'ஆசிரியர் பொறுப்பும் கடமையும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். யுத்தப் பிரசாரகர் ஸ்ரீ கூத்தப்பெருமாள் 'யுத்தமும் நமது கடமையும்' என்பதுபற்றி பேசினார். விளையாட்டுப் போட்டி, சங்கீதப் போட்டி முதலியன நடைபெற்றன.

---

### கலைமகள் பாடசாலை, பொடலாத்தி, (முசிரி)

1—1—44-ல், டாக்டர் நரசிம்ம அய்யர் தலைமையில், ஆண்டு விழாவும் பெற்றோர் சங்கமும் நடைபெற்றன. மாணவ மாணவிகளால் பந்தயப் போட்டிகள் நடைபெற்றன. தலைவர் 'பாடசாலையும் பெற்றோர் கடமையும்' என்பதுபற்றிப் பேசினார்.

### போர்டு பாடசாலை, ஆடுதுறை, (பெரம்பலூர்)

2—12—43-ல், பெற்றோர் சங்கக் கூட்டம், ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சீனிவாசன் தலைமையில் நடந்தபொழுது நூல் நூற்புப் போட்டியும் சங்கீதப் போட்டியும் நடைபெற்றன. சென்ற இதழில் பாரதிப் பாட்டுப் போட்டி என்பது தவறு. (பிழை திருத்தம்.)

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், தொண்டாமுத்தூர்

8—1—44-ல், போர்டு பாடசாலை உதவி ஸ்ரீ இராமச்சந்திரன் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. ஆசிரியர்களின் உற்ற துணைவரும், வேடபட்டி குருகுல ஆசிரிய மானேஜருமான ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரேசுவர அய்யர் மரண மடைந்ததற்கு மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. அவருடைய குணாதிசயங்களைப் பற்றிப் பலர் பேசினர்.

2. கவர்ன்மெண்ட் ஊழியர்கள் பெறுவதுபோல் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் வித்தியாசமில்லாமல் யுத்தப்படி கொடுத்துதவும்படி அதிகாரிகளை வேண்டிக்கொள்ளுகிறது.




## ஸ்ரீ முருகன் பாம்

**ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய குடும்பத் தோழன்!**

கோடைக் கொப்பளம், சொறி, சிரங்கு, கரப்பான், வெட்டுக் காயம், சேத்துப்புண், பரு முதலிய சர்ம வியாதிகளுக்கு, இஞ்ஜெக்ஷன், ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்தும் கைகண்ட ஔஷதம். களிம்பு ரூபமாய் இருக்கும் இம்மருந்தை தேங்காய் எண்ணெயில் குழைத்து புண் உள்ள இடங்களில் நன்றாகத் தடவி ஒரு மணி ஊறவிட்டு சீக்காய் அல்லது சோப் போட்டு நன்றாக சுத்தம் செய்து வந்தால் ஒரு வாரத்திற்குள் ஆச்சரியகரமாக குணப்படுத்தி விடுகிறது நிச்சயம். சிறு குழந்தை முதல் வயோதிகர் வரை யாவரும் உபயோகிக்கலாம். (மேலுக்கு மட்டும் உபயோகப்படுத்தவும்.)

ஒரு அவுன்ஸ் விலை ரூ. 0—8—0 (தபால் செலவு வேறு)

: மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**S. NARAYANASWAMY, M. P. S. (India)**
**Chemist, No. 24, Parthasarathiswami Street, TRIPLICANE, MADRAS.**


## பத்திராதிபர் குறிப்புகள்

### ஆசிரியர் சம்பளம்

அகில இந்தியக் கல்வி மகாநாட்டில் தலைமை வகித்த சர். மாரிஸ் க்வையர் தமது பிரசங்கத்தில் எங்கு ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டதோ, அங்கு ஆசிரியர்களின் ஊக்கமும் முயற்சியும் அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டி, ஆரம்ப ஆசிரியர்கள் கவலையற்று வேலை செய்யப் போதுமான ஊதியம் பெறும்படி செய்யவேண்டும் என்று கூறியுள்ளது கவனிக்கத் தக்கது.

2 வருஷத்திற்கு முன்பு சார்ஜண்டு கமிட்டி சிபார்சு செய்துள்ள சம்பள திட்டத்தை மத்ய கல்வி ஆலோசகக் கமிட்டி அங்கீகரித்துள்ளது. இத் திட்டத்தைக் கொண்டே சார்ஜண்டு துரை தமது யாதாஸ்தில், இந்தியாவில் கட்டாயக் கல்வி அமுலுக்கு வர எவ்வளவு பணம் வேண்டியிருக்குமென்று கணக்கிட்டுள்ளார். சர். மாரிஸ் க்வையர், அத்திட்டம் தயாரித்த பிறகு விலையேற்றம் ஏற்பட்டுள்ளதால், அத்திட்டத்தை மாற்றி, உயர்ந்த சம்பள விகிதங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியிருக்குமென்றும் சொன்னார். இத் திட்டத்தின்படி, ஆரம்ப ஆசிரியர்களுக்கு சிபார்சு செய்துள்ளது:—ஆரம்ப பள்ளிக்கூடம் ரூ. 30—1—35 3—50. கிராமத்திலுள்ள ஆசிரியர்களுக்கு வாடகையில்லாமல் வீடுகள் கொடுக்கப்படவேண்டும். அப்படி முடியாவிட்டால், வாடகைக்காக சம்பளத்தில் 10 சத வீதம் கூட அளிக்கப்பட வேண்டும். மேற்கூறிய திட்டம் சாதாரண கிராம பள்ளிக்கூடங்களுக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. வாழ்க்கைச் சிலவு அதிகமாயிருக்குமிடத்திலும் வேறு கஷ்டங்கள் இருக்கக்கூடிய இடத்திலும் மேல் சொன்ன திட்டத்தை 50 சத வீதம் வரையில் அதிகப்படுத்தலாம். தலைமை ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட திட்டம் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| 1 அல்லது 2 வகுப் புள்ள பள்ளிக்கூடம் | உதவி ஆசிரியர் சம்பள திட்டம் + ரூ. 10. |
| 3 முதல் 5 வகுப்புள்ளவை | ரூ. 50—4—70. |
| 6 முதல் 10 வகுப்புள்ளவை | 60—4—80. |
| 10 வகுப்புக்குமேல் | 80—4—100. |

'வகுப்பு' என்பதில் ஒரு ஆசிரியரின் கீழ் இருக்கும் தொகுதியைக் குறிப்பிடும். உதாரணமாக 1st Standardல் இரண்டு மூன்று வகுப்புகளும் இருக்கலாம். கமிட்டியார், சம்பளதிட்டத்தில் ஆண் ஆசிரியர்களுக்கும் பெண் ஆசிரியர்களுக்கும் வித்தியாசம் கூடாது என்று குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

நமது இராஜதானியில் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்துக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு இப்பொழுது அளிக்கப்படும் மானியம் ஹையர் கிரேடுக்கு ஒரு வருஷத்திற்கு ரூ. 212. இது மானியம்தானே, என்று சொல்லலாம். ஆயினும் இந்த மானியப்படிக்குக்கூட ஆசிரியர்கள் பெறுவதில்லை என்று துரைத்

தனத்தார் அறிவார்கள். அவர்களே, இதில் 15 சதவீதம் மானேஜர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதித்திருக்கிறார்கள். 'தேக்கம் ஏற்படுகிறது. பிள்ளைகள் தேர்ச்சி அடைவதில்லை. பள்ளிக்கூடம் இருக்கும் கிராமத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்கு வருவதில்லை' என்று பலவாறாக குறைசொல்லி, 'இதற்கெல்லாம் ஆசிரியர்கள் தான் காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது. பணமில்லாமல் கவலை கொண்ட ஆசிரியர்க்கு போதிக்கவே சக்தி இல்லாமலிருக்கும். மற்றவைகளை அவர் எவ்வாறு கவனிக்கமுடியும்? கல்வி முன்னேற்றத்துக்கு ஆசிரியர்களே அடிப்படையாகும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் அப்படி இருக்கவேண்டுமானால் அவர்களுக்கு போதுமான சம்பளமும் மற்ற வசதிகளும் அளிக்கப்படவேண்டும். இவைகள் நன்றாக இருந்தால் ஆசிரியர் தொழிலை நன்கு தேர்ச்சிபெற்றவர்கள் ஏற்பார்கள். கல்வி முன்னேற்றமடைவது நிச்சயம்.

இவ்வுண்மை நமது கல்வி இலாகா தலைவருக்குத் தெரியாதது இல்லை. அவர் பதவி ஏற்றதிலிருந்து, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் மான்யத்தை அதிகப்படுத்த முயன்று வருகிறார். முதலில், 5 வருஷத்திற்கு முன்பு மான்யத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 2. அதிகப்படுத்தினார் 1942-ம் வருஷம் பஞ்சப்படி ரூ. 2 கொடுப்பதற்கு கவர்ன்மெண்டின் அனுமதி பெற்றார். சென்ற நவம்பர் மாதம் முதல் பஞ்சப்படியை ரூ. 3 ஆக அதிகரித்துள்ளார். எனவே, ஆசிரியர்களின் தேவையும், கல்வி முன்னேற்றமும் இவர் கவனத்தில் இருந்துவருகின்றன என்பதை நிச்சயமாகச் சொல்லலாம். இவருடைய உதவியை நமது ஆரம்ப ஆசிரியர்கள் என்றும் போற்றுவார்கள் என்பது ஐயமில்லை.

ஆனால் இவ் வுதவிகள் ஆசிரியர்களுக்கு தாற்காலீக நன்மையை உண்டாக்குகின்றது. அவர்களது மாதச் சம்பளத்தை சார்ஜண்டு கமிட்டி திட்டத்தில் கண்டுள்ளதுபோல் உயர்த்தினால் தான் அவர்கள் வறுமை நீங்கி, கல்வியில் பூரண ஊக்கம் ஏற்பட்டு நம் நாட்டுக் கல்வி நிலை அபிவிருத்தி யடையும். இதை ஆசிரியர்களும், பொதுஜனங்களும் துரைத்தனத்தாருக்கு எடுத்துக் காட்டுதலின் அவசியத்தை விவரிக்கவும் வேண்டுமா?

---

இந்துமத பாடசாலை வாலாஜாபாத்

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் 27-ம் ஆண்டு அறிக்கையைப் பெற்றோம். கண்டு மனமகிழ்ந்தோம். சிறந்த முறையில் போதிக்கப்படுவதோடு, மாணவர்கள் ஒழுக்கமும் வணக்கமும் கற்று, தொழிற் படிப்பிலும் விவசாயத்திலும் தேர்ச்சி பெறுகின்றார்கள். கைத்தேர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் தேசபக்தியும் மாணவர்களுக்கு அளிக்கப் படுகின்றன. வகுப்பு வேறுபாடு, ஏழை பணக்காரர் வேறுபாடுகளின்றி மாணவர் இல்லம் நடத்தப்படுவது பாராட்டத்தக்கது. இதை நடத்தும் ஸ்ரீமாசிலாமணி முதலியாரின் உழைப்பும் பண்பும், தியாகமும் பாராட்டத்தக்கவை. இதைப் போன்ற பல பாடசாலைகள் நமது நாட்டில் தோன்றினால், நாடு மிக முன்னேற்றமடையுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

---

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS
520, High Road, Triplicane, Madras.

நீங்கள்

இந்த நிதியில்

சேர்ந்து விட்டீர்களா?

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள் ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில், நல்ல லாபம் காணப்படுகிறது!

ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

உடனே சேருங்கள்!

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் தற்காலத்தில் அவர்களின் பொறுப்பும் .... .... .... T. V. நீலகண்ட சாஸ்திரியார், B.A., L.T., | 475 |
| 2. | பாட புத்தகங்களில் மாணவர்களுக்கான பயிற்சிகள் .... —K. ராமச்சந்திர ராவ் | 481 |
| 3. | தனிப் பயிற்சி முறை .... .... .... —M. K. சிவராமன் | 484 |
| 4. | ஆரம்பப்பள்ளிக்கூட பூகோள பாடத்திட்டம் .... —A. N. Schwartz, B.A., L.T., | 487 |
| 5. | செய்தித் திரட்டு .... .... .... | 491 |
| 6. | பத்திராதிபர் குறிப்புகள் ... .... .... | 494 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். வி. பி. அனுப்புவதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால், சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவிடும்படி நேயர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1944 பிப்ரவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

செங்கற்பட்டு — Ch. 6.
வட ஆற்காடு — NA. 16.
தஞ்சாவூர் — Tan. 42, 58, 65, 89.
ராமனுதபுரம் — Rd. 11.
மதுரை — Md. 10, 22.
திருநெல்வேலி — Tin. 3-A, 10.
சேலம் — S. 4, 54.
கோயமுத்தூர் — Co. 11.
திருவாங்கூர் — Tra. 4.

முக்கிய கவனிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்

# பாலர் கல்வி


| தொகுதி 8 | 1944 ஸு பிப்ரவரி மீ<br>ஸுபாநு ஸு மாசி மீ | பகுதி 11 |
|---|---|---|


## ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும், தற்காலத்தில் அவர்களின் பொறுப்பும்*


T. V. Nilakanta Sastriar, B. A., L. T.

*Senior Deputy Inspector of Schools, Erode Range, Erode.*


உபாத்திமை தொழிலானது உண்மையாய் அதிக புனிதமுள்ளதும் தேசத்திலுள்ள ஜனங்களுக்கு அத்யாவசியமானதும் ஆகும். கல்வி கற்பிக்கும் தொழிலானது அதிக பயிற்சியுள்ள மற்றத் தொழில்களைப்போல் அவ்வளவு உயர்வாக தற்காலத்தில் நினைக்கப்படாமலிருப்பது விசனத்தை தரத்தக்கதே. ஆனால் ஆதிகாலத்தில் உபாத்தியாயர் ஸ்தானத்தை வகிப்பது ஜனசமூகத்தில் ஒரு கௌரவமான அந்தஸ்தை வகிப்பதற்கு ஓர் அறிகுறி என்று நமது தேசத்தில் கருதப்பட்டு வந்தது.

தற்காலத்தில் உபாத்தியாயர்களுடைய பொறுப்பு மிகவும் அதிகமாய்விட்டது. எல்லாவித சீர்திருத்தம் நடைபெற அவர்களுடைய உதவியையே நாடவேண்டியிருக்கிறது. அது உண்மை. இந்த பளுவை வகிக்க நீங்கள் ஆயத்தம் செய்துகொள்ளவேண்டும். போதனுமுறை பாடசாலையில் பயின்றுவிட்டால் மாத்திரம் போதாது.

ஜனங்களுடன் நெருங்கிப்பழக பழக்கம் வேண்டும். கிராம சீர்திருத்த முறையில் முனைய வேண்டும். ஆசிரியர்கள் கிராம ஜனத்தொகை, பாடசாலை வயதுள்ள மாணவ, மாணவிகள், ஷை சங்கியையில் படிப்பவர் படிக்காதவர், முதியோரில் கல்விபயிற்சியற்றவர்கள், அதற்குள்ள பரிகாரம், பெண்கல்வி, ஆதிதிராவிட மக்களின் கல்வி அபிவிருத்தி, நூல்நிலையம், சுகாதாரம், இவைகளைப்பற்றித் தகுந்த முறையில்

* ஈரோடு ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுவிழாவன்று நிகழ்த்திய சொற்பொழிவு. சிறுவர் அறிவுக்கதிரில் முதலில் பிரசுரிக்கப் பட்டது.

பேசப்பழகி, பெற்றோர்களின் கூட்டுறவு நட்பு இவைகளைப் பெற்று, கிராம முன்னேற்றத்திற்கு ஊழியம் செய்ய முன்வரவேண்டும்.

ஆசிரியர்கள் இப்போது புதிய பாடத்திட்டப்படி கல்வி போதிக்க வேண்டும். மற்றப்படி அநேக புள்ளிக் கணக்குகள்—மாதாமாதக் கணக்கு, 3-மாதக் கணக்கு, $\frac{1}{2}$ வருஷக் கணக்கு, வருஷாந்திரக் கணக்குகள் Etc. தயார்செய்து சரியான காலத்தில் அனுப்ப வேண்டியும் இருக்கிறது. இவ்வளவு அதிக வேலைப்பாடுகளிருந்த போதிலும் பிரசார வேலையில் ஊக்கத்துடன் ஈடுபட வேண்டியிருக்கிறது மிகவும் கடுமையான பொறுப்புதான். இதன் மத்தியில் ஆரம்பக்கல்வியைப் புகட்டும் பாடசாலைகள், உபாத்தியாயர்களைப் பொறுத்தே இருக்கிறது. பாடசாலைகள், உத்தமமானதும் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கதுமான சக்திகள் நிறைந்த ஓர் இடமாகவும், அச்சக்திகள் எல்லாம் அவ்விடங்களிலிருந்து சுற்றுப் பக்கங்களில் பரவும்படிக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

சிறுவர்களுக்குப் புகட்டும் கல்விப்பயிற்சியும் தேகப்பயிற்சியும் அவர்கள் நடத்தைகளைச் சீர்படுத்துவதற்கும் அவர்களைத் தேசாபிமானமுள்ளவர்களாகச் செய்வதற்கும், நல்ல நகரவாசிகளாகச் செய்வதற்கும், யோக்கியமுள்ளனவாக இருக்க வேண்டும்.

உலகத்தில் குழந்தைகளைத் திருப்தி பண்ணி அன்னவரது அறிவை மேன்படுத்தும் பாக்கியவந்தர்கள் குழந்தைப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களே. இவர்களிடத்தில் எப்போதும் அன்புசார்ந்த தொனி, வியாகூலம் பாராட்டாமை, பொறுமை முதலிய குணங்கள் அதிகப்பட்டிருக்க வேண்டும்.

தற்காலத்தில் எல்லோரும் உபாத்தியாயராக இருக்கத் தகுந்தவர்கள் என்று நினைக்கிறது மிகவும் பிசகு. கல்வி கற்பிக்கும் தொழிலானது சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட பரிசுத்தமான கடமை என மட்டும் நினைக்காமல், அதுவே எல்லா இன்பங்களுக்கும் மேலானது என யார் கருதுகிறார்களோ அவர்கள்தான் உபாத்தியாயர் வேலைக்குத் தகுந்தவர்கள்— தேசத்தாருக்கு நன்மை செய்வதற்காகவே கொண்டிருக்கும் உத்தியோகம் என்று நினைக்கவேண்டும. அதற்குத்தக்கபடி தங்களைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டியது முக்கியத்திலும் முக்கியம்.

## போதனாசிரியரின் கடமை

ஆகையால் உபாத்திமைத் தொழிலில் ஈடுபட்டு உழைக்க ஆசிக்கும் ஆசிரியர் ஒவ்வொருவரும் அநுசரிக்க வேண்டிய முக்கிய விதிகள் பல உளவாயினும், யாவற்றினும் முதன்மையானதும் இன்றியமையாததும் யாதெனில், போதனாசிரியர் தம் கையின் கீழ் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு எல்லா விஷயங்களிலும் ஓர் எடுத்துக்காட்டாய் இருக்கவேண்டும் என்பதே. உதாரணமாகத் தம் மாணவர்கள் ஒழுங்



காயும், கிரமமாயும் பாடசாலைக்கு வர ஆசிக்கும் ஆசிரியர் தாமே ஒழுங்காயும், கிரமமாயும் பாடசாலைக்குப் போக முயல வேண்டும். மேலும் நடை உடை பாவனைகளிலும், பேச்சு வார்த்தைகளிலும், நல்லொழுக்கங்களிலும், அன்னவர்களுக்கு நன்மாதிரி காட்டுவது மிக்க அவசியமாகும்.

## "Example is better than precept"

ஆசிரியர் ஒவ்வொருவரும் தம் கையின் கீழ் ஒப்புவிக்கப் பட்டிருக்கும் மாணவர்களை "அன்பு" என்னும் பாசக்கயிற்றால் பிணிப்பது அவசியத்திலும் அவசியமே. ஏனெனில் எவ்வளவுக் கெவ்வளவு பக்ஷபாதமற்ற அன்பை மாணவர்களிடம் நாம் காட்டுகின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு நம்மைப்பற்றிய அன்பும், மாணவர்களின் இதயத்தில் பச்சை மரத்தில் அறையப்பட்ட ஆணிபோல் பதியுமென்பதற்கு யாதொரு ஐயமும் உண்டோ? மிகுந்த துஷ்டனையும், போதனாசிரியருக்கு அடங்காதவனாயு முள்ள மாணவனையும் நல்வழிப்படுத்தும் சிறந்த ஔஷதம், அவனிடத்தில் நாம் காட்டும் அன்பைத் தவிர வேறொன்று மில்லை என்பதை அனுபவத்திலும் நாம் கண்டறிந்து கொள்ளலா மென்பது யாவருக்கும் தெரிந்ததொன்றே! நாம் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு நமக்கிராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் நாமிருப்போம். அன்பு, நீடிய சாந்தமும் தயவும் உள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது, சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும்.

## "Love never faileth"

மலர் ஓரிடத்திலே நிலையாய் நின்று புஷ்பித்த போதிலும், அதன் நறுமணம் அதைச் சுற்றிலுமுள்ள பலவிடங்களிலும் பரவி பரிமளிப்பது போலும், பலாப்பழம் இருக்குமிடத்தை நாடி ஈக்கள் வந்து மொய்ப்பது போலும் பழுத்த மரத்தினிடத்தில் பறவைகள் வந்து கூடுவது போலும், ஆசிரியரின் கல்வி புகட்டும் திறமை, நற்கீர்த்தி முதலிய சற்குணங்கள் பலவிடங்களிலும் பரவுவது அவசியம். தம் கையின் கீழ் ஒப்புவிக்கப் பட்டிருக்கும் மாணவரை தம் சொந்தப் பிள்ளைகளாகப் பாவித்து அவர்களைக் கல்வி விஷயங்களில் மாத்திரமின்றிச் சன்மார்க்க விஷயங்களிலும் தேர்ச்சியடையச் செய்வதில் கண்ணும் கருத்துமாயிருப்பது ஆசிரியரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாகவே வளரும்,'' என்னும் வழக்குக் கிழுக்குமுண்டோ?

மாணவர்கள் உத்தம மாணாக்கர், மத்திம மாணாக்கர், அதம மாணாக்கர் என்னும் முப்பிரிவில் உட்பட்டவர்களாதலின் இவர்களைக் கல்வியென்னும் கடலைக் கடந்து கரை சேர்ப்பிப்பதில் பல முறைகளைக்

கையாளுவது நமக்கு அத்தியாவசியமாகும். உத்தம மாணாக்கர்களுக்குக் கல்வி பயிற்றும் விஷயம் அமைதியான கடலில் மீகான் தன் மரக்கலத்தைக் கஷ்டமின்றி செலுத்துவதை யொக்கும். அதம மாணாக்கர் விஷயத்திலோ போதனாசிரியர் படும் கஷ்டத்தை நாவினால் பகரவும் வேண்டுமோ? கடுமையான புயல்காற்றினால் கொந்தளிக்கும் கடலில் தத்தளிக்கும் மரக்கலத்தை நடத்தத் திசை தெரியாமல் மயங்கும் மீகானுக்கு நம்மை உவமித்துக்கூறின் யாது குற்றமோ, யான் அறிகிலேன். ஆதலின் அவர்களை அசட்டை செய்து, புறக்கணியாது அவர்களைக் கல்வி பயிலச் செய்வதில், பல கஷ்டங்களிருப்பினும் அவைகளைப் பாராட்டாது, அவர்களுக்காகப் பாடுபடுவது நமக்கு இன்றிமையாப் பொறுப்பான கடமையாகும். இடையன் தன் ஆடுகளுக்காகக் கவலைப் படுகிறான்; ஈசல் கொண்டவைகளையும், பலக்ஷயமானவைகளையும் தன் தோளில் சுமந்து திரிகிறான்.'' என்னும் அரிய வாசகத்தை நம் கருத்தில் இருத்திக் கொள்வோமாக. போதனாசிரியர் பலருள்ளும் பாலர்களுக்குக் கல்வி பயிற்றும் போதனாசிரியர் படும் கஷ்டத்தை அளவிட்டுக் கூற முடியாது. ஏனெனில் இயற்கையிலேயே பாலர்கள் பல விளையாட்டுகளில் நாட்டங் கொண்டவர்களாதலால் அவர்களைக் கல்வி பயிலும் துறையில் திருப்புவது அரிதிலும் அரிதே.

ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும் என்னும் பெரியோர் மொழிக்கிணங்க, அவர்களுக்கு விளையாட்டின் மூலமாகவே கல்வி புகட்டல் சிறந்த முறையாகும். இதுவுமன்றி, பாலர்கள் பல கதைகளைக் கேட்பதில் மிக்க ஆவல் கொள்வார்களாதலின், அவர்களுக்குப் பாடங்களை கதாரூபமாகப் போதிப்பதும் மிக்க மேன்மையாகும். சிறுவர்கள் மற்றவர்கள் செய்வதைக் கவனித்து அதன்படி செய்ய முயலும் சக்தி (**the power of imitation**) மிகுந்திருப்பவர்களாதலின், இளைஞர்களுக்குக் கல்வி புகட்ட பொறுப்பேற்றிருக்கும் போதனாசிரியர், எல்லா விஷயங்களிலும் பிள்ளைகளுக்குத் தன் மாதிரி காட்டி, சன்மார்க்க நெறியில் ஒழுகுதல் அவசியமன்றோ? **(Youth and white paper take all impressions !!)**

மாணவர்களுக்கு ஒரு புதிய விஷயத்தைப் போதிக்கப் புகுங்கால், அதைப்பற்றிய பல பகுதிகளையும் ஒரே நாளில் போதிக்க முயலுவதிலும், படிப்படியாய் அவ்விஷயத்தின் பல பாகங்களை மாணவர்கள் மனதில் பதியச் செய்வது மேலாகும். பந்தயத்தை ஜயிக்க முயன்ற முயலானது ஒரேஓட்டமாய் ஓடி, பின்னர்இடையில்தூங்கிப் பந்தயத்தைஇழந்தது போலும், மேய்ச்சல் தரைக்குக் கொண்டு போகப்பட்ட மாடு புல் மேயாமல் காலத்தைவீண்போக்கி சாயங்காலத்தில் வீட்டுக்குத் திரும்பும் போது அவசரமாயும், ஆத்திரமாயும் மேயத் தலைப்பட்டதுபோலு மிரா



மல், மந்த கதியாய் இடையறாது நகர்ந்து நகர்ந்து பந்தயத்தை ஜெயித்த ஆமையின் முன் மாதிரியை நமக்கு நன்மாதிரியாக வைத்து, கல்வியை மாணவருக்குப் புகட்டுவது சிறந்ததாகும். **"Slow and steady wins the race."**

போதனாசிரியரின் திறமையையும், குணாதிசயங்களையும் பகுத்தறிவதில் மாணவர்களுக்கு மிஞ்சினவர் வேறொருவருமிலர். ஆனதுபற்றி ஒரு விஷயத்தை அவர்களுக்குப் புகட்டும் முன்னர், அவ்விஷயத்தைப் பற்றி நமக்குப் பூரண அறிவு அவசியம். இதுவுமன்றி சில மாணவர் நுண்ணறிவுடன் நம்மை கேட்க முயலும் வினாக்களுக்குத் தகுந்த விடை பகர நாம் எப்பொழுதும் தயாராய் இருப்பது அவசியம்.

எப்படி காற்றோடு கூடின தீயானது துரிதமாய் நாலா திசைகளிலும் பரவுகிறதோ, அதற்கொப்ப மாணவர் நம்மைப் பற்றிக்கூறும் புகழ்ச்சியோ அல்லது இகழ்ச்சியோ பல திசைகளிலும் பரவுகிறதென்பது நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறதல்லவா? ஆனதுபற்றி நாம் உபாத்திமைத் தொழிலில் புகுந்தவுடன் நமக்குத்தெரியாத காரியம் ஒன்றுமில்லை யென்றும் நாம் சம்பூரண அறிவை அடைந்திருக்கிறோமென்றும் கர்வம் கொள்ளாதிருப்போமாக. ஏனெனில் "முற்றும் உணர்ந்தவரில்லை முழுவதூஉம் கற்றனமென்று களியற்க", "தம்மினும் கற்றோரை நோக்கிக் கருத்தழிக"; "கற்றவெல்லாம் ஏற்றேயிவர்க்கு நாம் என்று" என்னும் செய்யுட்களையும், 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்னும் பல பாஷைகளிலுமுள்ள முதுமொழிகளையும் நாம் ஞாபகத்திற்குக் கொண்டு வருவோமாக. பல கலைகளுக்கும் இருப்பிடமாய் விளங்கும் கலைமகளாகிய ஸரஸ்வதியும் இன்னும் படித்துக் கொண்டிருக்கிறாளென்றால், நாம் நம்முடைய அறிவை விருத்தி செய்யப் பல நூல்களையும், பயின்று ஆராய்ச்சி செய்வது முக்கியமும் அத்தியாவசியமும் என்பது வெள்ளிடை மலைபோல் நமக்கு விளங்கவில்லையா? இவ்விஷயம் நமக்கு இன்றியமையாக் கடமைகளில் ஒன்றல்லவோ? 'பாடையேறினும் ஏடது கைவிடேல்' பழமொழி.

சற்று ஊன்றி யோசிக்குங்கால் இவ்வுலகின் கண்ணுள்ள எத்தொழிலிலும் மாணவர்கட்கு கல்வி புகட்டும் இத்தொழிலே சிறந்ததும், கண்ணியமானதும், பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தை நமக்கும் மாணவர்கட்கும் நிலை நாட்டும் மேன்மையான தொழிலென ஐயமறக் கூறலாம். பல உத்தியோகசாலைகளிலுழைத்து வரும் கீழ்த்தர உத்தியோகஸ்தராயிருப்பினும் சரி, அவ்வுத்தியோக சாலைகளில் தலைமை வகிப்போராயினும் சரி, யாவரும் தங்கள் தங்கள் பாலியத்தில், யாதாமொரு பாடசாலையில் கட்டாயம் கல்வி பயின்றவர்களாகவே இருத்தல் வேண்டும்.

அக்காலத்தில் அவர்களுக்கு நாம் ஊட்டிய கல்வியும், சன்மார்க்க நெறிகளுமே அவர்கள் மனதில் வேரூன்றி நாளடைவில் ஆல்போல் தழைத்துப் பிற்காலத்தில் அவர்களை நன்னெறியில் ஒழுகச் செய்கின்றன வென்பதைக் கூறவேண்டுமோ? நம் மாணவர்களின் பெற்றோர் உயர்ந்த கல்விப் பதவியையோ, செல்வப் பதவியையோ, அதிகாரப் பதவியையோ அடைந்திருப்பினும் நம் தயவையே நாடி நிற்பது நாம் அறிந்த விஷயமே. இதுவுமன்றி நம் சையின்கீழ் கல்விபயின்ற மாணவர் பிற்காலத்தில் எவ்வித உயர்பதவியை வகிப்பினும், நம்மைக் கண்ட அளவில் குருபக்தி மேலிட்டவர்களாய், யாவரினும் நம்மை மேம்பாடாகக் கௌரவப்படுத்துவது நாம் கண்ட காட்சியே! இத்யாதி காரணங்களையுற்று நோக்குமிடத்து, நம் தொழில் யாவற்றிலும் மேன்மையிலும் மேன்மையென்பதை யார்தான் மறுத்துக் கூறுவர்?

ஆயினும் நம் தொழிலுக்கேற்ற ஊதியத்தைச் சற்று யோசிக்குங்காலோ, நாம் மற்ற எத்தொழிலையும் செய்து பிழைப்பவர்களிலும் கடையினும் கடையானவர்கள் என்பது நமக்குச் சொல்லாமலே விளங்கும். கால் கடுக்க நின்று, நெஞ்சுவலிக்கத் தொண்டை புண்ணாகும்படி கத்தியும் கடைசி காலத்தில் கண்ட பலன் ஒன்றுமில்லையே என்று அங்கலாய்த்து, அநேகர் அழுது புலம்புவதைக் கண்ணாரக்கண்டும் கேட்டுமிருக்கின்றோம்.

வாலிப காலத்தில் மாடுபோல் உழைத்தும், வயோதிக காலத்தில், 'கிழட்டு மாட்டை பிடித்துப் புழக்கடையில் கட்டு' என்ற பழமொழிக் கேற்ப, தங்கள் பிற்கால நிலைமையைக் குறித்து ஏங்கித் திகைப்பார் பலர். நாம் வாலிப காலத்தில் சர்க்கார் வேலையில் புகுந்திருந்தால், வயது சென்ற காலத்தில் கை நிறைய உபகாரச் சம்பளம் பெற்று உண்டு களிக்கலாமே நாம் வந்தபின் காப்போன் என்னும் மீன் போலானோமே என்று வாடி நிற்பார் சிலர். எப்போதும் அதிகச் சம்பளம் விரும்பாமலிருக்கும் நிலையிலும் தன் கால க்ஷேபத்திற்கு சரிகட்டிக்கொள்ள privato tution சொல்ல அமராமலிருக்கும் நிலைமையிலும் உபாத்தியாயர்களை வைக்க வேண்டியது தேசத்தார் கடமை.

ஆனது பற்றி நமக்குத் தலைமை வகிப்போர் இவ்விஷயத்தைச் சிரமேற்கொண்டு, பிற்காலத்திற்கு நமக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, Teachers' profession is the noblest of the professions but the sorriest of all the trades" என்னும் வசனத்தின் பிற்பகுதியின் வசையைப்போக்கி இசையை நிலை நிறுத்த முயலுவார்களாக!

# பாட புத்தகங்களில் மாணவர்களுக்கான பயிற்சிகள்

**K. Ramachandra Rao,**
*Teacher, B. B. School, Polagam East, Polagam Post, Nannilam Taluk.*

பயிற்சி என்றதும் "பராமுகமேனையா அடிமையிடம்" என்று ஒரு சாஹித்திய கர்த்தா வெகு அழகாகப் பாடியிருக்கும் ஓர் பாட்டின் முதல் அடி என் ஞாபகத்திற்கு வருகிறது. ஏனென்றால் இப் பயிற்சிகளைக் கவனிப்பாரே கிடையாது. கவனிப்பவர்களாயிருந்தாலும் அத்தகையோரின் எண்ணிக்கை வெகு குறைவே. காரணம் இரண்டு விஷயங்களைப் பொறுத்தவையா யிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் இப் பயிற்சிகள் ஏன் தரப்பட்டிருக்கின்றன என்னும் கருத்தை அறியாமலிருப்பது முதற்காரணம். இப்பயிற்சிகளை இளஞ்சிறுர்களுக்கு நடத்துவதில் உண்டாகும் கஷ்டங்கள் என்னவென்று ஆராயாமல் இருப்பது இரண்டாவது காரணம்.

சிறுவர்களுக்கான இப்பயிற்சிகள் புத்தக ஆசிரியர்களால் மிகவும் சீரிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்பயிற்சிகள் மிகவும் உயரியதான அமைப்புடனும், போக்குடனும், போதனை குறிப்புடனும் செவ்வனே அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்பயிற்சிகள் அனைத்தையும் விடாமல் நடத்திவிடவேண்டுமென்றுதான் எந்த ஆசிரியருக்கும் தோன்றும் என்பது என் துணிபு.

ஆனால் அப்பயிற்சிகளை அப்படியே ஒன்றும் விடாமல் தன் வகுப்பில் நடத்துவதாக எந்த ஆசிரியராவது தமக்குள் கூறிக்கொள்ள முடியுமா? வெளிப்படையாய்க் கூறவேண்டாம். அல்லது அப்பயிற்சிகளை நடத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது? அதை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்றாவது ஆராய்ச்சி செய்ததுண்டா? என்ற கேள்விகளைப் போட்டுக்கொண்டு ஆராய்வோம்.

## பயிற்சிகளே ஆசிரியர்களின் தோழன்

இப்பயிற்சிகளை நடத்துவதில் ஒரு உபாத்தியாயர் உள்ள பள்ளிக்கூடத்திலும் இரண்டு உபாத்தியாயர் உள்ள பள்ளிக்கூடத்திலும் வெகு கஷ்டமாயிருக்கும். ஆனால் முதல் ஒன்றிரண்டு பயிற்சிகளை சிறிது சிரமத்தைப் பாராமல் தளரா ஊக்கத்துடன் நடத்திவிட்டால் பிறகு கஷ்டமே யிராது. இப் பயிற்சிகள்தான் மேலே கூறிய பாடசாலையில் வேலை செய்யும் உபாத்தியாயர்களின் உயிர்த் தோழன். இவைகளே அவர்களுக்கு உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே உதவும் ஆருயிர்த் தோழன்போலாகும். ஏனென்றால் III—V வகுப்புகளுக்கு ஒரு பாடத்திலுள்ள பயிற்சிக்கு விடையளிக்குமாறு திட்டம் செய்துவிட்டு I—II வகுப்புகளுக்குப் பாடம் சாவதானமாய்க் கற்பிக்கலாம்.

## பயிற்சியின் நோக்கம்

ஓர் பாடத்தில் வந்துள்ள பதங்களுக்கு சொல் விளக்கமும், பிரயோகமும், இலக்கண விஷயங்களும் அந்தந்த பாடங்களில் வந்துள்ள உதாரணங்கள் முதலியவைகளைக் கொண்டே நடத்தப்படவேண்டும்

பிரத்தியேகமாய் இலக்கண பாடம்—மொழிப் பயிற்சி நடத்தக்கூடாது. இப் பயிற்சிகள் முதல்முதலில் ஆங்கில புத்தகங்களில் வர ஆரம்பித்தன. ஆனால் இப்பொழுது பயிற்சிகள் இல்லாத தமிழ்ப் பாட புத்தகங்களே கிடையாது. இதற்கென்ன காரணம் என்றால் புதிய பாட திட்டத்தின் நோக்கந்தான்.

### பயிற்சியும் அதில் அடங்கிய விஷயங்களும்

இப் பயிற்சிகளின்கீழ் அடங்கிய விஷயங்கள் யாவை, என்று சிறிது முதலில் சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் நடத்தும் ஓர் (5-ஆம் வகுப்பு) பாட புத்தகத்தில் காணப்படும் பயிற்சிகளில் அடங்கியவை :—

(1) சொல் விளக்கம்—கவளம் : ஒருபிடி அன்னம்.
(2) ஒரே வார்த்தைக்கு பொருள் மாறாமல் உள்ள வேறு வார்த்தை —மணம் - வாசனை - கந்தம்.
(3) எதிர்ப்பதம்—கோபம் × பொறுமை.
(4) மொழி வித்தியாசம்—நகை : ஆபரணம் நகை : சிரிப்பு.
(5) பூர்த்தி செய்.
(6) வாக்கியங்களில் அமைக்க.
(7) பொருத்தமாய் எழுது.
(8) வேறு எண் (9) வேறு பால் (10) வேறுகாலம் (11) செய்வினை செயப்பாட்டுவினை (12) வினாவாக்கு (13) உடன்பாடு **or** எதிர்மறையாக்கு (14) சேர்த்து எழுது (15) பிரித்து எழுது (16) பொருத்தமான குறியிடு (17) சந்தர்ப்பம் கூறு (18) **Simple to complex or compound sentences** (தனி வாக்கியம் தொடர்வாக்கியம்), என்பனவாம்.

இவைகளுள் வகைக்கு 5 உதாரணங்களுடன் கூடிய சார்ட்டுகளை அந்தந்த வகுப்புக்குத் தகுந்தவாறு தயார்செய்து வைத்துக்கொள்க.

### இவையெல்லாம் நமக்கு ஏன்?

நேயர்கள் "இவையெல்லாம் நமக்கேன். ஏதோ நடத்தமுடிந்த பயிற்சிகளை நடத்துவது. அந்தந்த பயிற்சிகளின் கீழ் உள்ளவைகளை நடத்துகிறது. அதன் அமைப்பு—போக்கு எவ்வாறிருந்தால் நமக்கென்ன" என்று நினைக்கலாம். அவ்வாறு நினைத்தால் அது நமது போதனை சித்திபெறுவதற்கு ஓர் பெரிய தடையாகும். புத்தகங்களைப் பாடதிட்டப்படி எழுதுவது கடினமாயிருந்தபோதிலும் ஒருவாறு தட்டுத்தடுமாறி எழுதி தாராளமாய் வெளியிடலாம். ஆனால் அவைகளில் அடங்கியுள்ள பயிற்சிகளை வெற்றிபெறும்படி நடத்துவதில்தான் நம் போன்ற ஆசிரியர்களுக்கு சிறிது கஷ்டமாயிருக்கிறது என்று சில சகோதர ஆசிரியர்கள் முறையிடுகின்றனர். அம் முறையீடு ஒத்துக்கொள்ளுதற்குரியதே. "என்னய்யா நடத்தமுடியாத விஷயங்களையா எழுதுவார்கள்" என்று கேட்கலாம். சில புத்தக ஆசிரியர்கள் தாங்கள் அனுபவமுறையில் கண்டதை எழுதுவார்கள். சில புத்தக ஆசிரியர்கள் பாடதிட்டப்படியும் அத்திட்டத்திற்குமேல் தொல்காப்பியர்—பவணந்தி முதலியோர் கூறியிருப்பதை யெல்லாம் வெகு அழகாக இலக்கணப் பயிற்சியில் எடுத்து எழுதிவிடுகின்றனர். அதை நடத்துவது அவர்களா? அல்லது நாமா? நன்றாய் ஆலோசியுங்கள்.



18 MAR 1944

### பயிற்சிக்கான சீர்திருத்தமும் புத்தக ஆசிரியர்களுக்கு வேண்டுகோளும்

"கட்டின வீட்டிற்குப் பணிக்கை சொல்வதற்கென்ன?" "எங்கே நீர்தான் ஓர் புத்தகத்தை இயற்றுமே" என்று கேட்கலாம். காரணத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்.

ஒரு ஆசிரியர் இயற்றிய 3-ஆம் வகுப்புக்கான பாடபுத்தகத்தில் காணப்படும் ஓர் பயிற்சியில் "ஒரு தொடர் வாக்கியத்தை பல தனி வாக்கியங்களாக்கு; பல தனிவாக்கியங்களை ஒரு தொடர்வாக்கியமாக்கு" என்கிறார். இன்னொரு ஆசிரியர் இயற்றிய 3-ஆம் வகுப்புக்கான புத்தகத்தில் வந்துள்ள பயிற்சியைக் கவனித்தால் முன் கூறிய ஆசிரியருக்கும் பின் கூறிய ஆசிரியருக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கு முள்ளதுதான். 5-ஆம் வகுப்புக்கான ஓர் பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு பயிற்சியில் பகுதி—விகுதி—இடைநிலை—சாரியை—விகாரம்—சந்தி என்பவைகளைப்பற்றி சரமாரியாய்க் காளமேகம்போல் பொழிகிறார். இன்னொரு ஆசிரியர் இயற்றிய ஐந்தாம் வகுப்புப் பாடபுத்தகத்திலுள்ள பயிற்சிகளைக் கவனித்தால் மேலே கூறிய ஆசிரியர் பிரஸ்தாபித்த விஷயத்தை கூறுவதே காணோம். அவர் ஏதோ ஒன்றை இலக்கணப் பயிற்சிக்குத் தயார்செய்துவிடுகிறார். ஆனால் அவர் கூறுவதும் இலக்கண பாடத்திற் குரியதே.

மேலே கூறியபடி மொழிப் பயிற்சி இலக்கணப் பயிற்சி இவை சம்மந்தமாய் பேராசிரியர்கள்—வித்வான்கள்—இன்னும் மற்றோர் இவர்களுக்குள்ளேயே பாட போதனை திட்டத்தில் மாறுபாடான கொள்கையிருந்தால் நம்போன்ற ஆரம்பாசிரியர்கள் என் செய்வது? ஒரே ஆசிரியர் இயற்றிய புத்தக வரிசையை **I to V** வகுப்பு வரை நடத்தினால் இக் கஷ்டங்கள் நேரிடா என்று கருதினால் அது முற்றிலும் சரியே. ஆனால் பல்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்ட புத்தகங்களில் பயிற்சிகளில் காணப்படும் விஷயங்கள் விஷய அமைப்பில் (**Presentation of matters**) ஒரு புத்தகத்திற்கும் இன்னொரு புத்தகத்திற்கும் மாறுபாடில்லாமல் ஒத்த தன்மையில் அல்லவா இருக்கவேண்டும்; அத்தோடு கூட அப்பயிற்சிகளை நடத்த அனுபவ சாத்தியமானதாயும் இருக்க வேண்டுமல்லவா? இப்பயிற்சிகள் சம்பந்தமாய் எழுந்த பிரசினைகள் மிகவும் சிக்கலானவை. அவைகளைப்பற்றிய ஆராய்வு அறிஞர்களின் ஆராய்வுக்குரியதாகும். இப் பயிற்சிகளின் சீர்திருத்தத்திற்காக அவை சம்மந்தமாய் அவ்வப்பொழுது எனக்கு உண்டான உள்ளக்கிளர்ச்சிகளை ஈங்கு எடுத்துக்காட்ட விரும்பியதே யொழிய புத்தக ஆசிரியர்களின் மீது குணதோஷம் கூறுவதற்காக எடுத்துக் கூறப்பட்டதல்ல.

இப்பயிற்சிகள் இனி தகுந்த சீர்திருத்தங்களுடன் நடத்துவதற்கு இலகுவானதாய்த் திருத்தி யமைக்கப்படவேண்டும். மொழிப் பயிற்சி—இலக்கணப் பயிற்சி இவைகள் மிகுந்த விரிவோடு கூடிய விஷயங்களுடன் தயார் செய்யப்பட வேண்டியதில்லை. தினசரி வாழ்க்கைக்கு எழுதவும்—படிக்கவும் கூடிய வகையில் சுருக்கமான விஷயங்களுடன் கூடிய பயிற்சிகள் அமைந்தால் போதுமானது.

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்" (நன்னூல்).

# தனிப் பயிற்சி முறை

M. K. சிவராமன், தலைமை ஆசிரியர்.
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பாமிரெட்டிப்பட்டி.

ஒரே வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுவாக போதிக்கும் முறையை தவிர்த்து ஒவ்வொரு குழந்தைக்கும் தனித் தனியான கவனம் செலுத்தும் முறைக்கு தனிப்பயிற்சிமுறை என்று பெயர்.

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவர்களுடைய சாமர்த்தியத்திற்கும் திறமைக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு மாணவனைப்போல் புத்திசாலியாகவோ அவனைப் போல் மனோநிலையை உடையவனாகவோ மற்றொருவன் இருக்க முடியாது. உபாத்தியாயர் இவ்விஷயத்தை நன்குணர்ந்து அவருடைய போதனா முறையை இவ் வித்தியாசங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

எல்லா வகுப்புகளிலும் கெட்டிக்கார மாணவர்களும் பிற்போக்கானவர்களும் இருக்கிறார்கள் என்று மாத்திரம் உபாத்தியாயருக்கு தெரிந்தால் போதாது. அவர்களை தகுந்த அளவு தேர்ச்சியடையச்செய்தல் ஒரு ஆசிரியருடைய அடிப்படையான நோக்கமாக இருத்தல் வேண்டும்.

வகுப்பு முறையின் மூலம் ஏற்றத் தாழ்வுகளையுடைய மாணவர்களைச் சிறந்த தேர்ச்சியடையும்படி செய்தல் இயலாத காரியமாகும். இதனால் வகுப்புமுறை ஒரு சிறந்தமுறை என்று சொல்ல முடியாது. வகுப்பு முறையில் கெட்டிக்காரப் பிள்ளைகள் முன்னேறி விடுவார்கள். பிற்போக்கான மாணவர்கள் போதிய அளவு தேர்ச்சி அடைய மாட்டார்கள். இதனால் அவர்கள் நாளடைவில் சோம்பேறிகளாகி பள்ளியில் படிக்க இஷ்டமின்றி பள்ளியைவிட்டு நின்று விடவும் கூடும். இதனால் ஒவ்வொரு மாணவனுடைய திறமைக்கு ஏற்றபடி தனித்தனி கவனம் செலுத்துவது சிறந்த முறையாகும். இதனால் அவன் திறமையை அனுசரித்தே தேர்ச்சி ஏற்படும். முற்போக்கான பிள்ளைகள் முன்னேறுவதில் யாதொரு விதமான தடையேற்படுவதில்லை. பிற்போக்கான மாணவர்கள் தங்களுடைய முழுத்திறமையையும் உபயோகித்து நிதானமாகவும் நன்றாகவும் கற்றுக்கொள்ள போதிய அவகாசம் ஏற்படும். ஆசிரியர் இம்முறையின்மூலம் ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனி கவனம் செலுத்துவதுடன் ஒவ்வொரு மாணவனுடைய திறமையையும் அவனுடைய கஷ்டங்களையும் நன்றாக அறிந்து கொள்ளுகிறார். தனிப் பயிற்சி முறையில் போதிக்க சாதனம் (Aid) மிகவும் அவசியமாகும். எப்பாடத்தைப் போதித்தாலும் ஏதாவது ஒரு சாதனம் இருத்தல் வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் பயன் தரக்கூடிய இம்முறையை போதிப்பதற்கும், ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனி கவனம்



செலுத்தவும் குறிப்புச் சீட்டுகள் (Assignments) முதலில் ஒரு ஆசிரியர் தயார் செய்து கொள்ளவேண்டும். ஒரு வகுப்பின் ஒரு வருஷ திட்டத்தை அநேக சிறிய உட்பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு பிரிவுக்கும் பிள்ளைகளே தங்களுடைய சுய முயற்சியாலும் திறமையாலும் கூர்மையாகக் கவனித்தற்கு வசதியுள்ள குறிப்புகள் தயாரிக்கவேண்டும். ஆசிரியர் தனக்கொன்றும் மாணவனுக்கொன்றுமாக இரண்டு குறிப்பு அட்டைகள் (Assignment Cards) வைத்திருத்தல்வேண்டும். மாணவன் ஒரு குறிப்புத்தாளை துடங்கின தேதியும் முடித்த தேதியும் அவனை தன்னுடைய குறிப்பு அட்டையில் குறிக்கும்படி செய்து ஆசிரியர் தன்னுடைய அட்டையில் அவன் ஆரம்பித்த தேதியும் முடித்த தேதியும் குறித்துக்கொள்ளுதல் வேண்டும். இம் முறையில் ஆசிரியர் ஒரு உதவியாகத்தான் இருக்கிறார். பிற்போக்கான பிள்ளைகளை தைரியப்படுத்தியும் அவர்களுக்கு அடிக்கடி நேரும் சந்தேகங்களை நீக்கியும் தேவையான உதவியையும் அளிக்கிறார்.

### குறிப்புத்தாள்களின் வேலைகள்

மேலே கூறப்பட்ட குறிப்புத் தாள்களை ஒரு ஆசிரியர் மிகுந்த ஜாக்கிரதையுடனும் கவனத்துடனும் தயாரித்தல் வேண்டும். அவை குறித்த காலத்தில் ஒரு மாணவன் செய்யவேண்டிய வேலையின் விபரமும் ஒரு மாணவன் தனக்குத்தானாக ஒருவருடைய முயற்சி யில்லாமல் தன் சுய முயற்சியால் சிந்தனை செய்யவும் உதவி செய்கிறது. அவன் ஒரு விஷயத்தைக் கூர்ந்து சீக்கிரமாக வாசித்தறிந்துகொள்ள தேவையான உதவியாக இருக்கிறது. பாட திட்டத்திற்கு புறம்பாக உள்ள சில விசேஷக் குறிப்புகளும் இக் குறிப்புத் தாளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இதை மாணவன் ஒரு கேள்விக் காகிதம் என்று நினைக்காவண்ணம் போதிய விவரங்கள் அதில் ஆசிரியர் தரல் வேண்டும்.

### குறிப்புத்தாள்களால் ஏற்படும் நன்மைகள்

ஒவ்வொரு வகைக் குறிப்புத்தாளை தனித்தனி மாணவனுக்குக் கொடுப்பதால் அவன் தன்னுடைய திறமையை அனுசரித்தும் தன் முழு திறமைக்கு ஏற்றவாறும் நிதானமாகவும் திருத்தமாகவும் தெளிவாகவும் வேலை செய்வதினால் அவன் கற்ற விஷயங்களில் தகுந்த தேர்ச்சி அடைவதுடன் அவனுக்குத் தானே ஒரு வேலையில் கவர்ச்சி (Interest) ஏற்படுவதால் அவன் நன்றாகவும் பிரியத்துடனும் குறிப்புத் தாள்களைச் செய்வான். வேலையில் கவர்ச்சி ஏற்பட்டால் அவ்வேலையைச் செய்வதில் வேகம் அதிகரிக்கிறது. குறைந்த நேரத்தில் அதிகமான வேலையைச் செய்ய அவன் மனமும் உள்ளமும் இடம் அளிக்கிறது. ஒவ்வொரு வேலையிலும் மாணவர்களுக்குத் தங்கள் வேலையில் கவர்ச்சியை உண்டாக்குதல் ஒரு ஆசிரியர் கவனிக்கவேண்டிய விஷயங்களில் மிகவும் முக்கியமாகும். இம் முறையின் மூலம் அக்கவர்ச்சி மாணவனுக்குத் தானே உண்டாகிறதால் இது

ஒரு சிறந்த முறை என்றே கூறலாம். மாணவர்களுடைய ஏற்றத்தாழ்வுகளை அறிந்து அவர்கள் திறமைக்கு ஏற்றவாறு விஷயங்களை எடுத்துச் சொல்லவும் அவர்களுடைய கஷ்டங்களை தனித்தனியாக அறிந்து கொள்ளப் போதிய அவகாசம் இருப்பதால் இதை அறிந்த அவர், அவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்ய முடிகிறது. வகுப்பு முறையில் காலம் அதிகமாக பலன் ஒன்றும் கிடைக்காமல் வீணாகக் கழிந்துவிடுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் தன் சுய முயற்சியால் வேலையில் ஈடுபட்டிருப்பதால் கால விரயம் ஏற்படுவதில்லை. ஒரு மாணவன் தன்னிடமுள்ள குறிப்புத்தாளைப் (Assignment Card) பார்த்த உடன்தான், ஒரு குறித்த காலத்தில் திறமையாகவும் சுத்தமாகவும் கொஞ்சம் வேலையாவது செய்திருக்கிறோம் என்ற திருப்தி அவனுக்கு ஏற்படுகிறது. தனக்குள்ள சக்தியும் பிறர்மேல் சார்ந்திராமல் தன்னுடைய காரியத்தைத் தானே சாதித்துக்கொள்ளும் திறமையும் ஏற்படுகிறது.

ஆசிரியருக்கு இம்முறை கடினமான வேலையைக் கொடுக்கிறது. குறிப்புத்தாள்களை அவர் மிகுந்த ஜாக்கிரதையுடன் தயார்செய்தல் வேண்டும். சுமார் 25 பிள்ளைகள் உள்ள வகுப்பில் சாதாரணமாக இம்முறையைக் கையாளலாம். ஆனால் அதிக எண்ணிக்கையான பிள்ளைகள் இருக்கும் வகுப்புகளில் இயலாது.


## நமது தாய் நாடு

ஆலயத்தைச் சுற்றி அங்கப் பிரதக்ஷணம் செய்யும் பக்தர் போன்று ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் பாரதத் தாயின் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அலைந்து திரிந்தார். அன்னையின் உடலிலும் உறுப்புக்களிலும் எங்கெங்கு என்ன கோளாறு உள்ளது என்று கண்டு கண்ணீர் உகுத்தார். பின்னர் அன்னையின் சோர்வை நீக்கி அவள் வலிமைபெற்று எழும்படி ஆசீர்வதித்தார். இந்த ஆசி மணிமொழிகள் நிறைந்தது இந்நூல்.

இரண்டாம் பதிப்பு. அழகிய வடிவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0

★

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர் :: சென்னை


# ஆரம்பபள்ளிக்கூடப் பூகோள பாடத்திட்டம்*

A. N. Schwartz B.A. L.T.

எந்த ஆசிரியரும், பாடத்திட்டங்கள் இன்னவை என்றும் அவை எந்த நோக்கங்களைக் 'கொண்டு வகுக்கப்பட்டிருக்கின்றன என்றும் நன்கு அறிந்து கொள்ளாமல் சரியானபடி கல்வியை மாணவர்களுக்குக் கற்பிப்பது அரிது. ஆகையால் ஆரம்பப் பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களாகிய நீங்களும் சென்னை அரசாங்கம் 1941-ம் ஆண்டில் புதிதாக வெளியிட்ட பூகோள பாடதிட்டத்தை அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாத கடமையாகும்.

### பாடத்திட்ட வரலாறு

பூகோள பாடம், விஞ்ஞான பாடமுறையில் ஆரம்பபள்ளிகளிலும் கற்பிக்கப்படல் வேண்டும் என்கிற திட்டம் 1939-ம் ஆண்டு வரை ஏற்படவில்லை. சென்னை அரசாங்கம் 1939-ம் ஆண்டு வெளியிட்ட திட்டம் நவீன போதனா முறைகளுக்கு ஏற்றதாகவும் இருந்ததில்லை. ஆகையால் 1941-ம் ஆண்டு இப்புதிய திட்டத்தை ஏற்படுத்தவேண்டியதாயிற்று. இப்போதுள்ள திட்டம், முன்னிருந்த திட்டங்களை விடப் பல வழியில் மிகச்சிறந்ததே. எந்தத் திட்டமும் குறைகள் இல்லாமல் இருக்குமா? இப்புதிய திட்டத்தில் அதிக விஷயங்களைச் சிறுபிள்ளைகளுக்கு அதிகமாகச் சுமத்திவைத்திருக்கிறார்கள் என்று சிலர் குறைகூறுவது இயல்பே. ஆனால், இத்திட்டத்தின் முக்கிய நோக்கத்தையும் அதன் பயனையும் அனுபவத்தில் கண்டறிந்த ஆசிரியர்கள், இப் புதிய திட்டத்தைப் போற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. போதனா முறைகளைப் பயன்படுத்தி விஷயங்களை உற்றுநோக்கி அறியச் செய்வதே இத்திட்டத்தின் அடிப்படையான நோக்கம்.

### பூகோள நூல் கற்பதின் முக்கிய நோக்கம்

பூமி நாம் வசிக்கும் வீடு. பூமியிலுள்ள உயிர்க்கூட்டங்கள் ஆங்காங்கு இருக்கும் இயற்கை நிலைக்குத் தகுந்தவாறு வாழ்கின்றன. மனிதனுடைய வாழ்க்கையும் இந்த இயற்கை அமைப்பு, இயற்கைநிலை, முதலியவற்றை ஒட்டியே நடைபெறுகின்றது. ஆனால், அறிவும், நாகரீகமும் பெருகப்பெருக மனிதன் பூமியாகிய தன் வீட்டைத்தன் நலங்களுக்குச் சற்று ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுகின்றான். எனினும் பெரும்பாலும் அவனுடைய நடையுடைபாவனை முதலியவை அவன்

* The first talk of the Refresher course in Geography conducted by the Mádras Teachers' Guild—22-1-'44

இருக்கும் பூபாகத்தின் இயற்கைச் சூழல்களுக்கு (environs) ஏற்றதாகவே இருக்கும். இதனால் ஒரு ஜாதி மற்ற ஜாதியை இழிவாக எண்ணுவதோ, உயர்வாக எண்ணிப் பகைப்பதோகூடாது. இவ்வாறு செய்வது தப்பு என்பதை நாம் பூகோள பாடத்தின் வாயிலாக நன்கு உணர்தல் கூடும். இவ்வித உணர்ச்சி உண்டாகுங்காலத்தில் மக்கள் ஒருவர் மற்றொருவருடைய உதவியையும் நல்லெண்ணத்தையும் நாடிக் கடவுள் மனிதனுக்கு ஈந்திருக்கும் இந்த அற்புதமான வீட்டில் ஒரே குடும்பத்தினராய் வாழவேண்டும் என்று உணர்வார்கள். இதை மாணவர்கள் அறிந்து கொள்ளும்படி கற்பிப்பதே பூகோளபாடத்தின் முதன்மையான நோக்கம்.

## என்ன கற்பித்தல் வேண்டும்

இந்நோக்கத்திற்கு இசையப்பாடங்களைக் கற்பிக்கும்போது மலை, ஆறு, கடல், ஊர் இவைகளின் பெயர்களை வீணுகக் கற்பிப்பதை ஒழித்தல் வேண்டும். இப்படிச் செய்தால் இத்திட்டம் சுமையாகவே தோன்றுது.

ஆரம்ப பள்ளிக் கல்வி முற்றுப்பெற்றதாக இருத்தல் வேண்டும். நமது வாழ்க்கைக்கு நாம் வசிக்கும் பூமியைப் பற்றிய அறிவு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு கற்பிக்கப்படல் வேண்டும். நமது தேசத்திலுள்ள மக்களுக்காவது உலகப் பொது முன்னேற்றத்திற்காவது எவ்விதத்திலும் தொடர்பில்லாத பூ பாகம், கடல், தீவு முதலியவைகளைப் பற்றிக் கற்பிப்பதில் நேரத்தைப் போக்குவது கூடாது. நம் மாணவர்களுக்குச் சிறப்பாக உள்ளூரைப் பற்றியும் நமது நாடாகிய இந்தியாவைப் பற்றியும், பொதுவாக மற்றப் பூ பாகங்களைப் பற்றியும் கற்பிப்பதற்கு இப்புதிய பூகோளத்திட்டம் உதவி செய்கின்றது. மலைகளும் கடல்களும் எப்படி மனித வகுப்புகளை ஒன்றுகூடா வண்ணம் பிரிக்கின்றன என்றும் ஆனால் மனிதன் இப்பெருந் தடைகளை தனது வாழ்க்கைக்கு உதவியாக மாறும்படிசெய்து அவைகளின் வாயிலாகத் தேசங்களைச் சேர்க்கும் வழிகளை உண்டுபண்ணிக் கொள்ளுகின்றான் என்றும் கற்பித்தல் வேண்டும். பூமி சூரியனைச் சுற்றுவதாலும் அதேசமயத்தில் அது தன்னையே சுற்றிக் கொள்வதாலும் நாட்களும் காலங்களும் உண்டாகின்றன என்றும், இக்காரணத்தால் மனித வாழ்க்கைக்கு வேண்டிய கோடிக் கணக்கான பயிர்பச்சைகள் உண்டாகவும் உயிர்கள் வாழவும் வசதி ஏற்படுகிறது என்றும் கற்பித்தல் வேண்டும்.

பொருளாதாரங்களைப் பெருக்கிக் கொள்ளவும், அரசியல் சம்பந்தமாக ஏற்படும் மாறுதல்களையும் சரித்திர வரலாற்றையும் தெரிந்து கொள்ளவும் வேண்டிய அளவு இராஜாங்கப் பிரிவுசம்பந்தமான பூகோளத்தைப் பற்றியும் சிறிது கற்பித்தல் வேண்டும்.



பூமியைப் பற்றிய எல்லா விஷயங்களையும் பூகோள நூலில் சேர்க்கலாம் என்பது சிலருக்கு எண்ணம். ஆனால், பூமிமனிதனின் வீடாக விளங்குவதற்கு வேண்டிய விஷயங்களே பூகோள பாடங்களின் பொருளாக இருத்தல் வேண்டும்.

## இத்திட்டங்களின் பொருள் அடக்கம்

ஆரம்ப பள்ளிப் பிள்ளைகள் பூகோள பாடங்களில் அறியவேண்டியவற்றை இப்புதிய திட்டம் 'பிள்ளைகளின் மனநிலை வளர்ச்சிக்கு ஏற்றபடி மூன்று படிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அது சிறந்த போதனு முறையைஅடிப்படையாகவும் கொண்டிருக்கின்றது.

## இரண்டு, மூன்று வகுப்புகள்

இந்த இரண்டாம் மூன்றும் வகுப்புக்களிலுள்ள பிள்ளைகளுக்கு விஷயங்கள் திட்ட வட்டமாகப் புலப்படா. பொருள்களைப் பற்றி மேற்போக்காக அறியும் சக்தியே (Dim recognition of facts) உண்டு. இச் சிற்றறிவுக்கு ஏற்றதுபோல் கதைகள் மூலமாக அயல்நாட்டுப் பிள்ளைகளைப் பற்றியும், அவர்களின் பெற்றோர் ஜீவனத்திற்காகச் செய்யும் வேலை அவர்களின் தேசம் முதலியவைகளைப் பற்றியும் புகட்டுதல் வேண்டும். இதற்கு அடிப்படையாக உள்ளூர்க்கிராமத்தில் பள்ளியைச் சுற்றிலுமுள்ள பயிர் வகைகள், விலங்குகள், சாலைகள் முதலியவைகளை உற்றுநோக்கி அறிந்துகொள்ளப் பழக்குதல் வேண்டும். பின் இவ்விதமே உள்ளூரில் வீசும் காற்று, மழை பொழியும் காலம், மனிதர் செய்யும் வேலை ஆகிய இவைகளைப் பற்றி ஆராய்ந்து குறித்துக் கொள்ளும்படி செய்தல் வேண்டும்.

## கவனிப்பு

1. "தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளை அறிதல்
2. சமீபத்திலுள்ளவைகளைக் கொண்டு தூரத்திலுள்ளவைகளைப் புகட்டுதல்
3. எளிதான விஷயத்தைக் கொண்டு கடினமான விஷயத்தை விளக்குதல்
4. கைவேலை மூலமாக பாடங்களைக் கற்றறிதல்."

என்று பலசிறந்த போதனு முறைகளை இப்புதிய திட்டங்கள் கையாளுவதை நீங்கள் கவனிக்கவேண்டும். 1829-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திட்டத்தில் இரண்டாவது வகுப்பிலேயே கோடானுகோடி மைல்களுக்கப்பாலுள்ள சூரிய சந்திர நட்சத்திரங்கள் முதலியவைகளைப் பற்றிய பாடங்கள் துவக்கத்திலேயே இருந்தன. அது தவறு. அப்படியில்லாமல் இப்புதுத் திட்டம் சிறந்த முறையில் இருப்பதைக் காணலாம்.

## நாலு, ஐந்து வகுப்புகள்

நான்காவது ஐந்தாவது வகுப்புகளிலுள்ள பிள்ளைகளுக்குப் பொதுவாக அவர்கள் முன் உள்ளூரைப் பற்றித் தெரிந்த விஷயங்களை

அடிப்படையாக வைத்து நமது தேசத்தைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் கற்பித்தல் வேண்டும்.

பூமியைக் குளிர்பாலைவனம், ஊசியிலைக்காடு, பாலைவனம், புல்வெளி, உஷ்ண மண்டலக்காடுகள் என்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரித்து அவைகள் எப்பாகங்களிலிருக்கின்றன என்றும், ஏன் அங்கிருக்கின்றன என்றும், அங்குள்ளவர்களின் வாழ்க்கை எப்படிப்பட்டது என்றும் கற்பித்தல் வேண்டும்.

பொதுவாக இவ்வகுப்புக்களிலுள்ளவர்கள் விஷயங்களை விரிவாக அறியக்கூடிய ஆற்றல் (Qualitative Appreciation) உள்ளவர்கள். ஆகையால் விஷயங்களை விவரித்துப் புகட்டலாம்.

### ஆறு, ஏழு வகுப்புகள்

ஆறும் ஏழாம் வகுப்புக்களில் உள்ளவர்கள் மறுமடியும் பூமியிலுள்ள கண்டங்களைத் தெளிவாக ஆராய்ந்து அறியும் ஆற்றலுள்ளவர்கள். விஷயங்களை உருவகப்படுத்தி அவற்றின் உண்மையை அறிய அவர்களுக்கு உதவிசெய்தல் வேண்டும். (Quantitative Proofs) எட்டாவது வகுப்பில் இந்தியாவைப்பற்றி அதிகமாக அறியும்படி பாடத்திட்டம் கூறுகிறது. ஆரம்பத்தில் உற்றுநோக்கி உள்ளூர் விஷயங்களை அறிந்தவைகளைக்கொண்டு பிறநாட்டு விஷயங்களைப் பிள்ளைகள் அறிகிறார்கள். இப்படி அறிவு முற்றினபின் நமது இந்தியாவைப்பற்றி படிப்பது எவ்வளவு சிறந்த முறையாகும்.

### முடிவுரை

1941-ம் ஆண்டில் ஏற்படுத்தபட்ட பூகோளப் பாடத் திட்டங்கள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன என்று பார்த்தோம். இன்னும் எவ்விதமாக இத்திட்டங்களை உபயோகப்படுத்த வேண்டுமென்பதை ஆரம்பப் பள்ளிகளுக்குள்ள திட்டங்களை ஆசிரியர்களுக்கு விளக்கிக் காட்டும் பொருட்டு அரசங்காத்தாரால் வெளியிடப்பட்ட விளக்கநூல் (Notes for Teachers on the syllabuses for Ele. School) ஒவ்வொரு ஆசிரியரும் வாங்கி படித்தறிதல் வேண்டும். அதில் சொல்லப்பட்ட ஒரு முக்கிய விஷயம் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியர் இருத்தல் கூடாது என்பதே. அந்த அந்த வகுப்பிற்கு ஏற்பட்ட அந்த ஆசிரியரே அந்த அந்த வகுப்புக்கு ஏற்பட்ட எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் வெண்டுமென்று அவ் விளக்கம் கூறுகிறது. நீங்கள் அந்த விளக்கநூலை வாங்கிப் பார்த்தால் இந்தக் காரணத்தை அறியலாம்.

# செய்தித் திரட்டு

### சென்னை ஆசிரியர்கில்டு, திருவல்லிக்கேணி

27—1—44-ல், டிப்டி டைரக்டர் ஸ்ரீ G. லோபோ அவர்கள், பூகோள பாடப்புனப்பயிற்சி முறையை (Refresher Course) ஆரம்பித்துவைத்தார். சுமார் 140 ஆசிரியர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும், சிந்தாதிரிபேட்டை உயர்தர பாடசாலையில் பயிற்சிபெற்று வருகிறார்கள்.

### அக்பராபாத் ஸ்கூல், சென்னை

14—1—44-ல், மூன்றாவது பெற்றோர் தினம் கொண்டாடப்பட்டது. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வெங்கடசுப்ரமணிய அய்யர் தலைமை வகித்தார். அனேகம் பெற்றோர்கள் விஜயம் செய்திருந்தனர்.

20-1-44, 27-1-44, 3-2-44 தேதிகளில், முயற்சி, சிநேகம், மாணவர்கடமை, விஷயங்கள்பற்றி உபந்நியாசங்கள் நடைபெற்றன.

### ஆசிரியர்மானேஜர் யூனியன், விழுப்புரம்

23—1—44-ல், யூனியன் தலைவர் ஸ்ரீநடராஜய்யர் தலைமையில் கூடிற்று. நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் அறிக்கைவாசிக்கப்பட்டு, ஆசிரியர்களை வரும் வரவிருக்கும் மாகாணக்கல்விமகாநாட்டில் தங்களாலானவரை ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். தீர்மானங்கள் (1) பஞ்சப்படியை ரூ. 3 ஆக உயர்த்தியதற்கு நன்றி செலுத்துவதுடன் இதர சிப்பந்திகளுக்குப்போல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் கொடுத்துதவுமாறும். (2) கிராண்டு தொகையை மாதாமாதம்கொடுத்துதவும் படியும், (3) மார்ச்சுமாத கிராண்டுதொகையில் 'புரோ ரேட்டாகட்' இல்லாமலிருக்கும்படியும், (4) பள்ளிக்கூட திறமைக்கேற்றபடி அளிக்கப்படும் கிராண்டு தொகையில் 50 சதவீதம் குறைக்கப்படுவதை நிறுத்தும்படியும், கேட்டுக்கொள்ளுகிறது.

### போர்டுபாடசாலை, குன்னத்தூர்

24-1-44-ல், பெற்றோர் சங்கத்திறப்புவிழா, ஸ்ரீபெரும்புத்தூர் டிப்டி இன்ஸ்பெக்டர் தலைமையில் கொண்டாடப்பட்டது. வழுதலம்பேடு மாணவர்களால், 'நவீன சத்தியவான் சாவித்திரி' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. பெற்றோர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றிப் பலர் பேசினர்.

### ஸ்ரீபெரும்புத்தூர்தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

22—1—44-ல், 7 பிரதிநிதிகள் கூடி பிப்ரவரியில் நடக்கவிருக்கும் இந்த யூனியன் வருஷாந்திரக்கொண்டாட்டத்திற்கு நடத்தவேண்டிய அலுவல்களைத் திர்மானித்தனர்.

### போர்டுபாடசாலை, அய்யப்பன்தாங்கல்

28-1-44 ல், பெற்றோர்சங்க, மாணவர் சங்ககூட்டங்கள் ஸ்ரீபெரும்புத்தூர் டிப்டி இன்ஸ்பெக்டர் தலைமையில் நடைபெற்றன. மாணவர்களால் யுத்தப்பாடல்களும், மாணவிகளால் கும்மியும் பின்னல் கோலாட்டமும் நடைபெற்றன. தலைவர் இச்சங்கங்களின் அவசியத்தைப் பற்றியும், மாணவ மாணவிகளின் நடிப்புத்திறமைகளைப் பாராட்டியும் பேசினர்.

### ஆரம்ப ஆசிரியர்சங்கம், வாலாஜாபாத்

29—1—44-ல், இந்துமத பாடசாலையில், காஞ்சீபுரம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீவைத்தியநாதய்யர் தலைமையில் கூடிற்று. ஜில்லா

ஸ்திரீபிரசாரகர் ஸ்ரீ பிலிப்ஸ் அம்மை ரக்ததானத்தைப்பற்றிப்பேசி, ஆசிரியர்களைக் கேட்டார். சுமார் முப்பது ஆசிரியர்கள் ரத்தம்கொடுத் துதவியது மிகவும் மெச்சத்தக்கது.

### போர்டுபாடசாலை, அன்னூர்

26—1—44-ல், பெற்றோர் சங்கவிழா, ஜில்லாகல்வியதிகாரி ஸ்ரீராமன் மேனன் தலைமையில் கொண்டாடப்பட்டது. பெற்றோர் சங்கமும் அதன் நோக்கமும் என்பதுபற்றிப் பலர்பேசினர். பாடசாலை பிள்ளைகளால் 'வள்ளித்திருமணம்' என்னும் நாடகம் நடைபெற்றது.

### ஆரம்ப ஆசிரியர்சங்கம், சிவகிரி, (ஈரோடு)

22—1—44-ல், ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீசற்குணம் தலைமையில் வருஷாந்தர விழாக் கொண்டாடப்பட்டது. மாணவர்களால் யுத்தப்பாடல்கள் பாடப்பட்டன. தலைவர் 'ஆசிரியர்களின் கடமை' என்பது பற்றிப் பேசினார்.

### தேசீய வித்யாசாலை, சொக்கம்பாளையம்

28—1—44-ல் ஜில்லாகல்வி அதிகாரி ஸ்ரீராமன் மேனன் தலைமையில், பெற்றோர்சங்கம் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகளால் சம்பாஷணை, கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன. தலைவர் உரையில், பெற்றோர்களின் உற்சாகத்தைக்கண்டு மகிழ்வதாகவும், பாடசாலைக்குக் கட்டிட அவசியத்தைப்பற்றியும் பேசினார்.

### கோவை வடக்குகிராம ஆரம்ப ஆசிரியர்சங்கம்

29—1—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுப்பராவ் தலைமையில் கூடிற்று. அப்பொழுது ஸ்ரீ எம். எஸ். சுந்தரேசுவர அய்யர் காலமானதிற்கு அனுதாபம் காட்டியதோடு, கல்வி சம்பந்தமாக அவருடைய சேவையைப்பற்றிப் பலர் புகழ்ந்தும் பேசினார்கள்.

### கோயமுத்தூர்தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்யூனியன், வெங்கடாபுரம்

29-1-44-ல், நிர்வாக சபைக்கூட்டம், ஸ்ரீ பெருமாள்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது போர்டின் ஏனைய ஊழியர்களுக்குப் போலவே ஆரம்ப ஆசிரியர்களுக்கும் யுத்த அலவன்ஸ் கொடுத்துதவும்படி பிரஸிடெண்டு அவர்களை வேண்டிக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

### O. V. C. ஆரம்ப பாடசாலை, மானாமதுரை

9-1-44 ல், ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீதேசிகமய்யங்கார் தலைமையில் பெற்றோர் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அனேகம் பெற்றோர்கள் வந்திருந்தனர். மாணவிகளால் கும்மி, கோலாட்டம் அபிநயப் பாட்டுடன் நடைபெற்றது. இவ்வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு, 'பெற்றோர் சங்கத்தின் அவசியமும் பயன்களும்' என்பதுபற்றி, ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ ராமலிங்க முதலியார் சொற்பொழிவு செய்தார். பிறகு ஆண் பாடசாலைகளில் பெண் பிள்ளைகளைச் சேர்ப்பதைப்பற்றி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சொக்கலிங்க வித்யாசாலை, லக்ஷ்மீபுரம்

17-1-44 ல், விவேகானந்தர் விழா இறைவணக்கத்துடன் போற்றப்பட்டது. மாணவ மாணவிகள் பேச்சு, பாட்டு, நடிப்பு நிகழ்த்தினார்கள். ஆசிரியர் ஸ்ரீ ராமானுஜம் பிள்ளை விவேகானந்தரைப்பற்றிப் பேசினார்



10—2—44-ல், மீனாட்சி சங்கத்தின் 18-வது ஆண்டு 10-வது கூட்டம், ஸ்ரீ ராமானுஜம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் காரைக்கால் அம்மையார் சரித்திரத்தை எடுத்துரைத்தார்.

### தர்மபுரி தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

23—1—44-ல் ஸ்ரீ சீனிவாசன் தலைமையில் கூடிற்று. அப்பொழுது, பஞ்சப்படி சர்க்கார் திட்டப்படி கொடுத்துதவும் படியும், மூன்று மாத சம்பளம் அட்வான்ஸ் கொடுத்துதவவேண்டுமென்றும், ஆசிரியர் குழந்தைகளுக்கு உயர்தர பாடசாலைகளில் இலவசக் கல்வி யளிக்கும்படியும் தீர்மானிக்கப் பட்டன.

### போர்டு ஹிந்து ஆரம்ப பாடசாலை, காவேரிப்பட்டணம்

27-1-44 ல் பெற்றோர்தினம், ஸ்ரீ நரசிம்ம நாயுடு தலைமையில் கொண்டாடப்பட்டது. உயர்தரப் பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஷண்முகம் 'பெற்றோர்களின் கூட்டுறவு' என்பதுபற்றிப்பேசினார். டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சீனிவாச ராவ், பெற்றோர்களின் ஒத்துழைப்பால் பாடசாலை பலவகைகளிலும் அபிவிருத்தியடைந்திருப்பதைப் பாராட்டிப்பேசினார்.

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், கீரமங்கலம்

29—1—44-ல் ஆண்டு விழா, மிராசுதார் ஸ்ரீ விஜயசுந்தரம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. தமிழ் பண்டிதர் ஸ்ரீ நாராயணசாமி பிள்ளை 'ஆத்திச்சூடி' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு செய்தார். ஆசிரியர் ஸ்ரீ கோவிந்த ராஜனால் உடற்பயிற்சி ஆசனங்கள் முதலியன செய்து காட்டப்பட்டன.

### போர்டு உயர்தர பாடசாலை, வல்லம்

3—2—44-ல் பெற்றோர் சங்கக்கூட்டம் நடைபெற்றது, ஜனாப் காதர்சா சாஹேப் தலைமைவகித்தார். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர்ஸ்ரீ துரைசாமி முதலியார் 'கல்வியும் கடவுளும்' என்பது பற்றிப்பேசினார், ஜனாப் காதர் நிஜாம் சஹேப் 'கல்வி' என்பது பற்றிப் பேசினார்.

### திருவள்ளுவர் உயர்தர ஆரம்ப பாடசாலை, வீரவநல்லூர்

23—1—44-ல் 22-வது ஆண்டுவிழா, ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ நம்பி அய்யங்கார் தலைமையில் கொண்டாடப்பட்டது. காலையில் மாணவிகள் இன்னிசையோடு ஊர்வலம் வந்தனர். மாலையில் பந்தய விளையாட்டுகளில் தேர்ந்தவர்களுக்கு மனேஜர் ஸ்ரீ சுப்பிரமணியன் செட்டியார் பரிசுகள் வழங்கினார். இரவில் மாணவர்கள் 'மனோன்மணி' என்ற நாடகத்தை நடத்திக் காட்டினர்.

### ஹிந்து ஆரம்ப பாடசாலை, கிடாரக்குளம்

29—1—44-ல் பெற்றோர் சங்கம், ஸ்ரீ நமசிவாய முதலியார் தலைமையில் கூடிற்று. ஏராளமாக பெற்றோர்கள் வந்திருந்தனர். மாணவர்களால் கல்வி, சுகாதாரம், முதலியனபற்றி சொல்லாடல் முதலியன நடைபெற்றன. பின்பு, 'பெண் கல்வியும் பெற்றோரும்,' 'பெற்றோர் கடமை', 'நம் பாடசாலை' என்ற விஷயங்கள் பற்றிப் பலர் பேசினார்கள்.

### போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, மேட்டுப்பாளையம் (முசிரி)

30—1—44-ல் உதவி ஜில்லா கல்வியதிகாரி, ஸ்ரீ வீராசாமி பத்தர் தலைமையில், பெற்றோர் சங்கக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது முசிரி தமிழாசிரியர், ஸ்ரீ சோமசுந்தரம் 'மாணிக்கவாசகர்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

## பத்திராதிபர் குறிப்பு

### பஞ்சப்படி - புதிய உத்திரவு

கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்குக்கொடுக்கும் திட்டப்படியே போர்டு, முனிசிபல் உத்தியோகஸ்தர்களுக்கும் பஞ்சப்படி (Dearness allowance) கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரின் உத்திரவை எல்லாரும் நன்றியுடன் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வுத்திரவில் 'ஆசிரியர்கள் உள்பட' என்று குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். பொதுவாக பல ஜில்லா போர்டுகளிலும் முனிசிபாலிடிகளிலும் ஆசிரியர்களுக்குக் கொடுத்துவரும் பஞ்சப்படி மற்ற சிப்பந்திகளுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் குறைவாகவேயிருந்தது. என்ன காரணத்தினாலோ, ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் மற்ற சிப்பந்திகளினின்றும் ஆசிரியர்களை வித்தியாசப்படுத்தியே வருகிறார்கள். மற்ற இலாகாவிலுள்ளவர்கள் ஓரிடத்திலிருந்து மாற்றப்பட்டால் அவர்களுக்கு பிரயாணப்படி (Travelling allowance) கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆசிரியர்கள் மாற்றப்பட்டால் அவர்களுக்கு இந்தப்படி (T. A.) கொடுப்பதில்லை. ஆயினும் இவர்களை அடிக்கடி மாற்றி வருகிறார்கள். இதுபோல பல விஷயங்களில் ஆசிரியர்கள் குறைவாகவே நடத்தப்பட்டு வருகிறார்கள். மராமத்து இலாகா, வைத்திய இலாகா, சுகாதார இலாகா, மின்சார இலாகா இவைகளிலுள்ள உத்தியோகஸ்தர்கள், கவர்ன்மெண்டின் அந்தந்த இலாகா அதிகாரிகளின் நேர் ஆதிக்கத்திலிருக்கின்றார்கள். ஆசிரியர்களோ ஸ்தலஸ்தாபன அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறார்கள். கல்வி அதிகாரிகளின் ஆதிக்கம் குறைவானது, மறைமுகமானது. இது காரணங்கொண்டு, ஆசிரியர்கள் வித்தியாசமாகவே நடத்தப்பட்டு வருகிறார்கள். இதைப் பலதடவை நாம் துரைத்தனத்தாருக்கு எடுத்துக் காட்டியுள்ளோம். அவர்களும் இவ்வித்தியாசத்தை அறிந்துள்ளார்கள் என்று இந்த உத்திரவிலிருந்து தெரிகிறது. இனியாவது ஸ்தலஸ்தாபன ஆசிரியர்களுக்குச் சரியான வேலைக்குரிய நிபந்தனைகள் (Proper conditions of service) ஏற்படுத்துவார்கள் என்று நாம் நினைக்கலாமா?

---

### போர்டு ஆண் பாடசாலை, உப்புலியபுரம்

29—1—44-ல், ஸ்ரீ நாகராஜ ரெட்டியார் தலைமையில் பெற்றோர் சங்கம் கூடிற்று. டாக்டர் நரசிம்மன் 'கல்வி அபிவிருத்தி' என்பது பற்றியும், தலைமை ஆசிரியர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் 'பெற்றோர் கடமை' என்பது பற்றியும், உதவி ஸ்ரீ சங்கரன் 'ஆசிரியர் கடமை' என்பது பற்றியும், ஸ்ரீ குமாரவீர அய்யர் 'குழந்தைகளின் பிற்கால வாழ்க்கை' என்பது பற்றியும் பேசினார்கள்.

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், தாத்தையங்கார்பேட்டை

29—1—44-ல், உதவி ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ வீராசாமிபத்தர் தலைமையில், ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. 'சொல்லின் செல்வன்' என்பதுபற்றித் தமிழாசிரியர் ஸ்ரீ சோமசுந்தரமய்யர் சொற்பொழிவு செய்தார்.

### போர்டு ஆண்பெண் பாடசாலைகள், அரும்பாவூர்

25—1—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ நித்தியானந்தம் தலைமையில், பெற்றோர் சங்கம் கூடிற்று. அப்பொழுது 'பெற்றோரின் பொறுப்பும் கடமையும்' என்பதுபற்றி தலைவரும் மற்றும் சிலரும் பேசினார்கள். பெற்றோர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி மாணவர்கள் பேசினார்கள். நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பெரம்பலூர் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன்

30—1—44-ல், நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் யூனியன் தலைவர் ஸ்ரீ ஆதிசேஷய்யர் தலைமையில் நடைபெற்றது. பஞ்சப்படியை மற்ற சிப்பந்திகளைப்போல் உயர்த்தியளிக்கும்படி கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.


**S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS**

520, High Road, Triplicane, Madras.

**ஒவ்வொரு**

**உபாத்தியாயரும்**

**சேர வேண்டிய நிதி**

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு ... | ... | ரூ. 2,90,000 |
| பாலிஸிக்கள் ... | ... | 1,620 |
| யூனிட்டுகள் ... | ... | 3,125 |

★

**ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்**

கொடுக்கப்பட்டிருக்கிறது

★

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

Regd. No. M. 3473







கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. IK 219


Printed by K. Sadagopacharlar at the Liberty Press, 10, Linghi Chetty St. Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union," 520, High Road, Triplicane Madras

தொகுதி 8] [பகுதி 12

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

14 APR 1944

சுபானு ஹூ பங்குனி மீ
MARCH 1944

"முயற்சி திருவினை யாக்கும்"

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. பொருளாதார பூகோளம் .... .... .... 495
 —M. P. Rajagopal, B.A., L.T., Dip. Geog.
2. பல வகுப்புக்களும் ஒரே ஆசிரியரும் .... .... 502
 —R. பாலசுப்ரமண்ய அய்யர்
3. ஆரம்பக் கல்வியும் ஆசிரியரும் .... .... 506
 —G. ஞானம்மாள்
4. செய்தித் திரட்டு .... .... .... 509
5. பத்திராதிபர் குறிப்பு .... .... .... 513


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். வி. பி. அனுப்புவதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால், சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவிடும்படி நேயர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25௳க்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1944 மார்ச் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 2, 5, 23, 24, 38. 47.
செங்கற்பட்டு — Ch. 1, 3. 18, 37, 39.
வட ஆற்காடு — NA. 3, 4, 5, 8, 9, 12, 13, 23, 25, 40, 48, 50.
தென்னாற்காடு — SA. 5, 11, 12, 22, 24, 31, 77, 85, 88, 89, 91, 92.
தஞ்சாவூர் — Tan. 1, 3-A., 11, 12, 14, 15, 17, 20, 22, 23, 29, 44, 45, 68, 69, 70, 71, 72, 82, 84, 88, 90, 98.
திருச்சி — Tri. 3, 9, 12, 13-A, 28, 34, 47.
ராமனாதபுரம் — Rd. 1, 4, 5, 12, 13. 29, 73.
மதுரை — Md. 4, 6, 9, 14, 26.
திருநெல்வேலி — Tin. 2, 3, 4, 5, 5-A, 6, 13, 13-A, 19, 22, 23, 25, 33-B, 46, 47, 67, 70, 88, 89, 92.
சேலம் — S. 1, 2, 3, 6, 10, 19, 31, 33, 35, 40, 61, 65.
கோயமுத்தூர் — Co. 3, 4, 6, 14, 17, 18, 23, 31, 36, 40, 52, 55.
திருவாங்கூர் — Tra. 1.

முக்கிய கவனிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.

# பாலர் கல்வி


| தொகுதி 8 | 1944 ௵ மார்ச் ௴<br>ஸுபாநு ௵ பங்குனி ௴ | பகுதி 12 |
|---|---|---|


14 APR 1944

## பொருளாதார பூகோளம்

(ECONOMIC GEOGRAPHY)


BY

M. P. Rajagopal B.A., L.T., *Dip. Geog.*


பூகோள சாஸ்திரத்தில் உலகத்தில் விளையும் பொருள்களும், செய்யப்படும் பொருள்களும், அகப்படும் பொருள்களும் மனிதனால் தன் வாழ்க்கைக்கு எப்படி உபயோகப்படுத்தப் படுகிற தென்பதை கூறுவது பொருளாதார பூகோளமாம்.

பொருளாதார பூகோளத்தைப் படிப்பதின் நோக்க மென்னவெனில், ஓரிடத்தில் விளையும், செய்யப்படும், அகப்படும் பொருள்களை அவ்விடத்து இயற்கை யமைப்பு, சீதோஷ்ணம், இயற்கை தாவரம் முதலிய பூகோள விஷயங்கள் எப்படி பாதிக்கின்றன வென்றும், அப்பொருள்கள் அவைகளை உபயோகப் படுத்துபவர்களிடம் எப்படி வந்து சேர்க்கப் படுகின்றனவென்றும், அறிதலே யாகும்.

பொருளாதார பூகோளம் முக்கியமாய் மூன்று விஷயங்களைப் பற்றி கூறுகிறது:- (1) பொருள்கள் உண்டாக்குதல் (**Production**), (2) பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டுபோகப் படுதல் (**Transport**), (3) பொருள்களை மாற்றிக் கொள்ளுதல் (**Exchange**).

இப்பொழுது ஒவ்வொரு தலைப்பின் கீழ் அடங்கிய பூகோள விஷயங்கள் யாவை என்பதை கவனிப்போம்:—

1. பொருள்கள் உண்டாக்குதல் :— உண்டாகும் பொருள்கள் மூன்று வகைப்படும் ;— (1) விளையும் பொருள்கள் (**Cultivated**

145698



Products). (2) செய்யப்படும் பொருள்கள் (Manufactured Products) (3) அகப்படும் பொருள்கள் (Minerals, rocks and soils).

விளையும் பொருள்கள்:— மனிதனின் முயற்சியினால் விளையும் உணவுப் பொருள்களும், தோட்டப் பயிர்களும், வியாபார பயிர்களும், விளையும் பொருள்களெனப்படும். இவற்றைப்பற்றி நாம் படிக்கும்போது எப்படி இயற்கையமைப்பு, சீதோஷ்ணம் முதலிய பூகோள விஷயங்கள் இப்பொருள்கள் விளைவதை பாதிக்கின்றன வென்றும், அப் பூகோள விஷயங்களுக்கு அனுகூலமாக பொருள்களை எப்படி உண்டாக்கி மனிதன் தன்வாழ்க்கையை நடத்துகின்றானென்றும் கவனித்தல் வேண்டும்.

செய்யப்படும் பொருள்கள்:—(அல்லது எடுக்கப்படும் பொருள்கள்) இவைகள் மூன்று வகைப்படும்:— (1) இயற்கை தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் மரம், பட்டை, நார், மூங்கில், ரசம் முதலியன, (2) மிருகங்களிலிருந்து எடுக்கப்படும் அல்லது எடுத்து செய்யப்படும் பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி, இறைச்சி, தோல், ரோமம் முதலியன, (3) சமுத்திரம் முதலிய நீர்நிலையத்திலிருந்து எடுக்கப்படும் மீன், முத்து, முதலியன. இவைகளைப்பற்றி நாம் படிக்கும்போது எப்படி இயற்கையமைப்பு சீதோஷ்ணம், இயற்கைத்தாவரம் முதலிய பூகோள விஷயங்கள் இப்பொருள்கள் எடுப்பதை அல்லது செய்யப்படுவதை பாதிக்கின்றன வென்றும், ஒவ்வொரு இடத்தின் பூகோள விஷயங்களை அனுசரித்து மனிதன் எப்படி அப்பொருள்களை உண்டாக்கித் தன் வாழ்க்கையை நடத்துகிறானென்றும் கவனித்தல்வேண்டும்.

பொருள்கள் ஆலைத்தொழில் முறையிலாவது அல்லது குடிசைத் தொழில் முறையிலாவது செய்யப்படுகின்றன. அப்பொருள் செய்வதற்கு மூலப்பொருள்கள் எனப்படும், கச்சாப்பொருள்கள் தேவை. ஓரிடத்தில் செய்யப்படும் பொருள்களுக்கு அதிக தேவையிருந்து அவ்விடத்தில் அதிக வசதிகளுமிருந்தால் அவ்விடத்தில் ஆலைத்தொழில் ஏற்பட்டு இயந்திரசாலை அமைக்கப்படுகிறது. ஓரிடத்தில் இயந்திரசாலை ஏற்படுத்தி ஆலைத்தொழில் நடைபெறுவதற்கு கீழ்க்கண்ட விஷயங்கள் அவசியம் வேண்டும்:—(1) சீதோஷ்ணம் (கச்சாப்பொருள்கள் அல்லது செய்யப்படும் பொருள் அல்லது நடக்கும்தொழில் அவ்விடத்தின் சீதோஷ்ணத்தினால் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும். (2) கடற்கரை அருகில் இருத்தல் அல்லது கடற்கரைக்கு பொருளை எடுத்துச் செல்வதற்கு அனுகூலமிருத்தல் (செய்தபொருளை வெளிநாட்டிற்கு சுலபமாயும், சீக்கிரமாயும், குறைந்த பணச்சிலவிலும் ஏற்றுமதி செய்வதற்குவேண்டிய அனுகூலம்). (3) கச்சாப்பொருள் அருகில் அகப்படுதல் (கச்சாபொருள் அருகிலேயே அகப்பட்டால அதை இயந்திரசாலைக்கு சீக்கரமாயும் குறைந்த பணச்சிலவிலும் கொண்டுவரலாம்). (4) இயந்திரங்களை ஓட்டுவதற்கு சக்தி



(Power) இயந்திரங்கள் ஓட்ட நிலக்கரி அல்லது சக்திவேண்டும். ஆகையினால் அருகில் நிலக்கரி அகப்படவேண்டும், அல்லது நீர்விழ்ச்சி இருக்க வேண்டும்). (5) வேலைசெய்வதற்கு திறமையான ஆட்கள் (Skilled Labour) தேவை (இயந்திரசாலையில் வேலைசெய்ய பயிற்சியடைந்த ஆட்கள் அவசியம் வேண்டும்). (6) பொருளை வாங்க மார்கட் (Ready Market) அருகில் இருத்தல் (பொருளை வாங்குவதற்கு தயாராயிருக்கும் ஜனங்கள் வசிக்கும் ஒரு பெரிய பட்டணம் அருகில் இருத்தல்வெண்டும்). (7) போக்குவரவு சாதனங்கள் (பொருளை இயந்திரசாலையிலிருந்து அதை வாங்குமிடத்திற்கு கொண்டுபோக மார்க்கங்கள் சௌகர்யமாயிருக்க வேண்டும். எந்த மார்க்கம் அனுகூலமாயிருக்கிறதோ அந்த மார்க்கத்தை ஏற்படுத்த வேண்டும்).

அகப்படும் பொருள்கள்:—இவைகள் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படும் உலோகங்களும், பாறைகள். மண்வகைகளும், ஆகும். இவைகளைப்பற்றி நாம் படிக்கும்போது எப்படி ஓரிடத்தில் இயற்கையமைப்பு, சீதோஷ்ணம் முதலிய பூகோள விஷயங்கள் அப்பொருள்கள் பூமியில் அகப்படுவதையும் அவைகளை மனிதன் வெட்டியெடுத்து தனக்கு உபயோகப்படும்படி செய்வதையும் பாதிக்கின்றன வென்பதை கவனித்தல் வேண்டும்.

(1) பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டு போகப்படுதல்:—பொருளாதார பூகோளத்தில் உலகத்திலுள்ள பொருள்களைப்பற்றி மாத்திரம் தெரிந்து கொண்டால் போதாது அப்பொருள்கள் அவைகளை உபயோகப்படுத்துபவர்களிடம் எப்படி கொண்டு சேர்க்கப்படுகிறதென்பதையும், அவ்வாறு அவைகள் சேர்க்கப்படுவதற்கு பூகோள விஷயங்கள் எப்படி இடையூறாக அல்லது அனுகூலமாக இருக்கின்றன வென்றும் அறிதல்வேண்டும்.

பொருள்களை, உண்டாகும் அல்லது செய்யப்படும் அல்லது அகப்படும் இடங்களிலிருந்து அவைகளை உபயோகப்படுத்துபவர்களிடம் சேர்ப்பதற்கு மூன்றுவித மார்க்கங்கள் உள்ளன:— (1) நில மார்க்கம், (2) நீர் மார்க்கம், (3) ஆகாய மார்க்கம். நில மார்க்கத்தைப் பாதிக்கும் முக்கியமான பூகோள விஷயம் இயற்கையமைப்பு. நீர் மார்க்கத்தையும், ஆகாய மார்க்கத்தையும் பாதிக்கும் முக்கியமான் பூகோள விஷயம் சீதோஷ்ணம். மனிதன் தன் வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு பொருளை அடைவதற்கு எந்த மார்க்கத்தைக் கைக்கொள்ளுகிறானென்றும், அந்த மார்க்கத்திற்கு அவ்விடத்திலுள்ள இயற்கையமைப்பு, சீதோஷ்ணம், அனுகூலமாயிருக்கிறதாவென்று அவன் எப்படி கவனிக்கிறானென்றும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். பூகோள விஷயங்களைத் தவிர ஒரு மார்க்கத்தில் செல்லும் தூரம், செல்லும் நேரம், அபாயம், சக்தி, பணச்சிலவு. முதலிய பொது விஷயங்களைப்பற்றியும் நாம் அறிதல்வேண்டும்.

(3) பொருள்களை மாற்றிக்கொள்ளுதல்:— ஒருடத்தில் ஓர்பொருள் உண்டாக்கப்பட்டு, அல்லது செய்யப்பட்டு அல்லது அகப்பட்டால், அவ்விடத்து மனிதன் அப்பொருள் தனக்கு அவசியமாயில்லாவிட்டால் அல்லது அதிகமாயிருந்தால் அவன் அப்பொருள் இல்லாத அல்லது குறைவாகவிருக்கும் இடத்திற்கு அதையனுப்பி, அங்கிருந்து தனக்கு வேண்டிய பொருள்களை எப்படித் தருவித்துக் கொள்ளுகிறானென்றும், இவ்விதம் பொருள்களை மாற்றிக்கொள்வதற்கு பூகோள விஷயங்களான இயற்கையமைப்பு, சீதோஷ்ணம் நாம் அறிதல்வேண்டும்.

பொருள்களை மாற்றிக்கொள்ளுதல் ஒரு தேசத்திலேயே ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கும், அல்லது உலகத்தில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும் நடைபெறும்.

கீழ் வகுப்பிலுள்ள மாணவர்களை அவர்கள் வசிக்கும் ஊர்களிலுள்ள பொருள்கள் எவைகளென்று கவனித்து அப்பொருள்கள் சம்பந்தமான பூகோள விஷயங்களை தெரிந்துகொள்ள நாம் பழக வேண்டும். நமக்கும் பிராணிகளுக்கும் உணவாகும் பொருள்கள் எவையென்றும், இவைகள் எக்காலங்களில் கடைகளில் கிடைக்கின்றனவென்றும் மாணவர்கள் நேரில் பார்த்து அறியவேண்டும். உள்ளூரில் நாம் உபயோகப்படுத்தும் செய்யப்படும் பொருள்கள் எவையென்றும், அவைகளுடைய கச்சாப்பொருள்கள் எங்கிருந்து வருவிக்கப்படுகின்றனவென்றும், ஊரில் செய்யப்படாத நாம் உபயோகிக்கும் பொருள்கள் எவையென்றும், அவைக்ள் எங்கு செய்யப்பட்டதென்றும் பிள்ளைகள் நேரில் பார்த்து அல்லது விசாரித்து அறிதல்வேண்டும். உள்ளூரில் உள்ள சந்தை அல்லது மார்க்கட்டுக்கு மாணவர்களை அழைத்துசென்று அங்கு விற்கப்படும் பொருள்களில் உள்ளூரில் அகப்படும் பொருள்கள் எவையென்றும் கவனிக்கச்செய்யவேண்டும். கீழ் வகுப்புகளிலேயே உள்ளூரிலுள்ள ஜனங்களின் வாழ்க்கை எப்படியென்று மாணவர்கள் நேரில் பார்த்து அறியவேண்டும். ஊரில் எவ்வித ஆலைத்தொழில்கள் அல்லது குடிசைத்தொழில்கள் நடைபெறுகின்றனவென்றும் ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் ஜனங்கள் யாவரென்றும், செய்யப்படும் பண்டங்கள் எங்கு அனுப்பப் படுகின்றனவென்றும், நாம் பிள்ளைகளுக்குச் சொல்வதைவிட அவர்கள் நேரில் பார்த்து விசாரித்து அறிதல் மிகவும் நல்லது. இவ்விதமாக பொருளாதார பூகோளத்தை சிறுவர்களுக்கு புகட்டுவது 'நேரில் பார்த்து கற்றல்' (**Observational Study**) என்னும் முறையில் நடத்துவதே முறையாகும்.

உள்ளூரிலுள்ள பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி செய்த பிறகு, மேல் வகுப்புகளில் மாணவர்களுக்கு வெளிநாட்டில் எவ்விதமான பொருள்கள் விளைகின்றன, அல்லது செய்யப்படுகின்றன அல்லது அகப்படுகின்றனவென்றும், அப்பொருள்களை அவ்விடத்து பூகோள விஷயங்



கள் எவ்வாறு பாதிக்கின்றனவென்றும், அவ்விடத்திலுள்ள மனித வாழ்க்கை யெப்படியென்றும் கற்பித்தல்வேண்டும். முதலில் கதைகள் மூலமாய் இந்தியாவிலும்,வெளிநாடுகளிலும் சில முக்கிய பிரதேசங்களில் உள்ள ஜனங்களின் வாழ்க்கையைப்பற்றிச் சொல்லவேண்டும். கண்டங்களைப்பற்றி படிக்கும்போது ஒவ்வொரு கண்டத்தையும் சில முக்கிய இயற்கை பிரதேசங்களாய் பிரித்து அந்தந்த பிரதேசத்தில் பூகோள விஷயங்களால் பாதிக்கப்படும் பொருளாதாரத்தை அனுசரித்து எப்படி அந்த பிரதேசத்து ஜனங்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்களென்பதையும், ஒரு இயற்கை பிரதேசத்தின் ஜனங்களின் வாழ்க்கைக்கும் மற்றொரு இயற்கை பிரதேசத்தின் ஜனங்களின் வாழ்க்கைக்கும் வித்தியாசம் ஏற்பட காரணத்தையும் மாணவர்களுக்கு புகட்டவேண்டும். உலகத்தை பொதுவாய் கற்பிக்கும்போது, முழு உலகத்தையும் பெரிய இயற்கை பிரதேசங்களாகப்பிரித்து, ஒரு இயற்கை பிரதேசத்திலடங்கிய ஒவ்வொரு கண்டத்தின் பாகத்திலும் மனித வாழ்க்கை ஒத்திருப்பதையும், அதற்கு காரணம் ஒரே விதமான பூகோள விஷயங்களால் பாதிக்கப்படும் ஒரே விதமான பொருளாதாரம் ஒரு இயற்கை பிரிவின் கீழ் சேர்க்கப்படும் கண்டங்களின் பாகங்களில் இருப்பதாலென்பதையும் மாணவர்களுக்கு தெளிவாய் விளக்கி கற்பித்தல்வேண்டும்.

உலோகங்களைப்பற்றி கற்பிக்கும்போது, கீழ்வகுப்புகளில் மாணவர்களுக்கு மிகவும் பழக்கமுள்ள வஸ்துக்களை எடுத்துக்கொண்டு அவைகளின் மூலமாய்,உலோகங்கள் எப்படி அகப்படுகின்றனவென்றும் எங்கு அகப்படுகின்றனவென்றும் கற்பித்தல்வேண்டும். உதாரணமாக, ஒரு ரூபாயை எடுத்துக்கொண்டு அதில் எந்தெந்த உலோகங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்றும்,அவைகள் எவ்விடங்களிலிருந்துவருகின்றனவென்றும் சொல்லவேண்டும். பிறகு, உலோகங்கள் பூமியில் எவ்வித பாறைகள் அகப்படுகின்றன அவைகளை வெட்டியெடுத்தல், சுத்தப்படுத்தல், அவைகளின் உபயோகங்கள் முதலிய பொது விஷயங்களைச் சொல்லவேண்டும். மேல்வகுப்புகளில் கண்டங்களைப்பற்றி படிக்கும்போது ஓரிடத்தில் உலோகங்கள் அகப்பட்டால் அவ்விடத்தில் இயந்திர தொழிற்சாலை ஏற்படுவதும், உலோகங்கள் அகப்படாத இடங்களில் ஆலைத்தொழில் அபிவிருத்தியடையாததும், உலோகங்களை வெட்டியெடுக்கும் தொழில் அவ்விடத்து பூகோள விஷயங்களால் எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்றும், பிள்ளைகள் நன்கு அறியவேண்டும்.

போக்கு வரவு சாதனங்களைப்பற்றி கற்பிக்கும்போது, கீழ்வகுப்புகளில், உள்ளூரில் போக்குவரவு சாதனங்கள் எப்படியென்றும், நமக்கு பொருள்கள் எந்தெந்த மார்க்கங்களினால் வருகின்றனவென்றும்,பொருள்களை எப்படி வெளியூர்களுக்கு அனுப்புகிறோமென்பதை மாணவர்கள் நேரில் பார்த்து அறிதல் வேண்டும். மேல் வகுப்புகளில் ஒவ்வொரு கண்டத்திலும் போக்குவரவு சாதனங்கள் அவ்விடத்து பூகோள விஷயங்

களை அனுசரித்து எப்படி ஏற்பட்டிருக்கின்றனவென்றும், உலகத்தில் பொதுவாயுள்ள நிலமார்க்கங்கள், நீர் மார்க்கங்கள், ஆகாயமார்க்கங்கள் எவைகளென்றும், எப்படி அமைக்கப் பட்டிருக்கின்றனவென்றும், நாம் கற்பித்தல்வேண்டும்.

பொருள்களை மாற்றுதலைப்பற்றி கற்பிக்கும்போது கீழ் வகுப்புகளில் மாணவர்கள் உள்ளூரில் எந்த பொருள்கள் வருகின்றன அல்லது இறக்குமதியாகின்றன, எவை வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன அல்லது ஏற்றுமதியாகின்றனவென்று கவனித்தல்வேண்டும். துறைமுகத்திற்காவது அல்லது ரயில்வே ஸ்டேஷனுக்காவது மாணவர்களை நேரில் அழைத்துச்சென்று வெளியே அனுப்பப்படும் பொருள்கள் எவை, உள்ளூருக்கு வரும் பொருள்கள் எவையென்றும் அறியச்செய்ய வேண்டும். மேல் வகுப்புகளில் இந்திய வெளிநாடுகளுடன் பண்டங்களை மாற்றிக்கொள்வதையும், உலகத்தில் தேசங்கள் ஒன்றுக்கொன்று பொருள்களை மாறிக்கொள்வதையும் மாணவர்கள் அறியவேண்டும்.

கீழே கொடுத்திருக்கும் அட்டவணையில், ஆரம்பப்பள்ளிக்கூடத்து பாடத்தில் குறிப்பிட்டுள்ள பொருள்களை எந்தெந்த தேசங்கள் எவ்வளவு பங்கு தயாரிக்கின்றனவென்றும், பொருள்களை உண்டாக்குதலில்உலகத்தில் இந்தியாவின் ஸ்தானம் என்னவென்றும் காட்டப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர்கள் ஒவ்வொரு பொருளையும் ஒரு படமாய் வரைந்து, ஒரு தேசத்திலுள்ள பங்கை படத்தின் அளவினால் விளக்கி கற்பித்தல் வேண்டும் (Pictorial representations of statistics of world Production) வெறும் எண்களை சொல்வதைவிட அவைகளை காண்பிக்கும் வரைந்த படங்களைக் காண்பித்தால் மாணவர்களுக்கு மிகவும் நன்றாய் விளங்கும். உதாரணமாக, நெல் விளைச்சலைப்பற்றி விளையும் தேசங்களின் பங்குகளை, அரிசி மூட்டைகள்போல் படம் வரைந்து, அளவுகளுக்கு தகுந்தாற்போல் பெரியதாகவும் சிறியதாகவும் படங்களை வரைந்தால் மாணவர்கள் எவ்விடத்தில் விளைச்சல் அதிகம், அதற்கடுத்தபடி விளைச்சல் எதில்அதிகம் என்று படங்கள் அளவைப்பார்த்து தெரிந்து கொள்வார்கள். இந்தியாவின் ஸ்தாபனத்தை விளக்க ஒரு வட்டம் வரைந்து அதில் இந்தியாவின் பங்கை வட்டத்தின் ஒரு வட்ட கோணம்சமாக (Sectar of a Circle) காண்பித்து, அவ்வட்ட கோணம்சத்தை மாத்திரம் கறுப்பு வர்ணமிட்டால், அந்தவட்டத்தை மாணவர்கள் பார்த்தவுடன் உலகத்தில் இந்தியாவின் பங்கு இவ்வளவு என்று சீக்கிரம் அறிவார்கள்.

பொருளாதார பூகோளத்தை கற்பிப்பதற்கு இவ்விதமான படங்களையும் வட்டங்களையும் உபாத்தியாயர் வரைந்து வைத்துக்கொண்டு, சொல்லிக்கொடுப்பதற்கு உதவியாக (Teaching aids) உபயோகிக்க வேண்டும்.



| பொருள்கள் (Products) | உலகத்தில் உண்டாக்குதலில் தேசங்களின் சதவீதம் (Precentage of countries in world productiod | உலகத்தில் உண்டாக்குதலில் இந்தியாவின் ஸ்தானம் (India's position in world production) |
|---|---|---|
| 1. கோதுமை | ரஷ்யா 30%; ஐக்கிய நாடுகள் 16%; கனடா 11%; இந்தியா 7%; இதர நாடுகள் 26%. ... | நான்காவது |
| 2. நெல். | சீனா 35%; இந்தியா 26%; பர்மா 6%; இதர நாடுகள் 4%; ... ... ... | இரண்டாவது |
| 3. கரும்பு | இந்தியா 18%,, க்யூபா 16%; கிழக்கு இந்தியத் தீவுகள் 8%; இதர நாடுகள் 58% ... ... | முதலாவது |
| 4. காப்பி | பிரேசில் 62%; கொலம்பியா 11%; கிழக்கு இந்தியதீவுகள் 5%; இந்தியா 2%; இதர நாடுகள் 20% | நான்காவது |
| 5. தேயிலை | சீனா 49%; இந்தியா 23%; சிலோன் 12%; இதர நாடுகள் 16% ... ... ... | இரண்டாவது |
| 6. ரப்பர் | மலேயா 43%; கிழக்கு இந்தியத் தீவுகள் 40%; சிலோன் 5%; இதர நாடுகள் 13% ... | — |
| 7. புகையிலை | ஐக்கிய நாடுகள் 28%; இந்தியா 22%; ரஷ்யா 12%; இதரநாடுகள் 38% ... ... | இரண்டாவது |
| 8. பருத்தி | ஐக்கிய நாடுகள் 41%; இந்தியா 15%; சீனா 13%; ரஷ்யா 13%; எகிப்து 7%; இதர நாடுகள் 11%; | இரண்டாவது |
| 9. எண்ணெய் வித்துகள் | சீனா 45%; இந்தியா 30%; ஐக்கிய நாடுகள் 20%; இதரநாடுகள் 5% ... ... | இரண்டாவது |
| 10. சணல் | இந்தியா 99%; இதர நாடுகள் 1% ... | முதலாவது |

செய்யப்படும் அல்லது எடுக்கப்படும் பொருள்கள்.

| | | |
|---|---|---|
| 1. ரோமம் | ஆஸ்ட்ரேலியா 27%; ஐக்கிய நாடுகள் 12%; அர்ஜைன்டினா 10%; இதர நாடுகள் 51% ... | — |
| 2. பட்டு | ஜப்பான் 84%; சீனா 10%; இத்தாலி 4%; இதர நாடுகள் 2% ... ... ... | — |
| 3. தோல் | பிரிட்டிஷ் தீவுகள் 15%; இந்தியா 13%; அர்ஜைண்டினா 12%; இதர நாடுகள் 60% ... | இரண்டாவது |
| 4. மீன் பிடித்தல் | ஜப்பான் 50%; பிரிட்டிஷ் தீவுகள் 16%; நார்வே 14%; இதர நாடுகள் 20% ... ... | — |

அகப்படும் பொருள்கள்.

| | | |
|---|---|---|
| 1. நிலக்கரி | ஐக்கிய நாடுகள் 30%; பிரிட்டிஷ் தீவுகள் 20%; ஜர்மனி 16%; இந்தியா 2%; இதரநாடுகள் 32% | — |
| 2. இரும்பு | ஐக்கிய நாடுகள் 49%; பிரான்ஸ் 13%; பிரிட்டிஷ் தீவுகள் 5%; இந்தியா 2%; இதர நாடுகள் 12%. ... ... ... | — |
| 3. மண்ணெண்ணெய் | ஐக்கிய நாடுகளும், மெக்ஸிகோவும் 68%; ரஷ்யா 10%; வெனிஜூலா 9%; பாரசீகம் 3%; இந்தியா, பர்மா 2%; இதர நாடுகள் 8%. ... | — |

# பல வகுப்புக்களும் ஒரே ஆசிரியரும்

**R. Balasubrahmania Ayyar**

*Secretary, Teachers' Association, Pudur centre, Koilpatti Range*

(நான், எனது கடந்த 10 வருஷ அநுபவத்தைக்கொண்டும், பரீக்ஷாதிகாரிகள் கொடுத்துள்ள குறிப்பைக் கொண்டும், கிராமாந்திரங்களில் வேலை செய்யும் ஆசிரியர்கள் இக்கட்டுரையை வாசித்து, இதில் சொல்லப்படும் முறைகளைப் பின்பற்றி, வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடனும், இதை எழுதத்துணிந்தேன். ஆசிரிய நண்பர்கள் இம்முறைகளை அநுசரித்து முழுமனதுடனும், ஊக்கத்துடனும் வேலை செய்வார்களாயின் அவர்களுடைய துறையில் வெற்றி பெறுவதோடு, நம்நாட்டு சிறுவர் சிறுமிகளுக்கு தற்காலக் கல்வி திறம்பட அளிக்கப்படும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.)

சுருங்கச் சொல்லின் ஒரு வகுப்பை வெற்றிகரமாய்ச் சிறந்த முறையில் போதிக்கும் திறமை வாய்ந்த ஆசிரியரே, ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளை பயிற்சியின் பயனாக திறம்பட நடத்தக் கூடியவராவர்.

ஒன்றுக்கு மேலாக 2, 3 வகுப்புகளை திறமையுடன் நடத்தும் பிரச்னையானது ஒரு வினாடியையும் வீணாக்காது பயன் படுத்துவதைப் பொருத்துளது. அதாவது கொடுக்கப்பட்ட ஒரு வேலையில் ஒரு விநாடி கூட வீணாக்காது அதி சீக்கிரத்தில் எவ்விதம் சிறந்த முறையில் பயிற்சியளிக்கலா மென்னும் அறிவை ஆசிரியர் அடைந்து கொள்வதேயாகும். தன்னை அதில் ஒரு திறமை சாலி (an expert) யாக்கிக் கொள்வதேயாகும்.

இவ்வித போதனைக்கு பின் வரும் நான்கு விஷயங்கள் நன்கு கவனிக்கப்பட வேண்டும்.

I. ஆசிரியர் தன்னை இம்முறை போதனைக்குத்தகுதியுள்ளவராக்கிக்கொள்ள விசேஷித்த பயிற்சி பெறவேண்டும். இதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் (*a*) காலத்தை வீணாக்காது பயன் படுத்திக் கொள்ள ஆசிரியர் தகுந்த முன் ஆயத்தம் செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். வகுப்பில் தான் படிப்படியாகச் செய்யப் போகும் வேலை இன்னது, எவ்விதம் பிள்ளைகளைப் பரிசோதித்து பிள்ளைகளின் அறிவு முதிர்ச்சி எம்மட்டில் இருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளலா மென்றும் பிள்ளைகளின் முன்னறிவுக்குத் தக்க படியாக என்னென்ன வேலைகளை எப்பொழுதெப்பொழுது கொடுக்கலா மென்றும் ஆசிரியர் தீர ஆலோசித்து அறிந்து கொள்வது மட்டுமென்றி குறித்து வைத்துக் கொள்ளுதலு மவசியமாகும். வகுப்புகள் ஒன்றுவது



காலத்தை வீணாக்காமல் நல்ல பலன்தரும் முறையில் ஈடு படுவதற்கு ஆசிரியரின் முன் யோசனை, ஆயத்தம், அவசியமாவதோடு வகுப்புகளில் ஒன்று போதனை வகுப்பு (**Teaching class**) என்றும் மற்றவை படிக்கும் வகுப்பு (**Study class**) என்றும் கருதப் படல் வேண்டும்.

(*b*) 2, 3 வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர் யோசனை மிகுந்த தெளிவான மனதுடையவராயும், சுறுங்கச் சொல்லி விளங்கச் செய்பவராயும் தெளிவான குரலுடையவராயும், ஒரே சொல்லுடையவராயும் (திரும்பத்திரும்பச் சொல்லாமல்) இருப்பது மன்றி, வகுப்புக்கள் நன்கு ஒழுங்குடனிருக்கப் பயிற்சிக்கப் பட்டவைகளாயு மிருக்க வேண்டும். அவ்வித மிருப்பின் ஒவ்வொரு விநாடியும் பயன் படுவதோடு ஆசிரியரின் சக்தி (**energy**) யும் குறைவு படாமலிருக்கும்.

(*c*) பாடசாலை நடத்தும் விஷயத்தில் ஆசிரியர் சில திட்டவட்டமான விதிகளை பாடசாலையில் அமுலில் இருக்கும்படிச் செய்தல் அவசியம். உதாரணமாக (1) வேலை ஆரம்பிக்கும் நேரம், (2) பாடம் கற்பிக்கும் நேரம், (3) தினசரி ஆஜர் குறிக்கும் நேரம், (4) விளையாடும் நேரம், (5) வேலை முடியும் நேரம்; இவை ஒவ்வொன்றிலும் பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர் பிள்ளைகளின் பழக்கத்துக்கு கொண்டு வரவேண்டும்.

II. பிள்ளைகளை இம்முறைக்குப் பழக்கப் படுத்துவது:—எவ்விதப் பயிற்சிக்கும் அடிப்படையானது பிள்ளைகளின் தீவிர கவனமேயாகும். பிள்ளைகளின் கவனத்தை நாம் நடத்தும் வேலைக்குச் சாதகமாக்கிக் கொள்வது மிகவும் அவசியம். இதோடு மாணவர்களை, குறிப்பிட்டகாலத்தில் ஆசிரியருடைய கட்டளைப்படி திட்டவட்டமாய், கவனத்துடன் நடந்து கொள்ள பயிற்சிப்பது போதனை பயன்பட இன்றியமையாதது. ஆகையால் மாணவர்கள் தாங்கள் ஒவ்வொரு நேரத்திலும் செய்ய வேண்டியது இன்னது என்பதை குறிப்பாக அறிந்து தத்தமிடங்களில் இருந்து கொண்டு தத்தம் வேலையில் ஈடுபடப் பழக்குவது இம்முறையில் இரு திறத்தாரும் வெற்றிபெற அச்சாணி போன்றதாகும்.

மௌன வாசிப்புப் பயிற்சி கொடுக்கப் பட்டு அதன் பயனைப் பிள்ளைகள் பெறும் படியாகச் செய்தல் சிறந்த முறையாகும். இந்த வாசிப்பு முறையில் இம் முறை பலன்தர ஆசிரியரின் திறம்பட்ட பரிசோதனை மிகவும் அவசியம். இதற்கு "ஆசிரியன் (1) சுறு சுறுப்பு (2) ஆயத்தம் (3) பிள்ளைகள் தாமாகவே ஆசிரியரிடம் கேள்வி கேட்கும் பழக்கமும் தேவையாகும். பற்பல பாடங்களிலும் பிள்ளைகள் செய்ய வேண்டியது என்ன வென்றும் அறிவை அடைந்து கொள்ளுதல் அவசியமாகும். (உ-ம்) கணிதம் (1) கொடுக்கப்பட்ட வேலையை சுத்தமாகவும் முறையுடனும் தன்னந் தனியே அமைதியாகச் செய்யப் பழகுதல்

(2) பிள்ளைகள் தாமாகத் தங்கள் வேலையைச் சரி பார்த்து மதிப்பிடுதல் (3) கடைசியில் பிள்ளைகள் செய்ததைச் சரி பார்த்தல்.

எழுத்து வேலை :—(*a*) வியாசம் எழுதுதல் பிள்ளைகள் கொடுக்கப்பட்ட விஷயத்தைத் தாமாகவே யோசித்து அமைதியாக எழுதப் பழகுதல். (*b*) டிக்டேஷன் (1) திறமையுள்ள ஒரு பையனைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு பத்தியையோ வாக்கியங்களையோ பிள்ளைகளுக்கு விளங்க வாசித்து எழுதப் பழகுதல் (2) பிள்ளைகள் ஒவ்வொருவரும் தாமாகவே பிழை திருத்தப் பழக்கு வித்தல் (3) கடைசியில் பிள்ளைகளின் வேலையை ஆசிரியர் பரிசோதித்தல்.

**III.** போதனைக்கு வேண்டிய உபகரணங்களைத் தயாரித்தல் :—பற்பல பாடங்களிலும் பல முக்கிய விஷயங்களை விளக்கும் அட்டவணைகள், விளக்கப் படங்கள், இதர உபகருவிகள், இவைகளை ஆசிரியர் முன்பாகவே தயாரித்து வைத்துக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக நான்கு முக்கிய விதிகளிலும் பிள்ளைகளுக்கு வேகமும் பிழையின்மையும் ஏற்படுவதற்காக தமிழ் வாய்ப்பாடு அட்டவணைகளை இடைக்கிடையே உபயோகித்தல்; தனிப் பயிற்சிக்கான கார்டுகளை விஷய வாரியாகத் தயாரித்து வைத்துக் கொள்ளுதல்; பலவித அளவை வாய்ப்பாடுகளையும் (Tables) தனித் தனியாக எழுதி உபயோகித்தல்; வாசிப்புக்கான எழுத்துப் பயிற்சித் தாள்கள் (Sheets), பற்பல பாடங்களிலிருந்தும் பற்பல புத்தகங்களிலிருந்தும் முக்கிய பொருள்கள் அடங்கி யுள்ளவையாகத் தயாரித்தல்; சிறு பிள்ளைகளுக் கேற்ற சிறு கதைகள், போதனைகளடங்கிய புத்தகங்களை சேகரித்து வைத்து உபயோகித்தல். பற்பல விதமான மாதிரிக் கடிதங்கள், அழைப்பிதழ்கள் அறிக்கைகள்; அறிவிப்புகளையும் சேகரித்து உபயோகித்தலும் நலம் தரும்.

**IV.** தகுதியான கால அட்டவணை (time table) தயாரித்து உபயோகித்தல்; ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளை ஒரே ஆசிரியர் நடத்தும் பள்ளிக்கூடங்களின் கால அட்டவணையானது தகுந்த முன் ஆலோசனையுடன் வருஷ ஆரம்பத்திலேயே தயாரிக்கப் பட்டு பரீக்ஷாதிகாரிகளின் அப்ரூவல் பெற்றவையாயு மிருக்க வேண்டும். இதர பாடசாலைகளின் கால அட்டவணையின் நகல் ஒன்று தயாரித்து வைத்துக் கொண்டு போதிக்கும் பழக்கம் கூடாது, இதில் (1) பிள்ளைகளின் மனோ தேக நிலைக்கு போதிய சாந்தி யளித்தல் (2) பாடங்களின் முக்கியத்துவம், தன்மை இவைகளைக் கவனித்து பாடங்களை ஒழுங்குப் படுத்தல் (3) ஒரு தினத்தில் நடத்தப்படும் பாடங்களை அவைகளின் தன்மைக்கும் முக்யத்துக்கும் அனுகுணமாக ஆரம்ப காலங்களில் முக்கிய பாடங்களும் பிற் பகுதியில் அங்கங்களுக்கு சுறு சுறுப்பு உண்டாக்கக் கூடிய பாடங்களைக் நன்கு ஆராய்ந்து அமைத்தல் (4) இவ்வித போதனைக்குத் தகுந்த வகுப்புக்களை சேர்த்து அமைத்தல் (**grouping of classes**). (ஆரம்ப வகுப்புக்கள் கூடிய வரையில் ஆசிரியரின் கவனத்தையும் போதனையையும் அனுதினமும் அதிகமாக பெறுதல் ஒரு கவனிக்கத்தக்க விஷயம்).



ஒரு ஆசிரியர் போதிக்கும் பாடசாலையில் ஆசிரியர் கவனிக்க வேண்டிய முக்கிய விதிகள்.

இப்பாடசாலை ஆசிரியர் பாடசாலையில் சேரும் ஒவ்வொரு பிள்ளையையும் நாளுக்கு நாள் அறிவில் விருத்தியாகி வருஷக் கடைசியில் அந்தந்த வகுப்புகளுக்குத் தகுந்த தேர்ச்சி காணப்படும் படியான சிறந்த நோக்கத்தோடு முயற்சி செய்ய வேண்டும். இவ்விதமான முயற்சி வெற்றிபெற (1) இப்பாடசாலையின் ஒழுங்கு (**organization**) இதர பாடசாலைகளை விட சிறந்ததாயும் (**perfect**) பூர்த்தியாயும் (**complete**) இருக்க வேண்டும். (2) இப்பாடசாலை ஆசிரியரின் சுய பயிற்சி (**self training**) பயிலும் மாணவனின் பயிற்சி (**pupils' training**) ஆகிய இவை மற்றப் பாடசாலைகளை விட மேம்பட்டிருக்க வேண்டும். (3) கால அட்டவணையானது முழு கவனத்தோடும் தகுந்த முன் ஆலோசனையோடும் தயாரிக்கப் படவேண்டும். (4) பாட திட்டமானது ஏனைய பள்ளிகளின் திட்டத்தைப் போலல்லாமல் முக்கிய விஷயங்களை மட்டும் கோர்வையாக அடக்கிக் கொண்டிருத்தல் வேண்டும். (5) ஆரம்பிகள் (**beginners**) தினந்தோறும் ஒழுங்கும் கவனமுமுள்ள போதனையைப் பெறும்படி அமைத்தல் மிகவும் அவசியம், (6) ஒவ்வொரு தினத்திலும் மானீட்டர்களை நியமித்து, சில காலங்களில் அவர்களை மேல் வகுப்புக்களை மேற் பார்வை செய்யும்படி பழக்கலாம். (7) இதன் ஆசிரியர் முக்கியமாக மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில்—ஒவ்வொரு நாளும், ஆசிரியரும், மாணவர்களும் (வகுப்பு வாரியாக) தாங்கள் ஒவ்வொரு மணி நேரத்திலும் செய்ய வேண்டியவைகளைப் பற்றிய திட்ட வட்டமான அறிவு உடைத்தாயிருத்தல் மிகவும் அவசியமாகும். இவ்வித அறிவு ஏற்படுவதற்கு இப் பள்ளிக்கூட ஆசிரியர் இதர ஆசிரியர்களை விட விசேஷித்து ஆயத்தம் செய்து கொள்ள வேண்டு மென்பது மிகவும் தெளிவாக உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கும்.

ஆகையால் ஆசிரியர்கள் தங்களுடைய குறுகிய மனப் பான்மையை அகற்றி விட்டு, தங்கள் மேற்கொண்ட தொழிலின் தெய்வீகத் தன்மையையும், தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட தெய்வீகத் தன்மை பொருந்திய இளம் மதலைகளுடைய பிற்கால வாழ்வையும் தங்களுடைய இலக்ஷியமாய்க் கொண்டு, மனம், மொழி, மெய்யார ஈடுபட்டு தங்கள் கடமைகளைச் செய்து வருவார்களாயின் 'தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்தோம்' என்ற மனச்சாந்தி பெறுவதோடு சமூகத் தொண்டு, தேசத் தொண்டு இவைகளை முழுமனத்தோடு செய்த தியாக சாலிகளாகி, கடவுளின் அன்புக்கும் அனுக்கிரகத்துக்கும், பாத்திரர்களாவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

# ஆரம்பக் கல்வியும் ஆசிரியரும்

[திரு. G. ஞானம்மாள், உதவி ஆசிரியை,
பஞ்சாயத்துப் போர்டு பாடசாலை, இராமலிங்கபுரம்]

தற்காலம் இருந்துவரும் கல்வி முறையானது ஏற்பட்டுச் சுமார்
100 வருட காலம் ஆகிறது. கல்வி கற்பது என்பதை எழுதப் படிக்க,
கணக்குக் கூட்டத் தெரிந்துகொள்வதுதான் என்று முற்காலத்
தில் கருதி வந்திருக்கிறார்கள். காவியங்களில் பொருள் தெரியாமல் மனப்
பாடம் செய்து ஒப்புவிக்கும்படி செய்வார்கள். இவ்வகையான மனப்
பாடம் செய்யும் கல்வி முடிவுபெற ஒரு மாணாக்கனுக்குக் குறைந்தது
12 வருடங்கள் பிடிக்கும். எழுத்துக்கள் மட்டும் தெரிந்துகொள்வதற்
குக் குறைந்தது 4 வருடங்கள் செல்லும்.

பள்ளிக்கூட ஆசிரியர் வேலையை வகிப்பவர்கள் நல்ல புத்தியும்,
பொறுமையும், மாசுமறுவற்ற மனமும் உடையவர்களாய் இருத்தல்
வேண்டும். உபாத்திமைத் தொழில் எவ்வளவோ சிறந்ததும், பொறுப்
புள்ளதும், கௌரவம் பொருந்தியதுமான வேலையாகும். மற்ற உத்தி
யோகங்கள் எல்லாவற்றிலும் எந்த வழியிலாவது பலவித தீச்செயல்கள்
நேரிடக்கூடும். இதிலோ அப்படியில்லை, இது தருமத்தைப்போல
கொடுப்பவனுக்கும் பெறுபவனுக்கும் நன்மையையே கொடுக்கும் சுபா
வம் உடையதாய் இருக்கிறது. இத்தகைய சிறப்பியல்பு உடைய நல்ல
ஆசிரியர்களுக்கும் போதிய அளவு ஆதரவும் உற்சாகமும் அளிக்கப்பட
வில்லை. ஆனால் பல ஆரம்பாசிரியர்களிடை இந்தப் பண்புகள் காணப்
படவில்லை. சில ஆசிரியர்கள் குழந்தைகளைப் பழக்கவேண்டிய மிருகங்
கள் என்றே எண்ணிப் பெருந்தீங்கு உண்டுபண்ணி விடுகிறார்கள். குழந்
தைகளைத் தங்கள் ஆத்திரம் தீர அடிப்பதும், ஏழை பணக்காரப் பிள்ளை
களிடம் பாரபட்சமாக நடந்துகொள்வதும், எப்பொழுதும் கோப
மாகவே இருப்பதும் இன்றும் வழக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது.
அநேக ஆசிரியர்களுக்குத் தாங்கள் படித்துத் தெரிந்த சிறிதளவு கல்வி
யையும் பிரம்புகொண்டு அடித்தல், கிள்ளுதல், முதுகு ஒடியும்படி
குனியவைத்தல் முதலிய உபகரணங்கள் இன்றிப் போதிக்கத் தெரி
யாது. ஒரு பையன் குற்றம் செய்தால் எல்லோரையுமே அடித்தல்
சர்வ சாதாரணம். பள்ளிக்கூடத்திற்கு எல்லாப் பையன்களும் முந்தி
வரவேண்டும் என்பதற்காக "ஏறம் போடுதல்" என்ற வழக்கம்
இருந்துகொண்டிருந்தது. இதில் விசேடம் என்னவென்றால் முதலில்
வந்தவனுக்கும் அடியுண்டு. ஒரு தொழிலும் அறியாதவன் ஒரு பள்ளிக்
கூடத்தை வைத்துப் பிழைக்கத் தலைப்படுதல் சமீபகாலம் வரையிலும்
வழக்கமாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.



இனி தற்கால ஆரம்பக் கல்வியின் நிலையினையும் நாம் சிறிது
எண்ணிப் பார்க்கவேண்டும். தற்கால ஆரம்பாசிரியர்களில் பெரும்
பாலார்க்குக் கல்வி போதிப்பதில் சிறிதும் உற்சாகமே இல்லை என்று
சொல்லலாம். நாம் ஆசிரியர்களைக் குறைகூறுவதில் பயன் இல்லை.
அவர்களின் நிலைமை மிக மிக இரங்கத் தக்கதாக இருக்கிறது. ஆரம்
பாசிரியர்களின் சேவை தேசத்திற்கு அத்தியாவசியம் என்று அரசாங்
கம் கருதவில்லை. ஜனசமூகமும் அவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்த
வில்லை. ஆரம்பாசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் 15 ரூ. சம்பளம்
அரிசி 6 படியாகவும் சோளம் 15 படியாகவும் விற்றகாலத்தில் ஒருவாறு
சரிக்கட்டி வந்தது. இதே பதினைந்து ரூபாயைக்கொண்டு அரிசி 1½
படியாகவும் சோளம் 2½ படியாகவும் விற்கப்படுகின்ற இந்தக் காலத்தில்
உபாத்தியாயர்கள் என்ன செய்ய முடியும். இரண்டு அல்லது மூன்று
பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு மாத காலத்திற்கு வீட்டு
வாடகை, உடைகள், உணவு இதர செலவுகள் ஆகியவற்றிற்குக் குறைந்த
பட்சமாக 45 ரூபாயாவது வேண்டும். ஆனால், உபாத்தியாயர்களுக்குச்
சர்க்காரிடமிருந்து மாதா மாதம் கிடைக்கின்ற 15 ரூபாயும் விலைவாசி
கள் அதிகரித்திருக்கின்ற இந்தக் காலத்தில் எந்த மூலைக்கும் போதாது.
இவ்வாறு தனது வயிற்றுக்கே போதாத வருமானத்தைப் பெற்றுக்
கொண்டிருக்கிற ஒரு உபாத்தியாயர் தன்னிடம் நம்பிக்கையாக
ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளுக்கு உற்சாகத்துடன் எப்படிக்
கற்பிக்கமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

யுத்த அலவன்ஸ் என்ற பெயரால் இப்பொழுது கொடுக்கப்படு
கிற இரண்டொரு ரூபாய்களால் ஆரம்ப ஆசிரியர்களின் நிலை உயர்ந்து
விட்டபோவதில்லை. ஆகவே தற்காலம் அவர்களுக்குக் கிடைக்கிற
ஊதியத்தைக்கொண்டு அவர்கள் கண்ணியமான வாழ்க்கை நடத்தமுடி
யாது. இரண்டு வருடங்களுக்குமுன் மூன்று அணாக்கள் வீதம் கூலி
பெற்ற உழைப்பாளிகளுக்கு இப்பொழுது 12 அணா முதல் ஒரு ரூபாய்
வரை தினசரிக் கூலி கிடைக்கிறது. ஆனால் ஆரம்பாசிரியர்களுக்கு
அன்றும் இன்றும் ஒரே ரீதியான கூலிதான் கிடைக்கிறது. அவர்களின்
நிலைமை பரிதாபம். அவர்களின் குடும்பங்கள் தத்தளிக்கின்றன.

வாழ்க்கைப் போராட்டம் எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டே
யிருக்கும். சிறுவர்களுடன் சதாகாலமும் பழகுவதைத் தவிர்த்து
ஆரம்பாசிரியர்கள் வேறு யாதொன்றும் அறியமுடியாது. வேண்டு
மானால், சிறுவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும், கல்வி அபிவிருத்திக்
காகவும் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்து
விட்டதாகப் பெருமையாக நினைத்துக்கொள்ளலாம். அதைத் தவிர்த்து
அவர்கள் அடையும் பலனும் சந்தோஷமும் யாதொன்றும் இல்லை.
பெரியோர்களுடன் சற்று நெருங்கிப் பழகக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்

கப்பெற்றவர்களும், நல்ல கண்ணியமான வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று விரும்புபவர்களும் ஆரம்பாசிரியர் தொழிலை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள் என்பதை நம்புகிறேன். அத்தகையவர்கள் சிறிது சிறிதாக வேறு ஏதேனும் தங்களுக்குத் தகுதியான சிறந்த தொழில் கிடைக்கும்பொழுது இதனை விட்டுவிடுவார்கள் என்பது திண்ணம்; ஒரு தொழிலுக்கும் இலாயக்கில்லாதவர்கள்தான் எதிர்காலத்தில் ஆசிரியர்களாய் இருப்பார்கள். இது இன்றையதினம் நாம் சாதாரணமாகக் கண்கூடாகக் காணக்கூடியதே. எமக்குத் தெரிந்த திறமையுள்ள உபாத்தியாயர்களில் சிலர் உபாத்திமைத் தொழிலை விட்டுவிட்டு வெவ்வேறு தொழில்களுக்குப் போய்விட்டார்கள். இன்னும் சிலர் இராணுவத்தில் சேவை செய்வதற்காகச் சென்றுவிட்டார்கள். சில ஆரம்பாசிரியர்களுக்குக் குடும்ப சொத்துக்கள் இருக்கின்றன. அவர்களைப்பற்றி யாரும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. உபாத்திமைத் தொழிலையே பெரிதும் நம்பி அதன்மூலம் காலங்கடத்த விரும்பும் ஆசிரியர்களைப்பற்றியே நாம் பெரிதும் கவலைப்படவேண்டியிருக்கிறது.


## நமது தாய் நாடு

ஆலயத்தைச் சுற்றி அங்கப் பிரதக்ஷணம் செய்யும் பக்தர் போன்று ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் பாரதத் தாயின் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அலைந்து திரிந்தார். அன்னையின் உடலிலும் உறுப்புக்களிலும் எங்கெங்கு என்ன கோளாறு உள்ளது என்று கண்டு கண்ணீர் உகுத்தார். பின்னர் அன்னையின் சோர்வை நீக்கி அவள் வலிமைபெற்று எழும்படி ஆசீர்வதித்தார். இந்த ஆசி மணிமொழிகள் நிறைந்தது இந்நூல்.

இரண்டாம் பதிப்பு. அழகிய வடிவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0

★

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர் :: சென்னை


# செய்தித் திரட்டு

## ஸ்ரீசாரதா பாடசாலை, மாம்பலம்

13—2—44-ல், பாடசாலை நிதிக்காக, மெகானிகல் எக்ஸ்பர்ட் ஸ்ரீ வைத்தியநாதய்யர் முன்னிலையில், பள்ளிக்கூட நாடகக் கழகத்தினர், ‘மங்கையர்க்கரசி’ என்னும் நாடகத்தை திறம்பட நடித்தனர்.

22—2—44-ல், சிவராத்திரியை முன்னிட்டு விசேஷ பஜனையும் பிரஸாத விநியோகமும் நடந்தன.

## ஆரம்ப ஆசிரியர்சங்கம், குன்றத்தூர்

19—2—44-ல், வட்டப் பரிசோதகர் ஸ்ரீ. வைத்தியநாதய்யர் தலைமையில், தண்டலம் மாணவ மணவிகளால் ஆசிரியர்கள் இயற்றிய, ‘உணவுப்பஞ்சத்தை ஒழிக்கும் வழி’, ‘அரக்கன் ஹிட்லரை ஒழிக்க அற்புத நடனம்’ முதலிய யுத்தப் பாடல்கள் பாடப்பட்டன. தலைவர் M. E. R-ல் உள்ள முக்கிய விஷயங்களை விளக்கி ஆசிரியர்கள் உயரிய எண்ணங்களுக்கு இடங்கொடுக்கவேண்டுமென்று கூறினர்.

## இந்துமதபாடசாலை, வாலாஜாபாத்

4—2—44-ல், புதுவயல் திரு. வயிரவன் செட்டியார் ரூ. 101-ம், சென்னை கெட்டிச்சாய வியாபாரம் திரு. குமாரசாமி ஐயரும் அவரது மனைவி சீதாலட்சுமி அம்மையாரும் 18—2—44-லில் ரூபாய் 101-ம், சென்னை விகம்லி கம்பனி திரு, எச். வி. சா அவர்கள் 23—2—44-ல் ரூ. 51-ம், காஞ்சி. திரு. காளத்தி முதலியார் ரூ. 101-ம், பெங்களூர் திரு. சீனிவாசலு ரூ. 50-ம், நன் கொடை அளித்தனர்.

## போர்டு இந்து ஆண்பாடசாலை, ஆலங்காயம்

17—3—44-ல், மெடிகல் ஆபீஸர் தலைமையில் செஞ்சிலுவைச் சங்கம் நிறுவப்பட்டது. மாணவ மாணவிகளால் சிறு டிராமா நடிக்கப் பட்டது. இச்சங்கத்தின் நோக்கத்தைப்பற்றியும் விருத்தி செய்ய வேண்டியதைப்பற்றியும் அதன் நன்மைகளைப்பற்றியும் பலர் பேசினர்.

## ஆசிரிய மானேஜர் யூனியன்; நெல்லிக்குப்பம்

27—2—44-ல், ஸ்ரீ ஜயராமசந்திர அய்யர் தலைமையில் கூடி, நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின், (1)-1—11—43 முதல் பஞ்சப் படியை ரூ. 3 ஆக உயர்த்தியதற்காக சர்க்காருக்கு நன்றி செலுத்துவதுடன், வரவர கஷ்டம் அதிகரிப்பதால், மற்ற சிப்பந்திகளுக்குப் போல் பஞ்சப்படி கொடுத்துதவும்படியும், (2) யுத்தம் முடியும் வரையில், நகரம் கிராமம் என்ற வித்தியாசமில்லாமல் ஸ்டேஷனரியும், வீட்டு வாடகையும் கொடுத்துதவும்படியும் தீர்மானிக்கப்பட்டன.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், சங்கராபுரம்

27-2-44 ல், வக்கீல் ஸ்ரீ தாத்தாச்சாரியார் தலைமையில் பெற்றோர் சங்க ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுந்தரேசய்யர் ‘பெற்றோர்கள் ஒத்துழைப்பு’ என்பது பற்றியும், ஸ்ரீ லக்ஷ்மி

காந்தம் ஐயர் 'பெண் கல்வி' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். பிறகு பந்தய விளையாட்டுகளும் பரிசு வழங்கலும் நடைபெற்றன.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், சாத்தாம்பாடி

26—2—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுப்ரமணிய அய்யர் தலைமையில் கூடிற்று. தேசீயப் போர்முனை அமைப்பாளர் ஸ்ரீ. கோவிந்தராஜு நாயுடு, யுத்த நிலைமையை விளக்கியும் ஆரம்ப ஆசிரியர்கள் யுத்தத்திற்கு எவ்வாறு உதவலாம் என்பது பற்றியும் விளக்கிக் கூறினார்.

---

### டவுன் ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்

22—1—44-ல், ஸ்ரீ ராமதாஸ் ராவ் தலைமையில் கூடிற்று, திரு. கிருஷ்ணராவ் பான்ஸ்லே, திரு எம். எஸ். சுந்தரேசுவர அய்யர் ஆகியவர்கள் இறைவனடி எய்தமைக்கு வருந்தி அன்னார்களுடைய ஆத்மா சாந்தியடைய சில நிமிடங்கள் மௌனப் பிரார்த்தனை செய்யப்பட்டது. பின்பு இவ்வாண்டிற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

### ஸ்ரீ ராமா ஆரம்ப பாடசாலை, கும்பகோணம்

12—3—44-ல், ஸ்ரீ பாட்ராச்சாரியார் தலைமையில் பந்தய விளையாட்டுப் போட்டி விழா நடைபெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஜில்லா கல்வி அதிகாரியும், ரேஞ்சு கல்வி அதிகாரிகளும் விஜயம் செய்து விழாவைப் பரிமளிக்கச் செய்தனர்.

---

### அம்மன்கோவில் ஆரம்ப பாடசாலை, கும்பகோணம்

27—2—44-ல், ஸ்ரீ அமிர்தலிங்க முதலியார் தலைமையில் முதலாவது பந்தய விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் நடத்திவைத்தார். பெற்றோர்களின் உதவியினால் ரூ. 75 பெறுமான பரிசுகள் வழங்கப்பட்டன.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், அறந்தாங்கி

20—2—44-ல், ஒரு பொதுக்கூட்டம் திரு. முத்து நாயுடு தலைமையில் நடைபெற்றது. ஏராளமான ஜனங்கள் கூடி இருந்தனர். உதவி ஜில்லா கல்வியதிகாரி திரு. சாமிக்கண்ணு 'யுத்தமும் நமது கடமையும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

---

### முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன், கரூர்

26—2—44-ல், ஆரம்ப பாடசாலைகளின் போட்டிப் பந்தயவிழா, முனிசிபல் கமிஷனர் திரு. கோவிந்தமேனன் தலைமையில் கொண்டாடப்பட்டது. முனிசிபல் சேர்மன் திரு. மாரியப்ப முதலியார் பரிசுகள் வழங்கினார். இது தவிர இரண்டு சுற்றும் ஷீல்டுகளும் பரிசளிக்கப்பட்டன.

---

### போர்டு எலிமெண்டரி பாடசாலை, ந. புதூர்

26—3—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வைத்தியநாதஸ்வாமி அய்யர் தலைமையில், சிறுவர் செஞ்சிலுவைச்சங்கத் திறப்பு விழாவும், பெற்றோர் சங்கக்கூட்டமும் நடைபெற்றன. தலைவர் இச்சங்கத்தின்



நோக்கத்தைப்பற்றியும், மாணவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் முயற்சியைப்பற்றியும் வியந்துபேசி, இச்சங்கத்தைத் திறந்துவைத்தார். பின்பு, ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கணபதி அய்யர் 'சுகாதாரம்' என்பதுபற்றியும், தலைமை ஆசிரியர் ஸ்ரீ குப்புசாமி அய்யர் 'பெற்றோரும் ஆசிரியரும்' என்பதுபற்றியும், அட்வகேட் ஸ்ரீ முத்துராமலிங்கம் 'யுத்தமும் நமது கடமையும்' என்பதுபற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். பின்பு, தலைமை ஆசிரியர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அய்யர் எல்லாருக்கும் வந்தனோபசாரம் கூறினார்.

---

### ஏ. ஆர். என். உயர்தர ஆரம்ப பாடசாலை, சிவகங்கை

27—2—44-ல், ஆறுவது வருஷாந்தரக் கொண்டாட்டம், ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ கணேசமூர்த்தி தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது, வக்கீல் ஸ்ரீ கற்பூரசுந்தர பாண்டியன் 'பாடசாலைகளும் பெற்றோர் கடமையும்' என்பதுபற்றியும், உதவி ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ வடிவேல் பிள்ளை 'மாணவர்களும் அவர்கள் நடத்தையும்' என்பது பற்றியும் பேசினார்கள். மாணவ மாணவிகளால் கதம்பக் கச்சேரியும், பிரபாவதி என்ற நாடகமும் நடைபெற்றன.

---

### ஆர். சி. உயர்தர ஆரம்ப பாடசாலை, சருகணி

2—3—44-ல், பெற்றோர் சங்கமும் மாணவர் கல்விக்கழக ஆண்டு விழாவும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மகம்மது ஹபீப் தலைமையில் நடைபெற்றன. மாணவர்களால் சம்பாஷணை, அபிநயப்பாட்டுகள் முதலியன நடைபெற்றன. தலைவர் பெற்றோர் கடமை, யுத்ததில் இந்திய மக்களின் உழைப்பு, என்பனபற்றிப் பேசினார்.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஆழ்வார்திருநகரி

19—2—44-ல், வருஷாந்திர விழா, டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மானந்தியப்பன் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ராமச்சந்திரப்பிள்ளை சென்ற ஒரு வருஷத்தில் ஏற்பட்டுள்ள யுத்தமுனைச் செய்திகளைப்பற்றிக் கூறினார்.

---

### போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, பெத்தநாயக்கன்பாளையம்

14—3—44-ல், ஜில்லா போர்டு தலைவரும், சாரணீய சங்க கமிஷனருமான ஸ்ரீ நாச்சியப்ப கவுண்டர் தலைமையில் ஸ்கௌட்ராலி நடைபெற்றது. சாரணீய இயக்கத்தின் நன்மைகளைப்பற்றிப் பலர் பிரசங்கம் செய்தனர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணராவ் எல்லாருக்கும் வந்தனோபசாரம் கூறினார். ஜில்லா சாரண சங்க கௌன்ஸிலர் ஸ்ரீ மத்ராயகவுண்டர் எல்லாருக்கும் தேநீர் விருந்தும் உண்டியும் அளித்தனர்.

---

### ஹிந்து உயர்தர ஆரம்ப பாடசாலை, சத்தியமங்கலம்

23—2—44-ல், பெற்றோர் சங்க ஆண்டுவிழா ஸ்ரீ கிருஷ்ண செட்டியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன. தமிழாசிரியர் ஸ்ரீ சுப்ரமணியம் 'தமிழின் சிறப்பு' என்பதுபற்றிப் பேசினார். பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், பள்ளிபாளையம்

26—2—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஹரிஹர அய்யர் தலைமையில் கூடிற்று. சாரணப்பயிற்சி, ரோவர்படை, அவரை வளர்ச்சி, முதலிய விஷயங்கள்பற்றிப் பலர் பேசினர். தலைவர் யுத்தமுயற்சி, புதிய சிலபஸ் படி பாடங்கள் போதித்தல், முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

---

### ஸ்ரீ சரஸ்வதி பாடசாலை, செளியூர்

26—2—44-ல், ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ ராமன் மேனன் தலைமையில், பெற்றோர் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்பொழுது, சாரதாமில்ஸ் சொந்தக்காரர் ஸ்ரீ செங்கோட்டையா பாடசாலையின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார். பலர் அரிய விஷயங்கள்பற்றி உபந்நியசித்தனர்.

---

### போர்டுபாடசாலை, அன்னூர்

17—3—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள், தற்கால யுத்த நிலைமையைப்பற்றியும், நேஷனல் சேவிங் ஸர்டிபிகேட்டுகளை வாங்கும்படியும், யுத்த முயற்சியில் ஈடுபடும்படியும் மாணவர்களுக்கு விரித்துரைத்தார்.



## ஸ்ரீ முருகன் பாம்

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய குடும்பத் தோழன்!

கோடைக் கொப்பளம், சொறி, சிரங்கு, கரப்பான், வெட்டுக் காயம், சேத்துப்புண், பரு முதலிய சர்ம வியாதிகளுக்கு, இஞ்ஜெக்ஷன், ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்தும் கைகண்ட ஒளஷதம். இம்மருந்துப் பவுடரை தேங்காய் எண்ணெயிலாவது, வாசலினிலாவது குழைத்து புண் உள்ள இடங்களில் நன்றாகத் தடவி ஒரு மணி ஊரவிட்டு சீக்காய் அல்லது சோப் போட்டு நன்றாக சுத்தம் செய்து வந்தால் ஒரு வாரத்திற்குள் ஆச்சரியகரமாக குணப்படுத்திவிடுகிறது நிச்சயம். சிறு குழந்தை முதல் வயோதிகர் வரை யாவரும் உபயோகிக்கலாம். (மேலுக்கு மட்டும் உபயோகப்படுத்தவும்.)

ஒரு அவுன்ஸ் விலை ரூ. 0—8—0 (தபால் செலவு வேறு)

: மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**S. NARAYANASWAMY, M. P. S. (India)**

**Chemist, No. 24, Parthasarathiswami Street, TRIPLICANE, MADRAS.**

# பத்திராதிபர் குறிப்பு

---

## சென்னை பட்ஜெட்டும் ஆரம்பக்கல்வியும்

1944-45ம் ஆண்டுக்குறிய வரவுசெலவு திட்டம் சிலநாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி நமது மாகாணத்தின் மொத்த வருமானம் சுமார் 30 கோடி ரூபாயாகும். செலவு திட்டப்படி ரூ. 77000 மிச்சம் இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட இருக்கிறது. சுமார் 5½ கோடி ரூபாய் யுத்தத்திற்கு பிற்கால நிர்மாணவேலைக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. போர்முடிந்தபின் வருமான அளவு குறையக்கூடும். நிர்மாண வேலைக்குப்போதுமான பணம் அவசியமாகும். ஆரம்பக்கல்விக்காக, உதவிபெரும்பள்ளிக்கூடம் ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி மாதம் ரூ. 1 அதிகமாகக் கொடுக்க பணம் ஒதுக்கிவைத்துள்ளது. இதனால் ஆரம்ப ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 4 ஏப்ரல் 1௳ யிலிருந்து கிடைக்கும். இது ஆசிரியர்களுக்கு ஒருபால் சந்தோஷம் உண்டாக்கும். கல்வி முன்னேற்றம் அடையாத பிரதேசங்களில், ஸ்தல ஸ்தாபனங்கள் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதற்காக அவைகளுக்கு விஷேச மானியங்கள் அளிக்கவும் 4 லக்ஷரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இவ்விடங்களில் உதவிபெரும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது கடினம் என்பதையும் உணர்ந்து, இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கு போதுமான பணமில்லை யென்பதையும் நமது கவர்ன்மெண்டார் உணர்ந்துள்ளது கவனிக்கத்தக்கது. எனவே இந்தமான்யங்களை பொதுமக்கள் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் உதவிபெறும் பள்ளிக்கூடத்தில் வேலைசெய்யும் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளங்களை சீர்படுத்த ஓர் ஏற்பாட்டையும் பட்ஜெட்டில் காணமுடியவில்லை. பஞ்சப்படியை ரூ. 1 உயர்த்துவதினால் ஆசிரியர்களின் கஷ்டம் தீராது. அவர்களின் மாதச் சம்பளத்தை போர்டு பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பள அளவுக்காகவாவது உயர்த்தவேண்டும். அவ்வாறு உயர்த்த இக்காலத்தில் முடியும். அப்படி அதிகப்படுத்துவதினால் வருஷத்திற்கு ரூ. 50 லக்ஷம் அதிகமாகும். 5½ கோடி ரூபாய் போருக்குப்பின் நிர்மாண வேலைக்காக ஒதுக்கி வைக்கக்கூடிய இக்காலத்தில் 40 லக்ஷ ரூபாய் ஆரம்பக் கல்விக்கு அதிகமாக ஒதுக்கி வைக்க முடியாது என்று சொல்வது ஏற்றுக்கொள்ளத்தகதாயில்லை. தவிர நிர்மாண வேலைக்கு அடிப்படையாயுள்ளது கல்வியேயாகும். இக்காலத்திலுள்ள மாணவர்களின் கல்வியை சிறப்புடன் கவனித்து வந்தால்தான் நிர்மாண வேலை எளிதாகவும் பயன்படக் கூடியதாயும் இருக்கும். சம்பளம் மிகக் குறைவாயிருப்பதால் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டம். தவிர, இச்சம்பளக்குறைவு காரணத்தினாலேயே பல ஆரம்ப ஆசிரியர்கள் தங்கள் தொழிலை விட்டு விட்டு ராணுவ சேவையை நாடிச் செல்லுகின்றார்கள். இதனால் பல பள்ளிக்கூடங்களில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. வரும் புதிய வருஷத்தில் ஆசிரியரில்லாக் கஷ்டம் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, நிர்மாண வேலைக்கு ஆரம்பக் கல்வியை முக்கியமானதாகக் கருதி, உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வேலைசெய்யும் ஆரம்ப ஆசிரியர்களுக்காக அளித்துவரும் மான்ய விகிதத்தை அதிகப்படுத்தும்படி துரைத்தனத்தாரை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

---

*Prepared in accordance with the New Syllabus*

**Our Books for Elementary and Higher Elementary Schools**

## நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் : N. பரமசிவ அய்யர், B.A.,L.T.

*Headmaster, T. A. High School, Tiruvidamarudur*

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதற் வகுப்பு) | 0 | 3 | 3 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 0 | 4 | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 0 | 5 | 6 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 0 | 6 | 6 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 0 | 7 | 6 |

## இந்துதேச சரித்திரக் கதைகள்

ஆசிரியர் : S. திருவேங்கடாசாரியார், M.A.,L.T.

*History Assistant, Ramakrishna High School, Thyagarayanagar*

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 0 | 3 | 9 |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 0 | 5 | 6 |
| மூன்றும் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 0 | 7 | 6 |

## THE HISTORY OF OUR COUNTRY
(நமது தேச சரித்திரம்)

By

S. THIRUVENKATACHARI, M.A., L.T.

*History Assistant, Sri Ramakrishna High School, Thyagarayanagar*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Book I | (6th Class) | As. | 0 | 9 | 0 |
| Book II | (7th Class) | As. | 0 | 11 | 3 |
| Book III | (8th Class) | As. | 0 | 12 | 6 |

Planned well and prepared on the lines of the latest departmental syllabus, this series of text-books of Indian History must eminently suit the needs of lower forms of our schools. The paragraph headings, the hints at the beginning of every lesson and the important dates at the end must help the pupil. The illustrations and maps are apt and sufficient.....

—*The Hindu*

## THE NEW METHOD ELEMENTARY MATHEMATICS
(புதுமுறை கணிதம்)

By

M. S. SUNDARESWARAN, M.A., L.T.

*Retired Headmaster, Wardha Training School, Coimbatore*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Book I | (6th Class) | As. | 0 | 12 | 6 |
| Book II | (7th Class) | As. | 0 | 15 | 0 |
| Book III | (8th Class) | As. | 0 | 15 | 3 |

These books are written in simple style and contain variety of exercises with examples. Maps and diagrams are given in plenty.

B. G. PAUL & CO., Educational Publishers

4, Francis Joseph Street, MADRAS.



145698



S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

520, High Road, Triplicane, Madras.

## ஒவ்வொரு உபாத்தியாயரும் சேர வேண்டிய நிதி

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... ... | ரூ. 2,90,000 |
| பாலிஸிக்கள் | ... ... | 1,620 |
| யூனிட்டுகள் | ... ... | 3,125 |

★

**ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்**

கொடுக்கப்பட்டிருக்கிறது

★

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

*Regd. No. M. 3473*




Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St. Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 520, High Road, Triplicane Madras